# திருக்கோயில்

ஏப்ரல் 1981 ரூ. 1-25



இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு




பழநி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலுக்கு, இரண்டாவது மின் இழுவை இரயில், போக்குவரத்துத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. *க. முத்துசாமி* அவர்களால் வழங்கப்பட்டு, ஆணையர் திரு. *யு. சுப்ரமணியன்*, ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு *இராம. வீரப்பன்* அவர்களால், 14-3-81 அன்று தொடங்கி வைக்கப் பெற்றது.



மேற்படி கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் திருமதி. டாக்டர். *இராதா தியாகராஜன்*, எம்.ஏ.,பி.எச்.டி. அவர்கள், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு *இராம. வீரப்பன்* அவர்களுக்கு, இரண்டாவது மின் இழுவை இரயிலின் மாதிரிச் சின்னத்தினை வழங்குதல்.

முகப்பு

கும்பகோணம்
அருள்மிகு இராமசாமி கோயிலில் உள்ள
அருள்மிகு பூவராக சுவாமியின்
அழகிய சிறந்த சிற்பம்.

# திருக்கோயில்

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

மாலை : 23 | திருவள்ளுவர் ஆண்டு 2012, துன்மதி ஆண்டு — சித்திரை [ஏப்ரல் 1981] | மணி : 7

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

**திருக்கோயில்** திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

**ஆணையர் அவர்கள்,**
**அறநிலைய ஆட்சித்துறை,**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப்படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ.25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப்பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

**நல்லவர்களைத் தந்த நல்லதொரு நிறுவனம்**
—மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள்

**சீவக சிந்தாமணி**
கலைமாமணி—திரு நாரண துரைக்கண்ணன் அவர்கள்

**போக சித்தர்**
—டாக்டர் திரு அ. மா. பரிமணம், எம்.ஏ., பி.எச்.டி.,

**பழநிப் பரமன்**
—திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

**முருகனும் சம்பந்தரும்**
—'வாகீச கலாநிதி' திரு. கி. வா. ஜகந்நாதன், எம்.ஏ.,

**திருமுருகாற்றுப்படை**
—ந.ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

**எம்பெருமானும் எம்பெருமானாரும்**
—திரு. வேணுகோபால் நாயகர், பி.ஏ.,பி.எல்.,

**அமுதப்புனல்**
—திரு கா. அ. ச. ரகுநாயகன்,எம்.ஏ.,

**அன்புநெறி**
—திரு ஆர். சதாசிவம், பி.ஏ., எம்.எல்.

**''அடியேனையும் தாங்குதல்''**
—திரு மு. அருணாசலம்

**மனத்தளர்ச்சி**
'மருத்துவப் பேரறிஞர்' திரு டாக்டர்
—இரத்தினவேல்சுப்பிரமணியம், பி.எஸ்ஸி.,எம்.டி., எப். ஆர். ஸி.பி.,எப். ஸி.ஸி.பி., எம்.ஏ.எம்.எஸ்

**வடலூர் இராமலிங்க வள்ளலார்**
—திரு கவிஞர் மனசை ப. கீரன், பி.ஏ.,பி.டி.,

**திருவள்ளுவர் சிறந்த பொருளியல் சிந்தனையாளர்**
—டாக்டர் திரு பா. நடராஜன், எம்.ஏ.,டி.லிட்.,

**அருள்மிகு அதர்வண பத்ரகாளி பிரதியங்கிரா தேவிதுதி**
—திருமதி சௌந்தரா கைலாசம் அம்மையார் அவர்கள்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# நல்லவர்களைத் தந்த நல்லதொரு நிறுவனம்

*மாண்புமிகு* திரு. எம். ஜி. இராமச்சந்திரன் *அவர்கள்,*

தமிழ்நாடு முதலமைச்சர்

*[சென்னை, மயிலாப்பூரில் உள்ள இராமகிருஷ்ணமிஷன் மாணவர் இல்லம், தனது 75-ஆவது ஆண்டு நிறைவு விழாவாகிய முத்து விழாவை, 1981 பிப்ரவரி 13 முதல் 16தேதி வரை விமரிசையாகக் கொண்டாடியது. தமிழக முதல்வர், மாண்புமிகு எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் 16ஆம் தேதி நிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகித்துச் சிறப்புரை வழங்கினார்கள். அவரது உரையின் சுருக்கம் இங்கே வெளியிடப்படுகிறது]*

அன்பிற்கும் மரியாதைக்கும் வணக்கத்திற்கும் உரிய இராமகிருஷ்ண மடத்தின் தவத்திரு துறவியர்களே! என்றும் நான் போற்றிப் பெருமைப்படுகின்ற அளவிற்கு என் உள்ளத்திலே இடம் பெற்றிருக்கும் கி.வா.ஜ. அவர்களே! உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி கைலாசம் அவர்களே!

இந்த இராமகிருஷ்ண மிஷனின் மாணவர் இல்லத்திலே படித்து நாட்டிற்கு நல்ல பல பணிகளைச் செய்துகொண்டிருக்கின்ற முன்னாள் மர்ணவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! இளஞ்சிறார்களே! என் ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புக்களே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் காணிக்கையாக்கிக் கொள்கின்றேன்.

இராமகிருஷ்ண மிஷனால் நடத்தப்பெறும் இந்தக் கல்விநிலையம் கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளாக அமைதியான முறையில் சீரிய பணியினை ஆற்றியிருக்கிறது. ஆன்மிகத் தொண்டும் பொதுநலத்தொண்டும் இரண்டு கண்கள் போல இராமகிருஷ்ண மிஷனுக்கு விளங்கி வருகின்றன, என்பதைத் தற்கால இந்திய வரலாற்றை அறிந்தவர்கள் நன்கு உணர்ந்திருப்பார்கள்.

இராமகிருஷ்ணரையும் விவேகாநந்தரையும் நடுநாயகமாகக் கொண்டு இயங்கிவரும் இந்த நிறுவனம் இப்போது முத்துவிழாவைக் கொண்டாடுகிறது. இந்த நிறுவனத்தின் விழாவிற்குத் தலைமைதாங்கி நான் என்ன கூறுவது என்றும், என் தகுதிக்கும் அதற்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா என்றும் எண்ணிப்பார்க்கிறேன். இந்த முத்துவிழா நன்னாளில்தலைமை தாங்கவேண்டும் என்று நானாக விரும்பியவன் அல்ல. ஏதோ உங்களுடைய அன்பினால் கட்டுப்பட்டே இப்போது என்னுடைய பேச்சை நான் தொடங்குகிறேன்.

உண்மையிலேயே நான் அவையடக்கத்திற்காக அல்ல, என்னுடைய உள்ளத்திலே இருக்கின்ற உணர்வுகளை எடுத்துச் சொல்கிறேன்; தமிழைக் குறித்தும் இந்த நிறுவனத்தைக் குறித்தும் ஆராய்ச்சி செய்து விளக்கம் தரும் தகுதி படைத்தவர்கள் மத்தியில் தலைமை வகித்து, அவர்கள் பேச்சுக்களுக்குத் திறனாய்வு செய்வது என்பது எவ்வளவு விபரீதமானது என்பதை நான் உணர்ந்தே இருக்கிறேன். எனினும் எனது பொறுப்பைத் தட்டிக் கழித்து விட்டுக் கொடுக்காமலும், கடமையைச் செய்ய வேண்டும் என்ற பொறுப்பு உணர்வோடும், என் பணியை இப்போது நான் மேற்கொள்ளுகிறேன்.

முத்துவிழாக் கொண்டாடும் இந்த நிறுவனத்தை இத்தனை ஆண்டுகளாகக் கட்டிக் காத்து இதற்கென்று ஒரு தனி நல்ல பெயரை; அந்த நல்ல பெயர் என்பதற்குக் கீழே கோடிட்டுக் கொள்ளவேண்டும்; அந்த நல்ல பெயரைக் கொஞ்சமும்கூட மாசு மறுவில்லாமல், எந்தத் தூசுகளும் ஒட்டிக் கொள்ளாமல் காப்பாற்றி வருகிறவர்களை, நாம் வணங்கிப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

எவ்வளவு எச்சரிக்கையாக இருந்தாலும் இப்படிப்பட்ட பள்ளிகளைத் தொடர்ந்து நடத்துவது என்பது மிகவும் சிரமமான காரியம். இத்தகைய நிறுவனங்களை நிர்வகிப்பவர்கள் எவ்வளவோ பெரிய பெரிய தியாகங்களைச் செய்தாக வேண்டும். இங்கே இருக்கின்ற இளஞ்சிறார்களையெல்லாம் ஒரே உணர்வுக்குக் கொண்டுவந்து, கட்டுப்பாட்டோடும் கடமை உணர்வுகளோடும் வாழ்வது எப்படி என்பதைக் கற்றுத் தருகின்ற பெரியோர்களைப் பாராட்ட, நாம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த இல்லம் ஏழைச் சிறார்களுக்கு இளமையிலேயே நல்ல கல்வியைக் கற்றுக் கொடுத்து, எதிர்காலத்திற்கு உகந்த நல்ல குடிமக்களை உருவாக்கித் தருகின்ற பணியினை மேற்கொண்டிருக்கிறது. பெருமைக்குரிய அந்

தப் பணியை ஆற்றிய, ஆற்றி வருகிற, இனியும் எதிர்காலத்தில் ஆற்றப்போகிற அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

''நாங்கள் இந்த நிறுவனங்களை நடத்துவதற்கு எவ்வளவோ பெரிய பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். எங்களைத் தொடர்ந்து இந்தப் பணிகளைச் செய்ய இந்த நிறுவனத்திலிருந்து படித்த மாணவர் எவரும் முன்வர வில்லையே! தனது எழுபத்தைந்தாவது நிறைவு விழாவினை இந்தக் கல்வி நிறுவனம் கொண்டாடுகிறது. ஆனால் இந்த நிறுவனத்தைத் தொடர்ந்து நடத்தக் கூடியவராக இதே நிறுவனத்தில் படித்த மாணவர் ஒருவர்கூட உருவாகவில்லையே'' என்ற கருத்துக்களை, எனக்கு முன்பு இப்போது இங்கே பேசிய சுவாமி சர்வக்ஞானனந்த அடிகளார் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் அந்தக் கருத்துக்களைக் கொஞ்சம் வேதனையோடேயே குறிப்பிட்டார்கள். அவர்கள் அவற்றைச் சொல்லும்போது, அவர்களுக்கு இருக்கும் மனவருத்தத்தை நானும் உணர்ந்தேன்.

மயிலாப்பூரில் இயங்கிவரும் இந்த இராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்லத்தை மேலும் தொடர்ந்து நடத்துவதற்கு, இதுபோன்ற காரியங்களைச் செய்வதற்கு, தகுந்தவர்கள் உருவாகவில்லையே என்பதில் சுவாமி சர்வக்ஞானந்தருக்கு ஏக்கம் இருக்கிறது என்பதை என்னால் உணர முடிந்தது. ஆனால் இங்கே நான் பணிவோடு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

சுவாமி சர்வக்ஞானனந்தரைப் போன்றவர்கள் துறவியராக இருந்து பல அரிய வேலைகளை, பணிகளை, கடமைகளைச் செய்து வருகிறார்கள். அவர்களைப் போல இந்த மாணவர் இல்லத்திலே பயின்ற மாணவர்கள் அவ்வளவுபெரும் துறவியராக மாறி, சர்வக்ஞானனந்த அடிகளார் குறிப்பிட்ட பணிகளைச் செய்யவில்லை என்பது உண்மைதான். ஆனால் இந்த மாணவர் இல்லத்திலே படித்த மாணவர்களிலே ஒரு சிலரை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவ்விதம் சில மாணவர்களைப் பற்றி நாம் நினைத்துப் பார்ப்போமேயானல், சர்வக்ஞானனந்த அடிகளார் அவர்கள் நிச்சயம் பெருமைப்படுவார்கள் என்று நான் எண்ணுகிறேன்.

இந்த மாணவர் இல்லத்தில் பயின்ற மகாதேவன் அவர்கள், இந்திய ராணுவத்திலே மேஜர் ஜெனரலாகப் பதவி வகித்தார். இப்போது அவர் சர்வீஸ் கமிஷனின் சேர்மனாக இருந்து வருகிறார். அவர் இந்த மாணவர் இல்லத்தில் படித்துவிட்டுச் சென்று தம் குடும்பத்திற்குப் பணம் சேர்ப்பதற்கென்று வாழாமல், நம் நாட்டின் சுதந்திரத்தைக் காக்கும் தியாகமும் திறமையும் மிக்க ஓர் இராணுவ தளபதியாக விளங்கினார். இந்த நாட்டின் சுதந்திரம் பாதுகாக்கப்பட்டால்தான், இந்தியக் குடிமக்களாகிய நாம் ஒவ்வொருவரும் நமக்கென்று அமைந்த பணிகளைச் செம்மையாக, அமைதியாக, நிம்மதியான சூழ்நிலையில் நிறைவேற்ற முடியும் என்பதற்கு நான் உதாரணம் தரவேண்டிய அவசியமில்லை.

மேஜர் ஜெனரல் மகாதேவன் அவர்கள் நம் நாட்டின் சுதந்திரம் ஒன்றையே உயிர்மூச்சாக எண்ணி அதற்காகவே பாடுபட்டார். அது மட்டுமல்ல, எல்லாவிதத்திலும் ஒழுக்க சீலராக அவர் இருந்திருக்கிறார் என்பதிலே நாம் எல்லோருமே பெருமையும் பூரிப்பும் கொள்கிறோம். ''அப்படியானால் இராணுவத்திலே இருக்கின்றவர்கள் ஒழுக்கசீலராக இல்லையா?'' என்று நாளையதினமே பத்திரிகைகளில் கேள்வி எழலாம். ''இராணுவத்தில் உள்ளவர்களை எல்லாம் எம்.ஜி.ஆர். அவமானப்படுத்திப் பேசிவிட்டார்'' என்றுகூடப் பத்திரிகையில் செய்தியாகப் போட்டுவிடுவார்கள். ஆனால் ஒன்று சொல்லுகிறேன். சிகரெட், பீடி, மது, மாமிசம் அருந்தாமல் இராணுவத்தில் இருப்பவர்கள் மிகவும் அரிது. எனவேதான் சிகரெட், பீடி மது, மாமிசம் அருந்தாத மகாதேவனை ஒழுக்க சீலர் என்று குறிப்பிட்டேன்.

சுற்றிலும் பனிக்கட்டிகளே நிறைந்த நிலையில், குளிர் தாங்கமாட்டாமல் உடல் விறைத்துப் போகிற சூழ்நிலையில், இராணுவ வீரர்கள் பணியாற்ற வேண்டியுள்ளது. அத்தகைய சூழ்நிலையில் உடலை ஒழுங்குபடுத்திக் கொள்ளவும், துணிச்சலை ஏற்படுத்திக்கொள்ளவும் மது, மாமிசம், பீடி, சிகரெட் இவையெல்லாம் தான் உதவ வேண்டும் என்ற நம்பிக்கையும், அவற்றைப் பயன்படுத்துவதும் தவறல்ல, அவை தேவையானவையே என்ற சுற்றுச் சார்பிலும், மகாதேவன் இராணுவத்தில் பணிபுரிந்துள்ளார். எனினும் அவர் ''அவற்றையெல்லாம் பயன்படுத்தாமலேயே இராணுவத்தில் நான் வாழ்ந்து காட்ட முடியும், என் கடமையைச் செய்யமுடியும், பதக்கங்களையும் வீரப் பட்டயங்களையும் பெறமுடியும், சாதாரணச் சிப்பாயாக இருந்து மேஜர் ஜெனரலாக இருக்கின்ற தகுதியை நான் வெளிக்காட்ட முடியும்'' என்றெல்லாம் நிரூபித்துவிட்டார். இதைச் செய்தவர் யார் என்ற கேள்விக்கு நமக்குக் கிடைக்கின்ற பதில், இந்த இராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்லத்திலேயே பயின்ற ஒரு மாணவர் என்பதாக இருக்கிறது.

இவ்விதம் இருக்கும்போது இதைவிட ஒரு கடமை உணர்வு, இதைவிட ஒரு பெருமை, நாட்டுக்குத் தொண்டு செய்கின்ற பெரும்பேறு வாய்ப்பது அரிது என்பதை நான் கூறிக் கொள்ளவிரும்புகிறேன். மேஜர் ஜெனரல் மகாதேவன் அவர்களைப்போல, இந்த மாணவர் இல்லத்திலே பயின்ற மற்றொருவரையும் நான் இங்கேகுறிப்பிடவேண்டும்.

சுப்ரீம்கோர்ட் எனப்படும் உச்ச நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்து ஓய்வுபெற்றுள்ள எனது வணக்கத்திற்கும் மரியாதைக்கும் உரிய உயர்திரு பி.எஸ். கைலாசம் அவர்கள், இதே மாணவர் இல்லத்தில் கல்வி பயின்றவர். அவர்கள் இந்தப் பள்ளியிலே படித்து நீதிமன்றத்தில் இருந்து நீதியைத் தந்தார்கள். டில்லி மாநகர் சென்று நீதிபதியாக இருந்து பணிபுரிந்தார்கள்.

அரிய பல ஆன்மிக நூல்களைத் தமிழில் தந்திருக்கும் மதிப்பிற்குரிய 'அண்ணா' சுப்ரமணிய ஐயர் அவர்கள், இதே மாணவர் இல்லத்தில் கல்விகற்ற மாணவரே ஆவார். ரிசர்வ் பாங்கின் கவர்னராக இருந்த ஜனார்த்தனம் அவர்கள், இந்த மாணவர் இல்லத்தில் படித்தவர்தாம். ரூபாய் நோட்டுகளில் 'கவர்னர்' என்ற இடத்தில் 'ஜனார்த்தனம்' என்ற அவரது கையெழுத்தை உங்களிலே பலரும் கவனித்திருக்கக்கூடும். சென்னைப் பல்கலைக் கழகத்தில் தத்துவத்துறையில் தலைவராக இருந்த பேராசிரியர் டாக்டர் டி.எம்.பி. மகாதேவன் அவர்களும் இந்த மாணவர் இல்லத்திலே படித்தவர். அவர் தத்துவத்துறையில் ஆற்றின தொண்டு மகத்தானது என்பது ஒருபோதும் மிகையாகாது. தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்தின் ஆணையராக இருந்தஎம்.கே. பாலசுப்பிரமணியம் ,ஐ.ஏ.எஸ்., அவர்களும் இந்த மாணவர் இல்லத்தின் பழைய மாணவரே ஆவார்.

இந்த மாணவர் இல்லத்தால் பலர் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை விளக்குவதற்கு, நினைவுப்படுத்திக் கொள்வதற்கு, ஒரு சிலரை மட்டும் நான் இங்கே உதாரணமாகக் குறிப்பிட்டேன். இந்த மாணவர் இல்லத்திலே கல்வி பெற்ற பலரும் பலவேறு துறைகளில் நாட்டிற்குத் தொண்டாற்றினார்கள், இப்போதும் தொண்டாற்றி வருகிறார்கள் என்பதைத் துறவியர்களுக்கு நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இப்படிச் சொல்லும்போது, இந்த ரீதியில் நினைத்துப் பார்க்கும்போது, துறவிகளாகிய உங்களுடைய ஏக்கம் இப்போது தீர்ந்திருக்கும், இப்போது உங்களுக்கு ஏக்கம் இருக்காது என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

இப்படி நல்லவர்களைத் தந்த நல்லதொரு நிறுவனமாக, இராமகிருஷ்ண மிஷனின் இந்த மாணவர் இல்லம் இருப்பது, எனக்கும் பொறாமையாகத்தான் இருக்கிறது. சிறுவயதில் நான் இங்கே படிக்கும் பாக்கியத்தைப் பெற்றிருந்திருப்பேனேயானால், இதையே நானும் பெருமிதத்தோடு சொல்லியிருப்பேன். அதாவது 'இந்தத் தமிழ்நாட்டின் முதல்வர் இங்கே இந்த மாணவர் இல்லத்தில் படித்து வந்தவர்' என்றே நானும் சொல்லியிருப்பேன். (மக்கள் கைகளைத் தட்டி ஆரவாரம் செய்தனர்).

ஆனால் அப்படிச் சொல்லிக் கொள்ள முடியாவிட்டாலும், ஒன்றை நான் திட்டவட்டமாகச் சொல்வேன். என் இளம் வயதில் விவேகானந்தருடைய சொற்பொழிவுகளையும் அவர்களுடைய கருத்துக்களையும், இராமகிருஷ்ண பரமஹம்சருடைய அருங் கருத்துக்களையும் நான் படித்திருக்கிறேன். அவ்விதம்நான் படிக்க நேர்ந்த அவர்களின் கருத்துக்களை ஓரளவுக்கு மனப்பாடம் செய்து வைத்துக் கொள்ளும் திறமையையும் பெற்றிருந்தேன். ஆர்வத்துடன் அந்நாளில் நான் படிக்க நேர்ந்த அவர்களது கருத்துக்களில் சில, இப்போதும் என் நினைவில் இருந்து என்னை வழிநடத்துகின்றன என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்பதை இங்கு நான் மகிழ்ச்சியோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே இப்போது குழந்தைகளுக்குப் புத்தகங்கள் கொடுத்தார்கள். அவற்றில் ஒரு புத்தகத்தைப் பார்த்தேன். அந்தப் புத்தகத்தின் பெயர் 'குருதேவர் வாக்கியம்' என்று நினைக்கிறேன். அந்தப் புத்தகத்தைப் பிரித்துப் பார்த்தபோது அதில் இராமகிருஷ்ண பரமஹம்சருடைய திருவுருவப்படம் இருந்தது. அந்தப் புத்தகத்தில் ஓர் இடத்தில் இராமகிருஷ்ணபரமஹம்சர் சொல்வதாக ஒரு கருத்து வருகிறது. அதை உங்களுக்கு இங்கே சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

முன்னொரு காலத்தில் ஓர் அவதூத சந்நியாசி இருந்தார். அவர் ஒருவரோடும் எதுவும் பேசாமல் மெய்மறந்த பரவசநிலையில் இருந்து வந்தார். அவரை எல்லோரும் பித்தர் என்று எண்ணினார்கள். ஒரு நாள் அவர் ஒரு கிராமத்தில் பிச்சையெடுத்துவந்து, அங்கிருந்த ஒரு நாயுடன்கூட உட்கார்ந்து உண்ண ஆரம்பித்தார். இந்த ஆச்சரியத்தைக் கண்டு பலர் அங்கு திரளாகக்கூடினர். அந்தப் பெரியார் ஒரு கவளம் உணவை நாய்க்கு ஊட்டுவார்; மற்றொரு கவளத்தைத் தாம் உண்ணுவார். இவ்வாறாக இருவரும் நண்பர்களைப்போன்று ஒன்றாக அமர்ந்து உணவருந்த ஆரம்பித்தனர். அந்த ஞானியின் செயலைப் பார்த்த மக்கள், 'இதோ, ஒரு பைத்தியம்!' என்று சொல்லிக் கைகொட்டிச் சிரித்தனர். அவ்விதம் அவர்கள் சிரிப்பதைக் கண்ட அந்த ஞானி, 'ஏன் சிரிக்கிறீர்கள்? நாராயணன், நாராயணனுடன் உட்கார்ந்து நாராயணனுக்கு ஊட்டுவதைக் கண்டு நாராயணனே சிரிப்பதேன்? உள்ளதெல்லாம் நாராயணமயம் அன்றோ? என்று சொன்னார்'' என்று சொல்லி முடிக்கிறார் இராமகிருஷ்ணர்.

எல்லா இடத்திலும் கடவுள் உண்டு, எல்லோர் உள்ளத்திலும் கடவுள் உண்டு, எல்லோரும் கடவுள்தான், உலக உயிர் அனைத்தும் கடவுள்தான் என்றஉண்மையை,இராமகிருஷ்ண பரமஹம்சர் அவர்கள் தமது அந்த வாக்கியத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி எத்தனை எத்தனையோ விஷயங்களைத் தந்த இராமகிருஷ்ணர், விவேகானந்தர் ஆகியோர் கண்ட கொள்கைகளின் அடிப்படையில் இந்த நிறுவனம் இயங்கி வருகிறது. இந்த நிறுவனத்திற்குக் கிடைக்கும் பெருமைக்கும்பாராட்டுதல்களுக்கும் இராமகிருஷ்ண பரமஹம்சரின் திருவருள்தான் காரணம் என்று இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்தவர்கள் கூறுவார்கள். அதுதான் உண்மை என்று நானும் கருதுகிறேன்.

இங்கே அமர்ந்திருக்கும் இந்தக் குழந்தைகளையெல்லாம் வளர்த்து, இந்த நிறுவனம் விவேகானந்தர்களாக, ராஜாஜிகளாக வழங்க வேண்டும். குருதேவர் வாக்கியம், நமது தாய் நாடு, இந்தியப் பெண்மணிகள், எதிர்கால இந்தியா, விவேகானந்தரின் அறிவுரைகள்என்ற

வகையில் அமைந்த, இப்படிப்பட்ட புத்தகங்களை இங்கே இப்போது குழந்தைகளுக்குக் கொடுத்தார்கள். இப்படிப்பட்ட நூல்களைப் படித்தும், இந்த நிறுவனம் தருகின்ற பயிற்சிகளைப் பெற்றும், எதிர்காலத்தில் குடிமக்களாக விளங்கப் போகிறவர்கள், நல்ல குடிமக்களாக விளங்குவார்கள்; தவறான வழி என்றாலே இன்னது என்று அறியாதவர்களாக, நல்லவர்களாக இருப்பார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இப்படிப்பட்ட மாணவர் இல்லம் போன்ற நிறுவனங்களை, இந்தியாவின் பல பாகங்களிலும் நடத்திவரும் இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த பெரியோர்களை எப்படிப் பாராட்டுவது என்று எனக்குத் தெரியவில்லை.

குருகுலம் போன்ற இத்தகைய பள்ளிகள் இந்த நாட்டில் பெருவாரியாகப் பல்கிப் பெருக வேண்டும் என்ற என் ஆசையை ஏக்கத்தோடு வெளிப்படுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

75 ஆண்டுகள் அல்ல; 75,00 ஆண்டுகளுக்குப் பிறகும் இந்த இல்லம் இப்போது இருப்பதைவிடவும் பெரும் புகழோடும் பெருமையோடும், நாட்டின் பண்பாடுகளை எல்லாம் காப்பாற்றுகின்ற ஓர் ஆலமரத்தின் ஆணிவேராக இருந்து கொண்டிருக்கவேண்டும். இந்த ஆலமரத்தில் விழுகின்ற விழுதுகள் பல ஆலமரங்களுக்கு அடிப்படையான ஆணிவேராக அமைந்து அவைகளும் ஆலமரங்களாக உருவாக வேண்டும். அந்த ஆலமரங்களிலிருந்தும் இன்னும் விழுதுகள் தொடர்ந்து விழுந்தபடியே இருக்க வேண்டும் என்ற வகையில், இந்தக் கல்விநிறுவனம் பெருக வேண்டும் என்ற என் வேண்டுகோளை உங்கள்முன் வைக்கிறேன்.

உங்களின் இந்தப்பணி வளரட்டும், வாழவாங்கு வாழட்டும், உங்களுடைய கடமை உணர்வு நாட்டிற்கு நன்மைகளைத் தரட்டும் என்று சொல்லி, இந்த வாய்ப்புத் தந்தமைக்காக நன்றிகூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

## திருமுருகாற்றுப்படையும், பிரமசரியமும்

திருமுருகாற்றுப்படை ஒரு துதி நூலாக மட்டும் இல்லாமல், பண்டைக்காலத்துச் செய்திகளையும், பழக்க வழக்கப் பண்பாடுகளையும்கூட, அறிந்துகொள்ளுதற்குரிய ஒரு சிறந்த கருவியாகவும் திகழ்கின்றது.

பண்டைக்காலத்தில் ஒரு சில உயர்ந்த பெருமக்களால் பிரமசரிய ஒழுக்கமானது ''அறுநான்கு இரட்டி'' (48) ஆண்டுகள் வரையில்கூடக் கடைப்பிடிக்கப் பெற்றிருந்ததாகத் தெரிகின்றது:

''அறுநான்கு இரட்டி இளமைநல் யாண்டு
ஆறினிற் கழிப்பிய அறன்நவில் கொள்கை''

என்னும் வரிகள், பிரமசரிய நிலையைக் குறிப்பனவாகத் திருவேரகம் பற்றிய பகுதியில், அந்தணர்களின் இயல்பைக் குறித்து விளக்குங்கால், திருமுருகாற்றுப்படையில் வந்துள்ளது.

இங்ஙனம் பிரமசரிய நிலைக்கு 48 ஆண்டுகள் வரையறுத்தமை, எற்றுக்கு என்பது தெற்றெனப் புலனாகவில்லை. எழுத்து வடிவில் அன்றி ஓதக் கேட்பதன் வாயிலாகவே பயிலப்பெற்று வழங்கிவந்த வேதப்பாடல்களுள், ஒரு வேதத்தினை நன்கினிது ஓதி முழுவதும் பயின்று மனனம் செய்துகொள்ள வல்லவனாதற்கு 12 ஆண்டுகள் ஆகும் என்றும்; அங்ஙனம் நான்கு வேதங்களையும் பயின்று புலமை நிறைவும் வித்தகமும் பெறுவதற்கு 48 ஆண்டுகள் ஆகும் என்றும்; அவ்வாறு நான்கு வேதமும் பயின்று தேர்ந்த பேரறிஞரே ''சதுர்வேதிகள்'' எனப்படுவர் என்றும், அத்தகையவர்களுக்கு அரசர்களால் முற்றூட்டாகவழங்கப்படுவனவே ''சதுர்வேதி மங்கலங்கள்'' என்றும் பெரியோர்கள் கூறுவர்.

இனி வேத நூல்களின் ஆராய்ச்சியில் மிகவும் தலைசிறந்த பேரறிஞராக விளங்கியிருந்த சுவாமி தயானந்தர் அவர்கள், ''உத்தமம் ஆகிய பிரமசரியம் என்பது 48 வயது வரையிற் கடைப்பிடிக்கப்படும். 48ஆண்டுகள் எவன் பிரமசரிய ஒழுக்கம் கடைப்பிடிக்கின்றானோ, அவன் ஆற்றல் மிகவும் வாய்ந்து, எல்லாக்கலைஞானத் திறங்களையும் கற்றுணரும் பெருவல்லமை பெற்றுத் திகழ்வான்'' என்று குறிப்பிட்டிருத்தலும், ஈண்டு நாம் அறிந்து மகிழ்ந்து பயன் கொள்ளத்தக்கது.

''The highest class of Brahmacharya third in number, is upto the age of forty-eight. Just as the Jagati metre consists of 48 syllables, similarly whoever keeps **celibacy** upto the age of forty-eight comes to posses his vital airs quite capable of acquiring all knowledge''.

—**Swami Dayanandar**,
The Light of Truth.

# சீவக சிந்தாமணி

"கலைமாமணி"
திரு. நாரண - துரைக்கண்ணன், அவர்கள்

உலகப் பேரிலக்கியங்களின் வரிசையில் சிறந்த பெருங்காப்பியங்களாக வைத்து எண்ணத்தக்கவை, பழம்பெரும் மொழிகள் அனைத்திலும் சிறப்பாக இடம் பெற்று நிலைத்திருந்து வருகின்றன. வால்மீகி முனிவர் பாடியுள்ள இராமாயணம் 'முதல் பெருங்காப்பியம்' என்று நெடுங்காலமாகச் சிறப்பித்துச் சொல்லப்பட்டு வருகிறது. பவபூதி, காளிதாசன், பாசன் முதலிய சமஸ்கிருத மகாகவிகளும் சிறந்த பல காப்பியங்களை இயற்றியிருக்கின்றனர். கிரேக்க மொழியில் ஓமரும், ரோமமொழியில் வர்ஜிலும், இத்தாலிய மொழியில் தாந்தேயும், ஆங்கில மொழியில் ஷேக்ஸ்பியரும் மில்டனும் எழுதியுள்ள பெருங்காப்பியங்கள், அழிவிலாப்புகழ் வாய்ந்தனவாயிருக்கின்றன.

நம்தீந் தமிழ்மொழியிலும் பெரும் புகழ் படைத்த காப்பியங்கள் பல இருக்கின்றன. அவற்றில் சில 'ஐம்பெருங் காப்பியங்கள்' என்றும், 'ஐந்து சிறுகாப்பியங்கள்' என்றும் சிறப்பித்துப் பேசப்பட்டு வருகின்றன. வேறு சில காப்பிய வடிவில் அமைந்திருந்தாலும், புராண இதிகாசங்களாக மதிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, கம்பராமாயணம் தமிழில் இருப்பவைகளிலேயே தனிச் சிறப்புப் பொருந்திய பெருங்காப்பியமாகும். ஒரு பெருங்காப்பியத்துக்குச் சொல்லப்படுகின்ற எல்லா இலக்கணங்களும் சிறப்பியல்புகளும் பொருந்தி இருக்கின்றன. இவ்விதமிருந்தும், இது இதிகாசத்தில் தான் சேர்க்கப்பட்டிருக்கிறது.

பெருங்காப்பியங்கள், சிறு காப்பியங்களைச் சேர்த்து வழங்கப்படும் பன்னிருகாப்பியங்களில் தலை சிறந்தது சிந்தாமணியாகும். இது சீவகன் என்ற அரசிளங்குமாரனைக் காப்பியத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டிருப்பதால் சீவகசிந்தாமணி என்று சிறப்பித்துக் கூறப்படுகிறது. இப்பெருங் காப்பியத்தை இயற்றியவர் திருத்தக்கதேவர் என்னும் சமண முனிவராவார். இக்காப்பியத்தில் கடவுள் வாழ்த்திலிருந்து 'முத்திஇலம்பகம்'வரை சமண சமயக்கொள்கைகள் பலபடப் பேசப்பட்டிருப்பதைப் பரக்கக் காணலாம்.

மேற்குறித்த பன்னிரண்டு தமிழ்க் காப்பியங்களில் சிலப்பதிகாரம் என்ற காப்பியந்தவிர மற்றவையெல்லாம் வழி நூல்கள்தாம். சிலப்பதிகாரம் மட்டுமே தமிழுக்கே உரிய ஓர் ஒப்பற்ற காப்பியமாகும். மற்றக் காப்பியங்களின் கதைக் கருக்கள் அதாவது மூலக்கதைகள் சமஸ்கிருதக் காப்பியங்களில் இருக்கின்றன. அவற்றைத் தழுவித்தான் தமிழில் இவை ஆக்கப்பட்டிருக்கின்றன.

சிந்தாமணிக்கு மூலநூல் வாதீபசிம்மன் என்ற சமணக் கவிஞர் சமஸ்கிருதத்தில் இயற்றியுள்ள 'க்ஷத்ரசூடாமணியும், 'கத்யசிந்தாமணியும் என்று அறிஞர்கள் கூறியிருக்கின்றனர். 'ஸ்ரீபுராணத்தி'லுள்ள 'சீவக சரித்திர'மும் இதற்குக் கருவாய் அமைந்திருக்கிறது.

திருத்தக்கதேவர் பாடியுள்ள இப்பெருங் காப்பியத்துக்கு, சிந்தாமணி எனப் பெயர் இட்டிருப்பதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. ஆனால், சிந்தாமணி என்னுந் தெய்வமணி வேண்டியனவெல்லாம் வழங்கும் இயல்புடையது. அதுபோல, இச்சிந்தாமணிக் காப்பியமும் இதனை விரும்பிக் கற்பார் வேண்டும் உறுதிப்பொருள்கள் அனைத்தையும் அளிக்கும் ஆற்றல் வாய்ந்தது என்ற ஒரு காரணத்தை மட்டும் நாம் எடுத்துக்கொள்ளலாம். நன்னூல் என்ற தமிழ் இலக்கண நூலுக்கு உரை எழுதியுள்ள மயிலைநாதர் என்பார் 'சிந்தாமணி தன்மையால் பெயர் பெற்றது' என்று கூறியுள்ள கருத்து மிகப் பொருத்தமானதாகும்.

சிந்தாமணியை மண நூல் என்றும் பெரும் புலவர்கள் சிறப்பித்துக் கூறுகின்றனர். காப்பியத் தலைவன் சீவகன் கோவிந்தையார் காந்தருவதத்தை, குணமாலை, பதுமையார், கேமசரியார், கனகமாலையார், விமலையார், சுரமஞ்சரியார், இலக்கணையார் ஆகிய எட்டு மங்கையரை மணஞ்செய்து கொண்ட வரலாற்றினை எட்டு இலம்பகங்களில் கூறுவதால் இப்பெயர் வந்தது என்பர்.

திருத்தக்கதேவர் சிந்தாமணியைப் பாடுவதற்கு ஏற்பட்ட தூண்டுதலுக்குக்காரணமாக ஒரு கதை கூறப்படுகிறது. இது சேக்கிழார் பெருமான் பெரியபுராணம் பாடுவதற்கு ஏதுவாகக் கூறப்பட்டுவரும் கதையைப் போன்றே இருக்கிறது.

சிந்தாமணியை வழி நூலாகக் கொண்டு சீவகசிந்தாமணிச் சுருக்கம் என்ற பெயருள்ள நூலொன்று பகழிக்கூத்தர் என்பவரால் இயற்றப்பட்டிருக்கிறது. சிந்தாமணி மாலை என்றொரு நூலும், சிந்தாமணி அம்மானை என்று ஓர் ஏட்டுச் சுவடியும், சிந்தாமணித் தெரிவு என்ற திரட்டு நூல் ஒன்றும் இருக்கின்றன.

திருத்தக்கதேவர் சோழர் குடியொன்றில் தோன்றியவர் என்பதும், இளமையிலேயே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கித் தமிழ் இலக்கிய இலக்கணப் புலமையுடன் சமஸ்கிருத மொழிப்புலமையும் உடையவராயிருந்தார் என்பதும், ஆருகத சமய மெய்ப்பொருள் எல்லாவற்றையும் நூல் உணர்ச்சியுடன் பயின்று ஐவகைச் சீலமும் அமைந்து விளங்கினார் என்பதும், இளமையிலேயே துறவியானார் என்பதும் ஆன சில குறிப்புக்கள் மட்டுமே அறியக் கிடக்கின்றன. மற்றப்படி இவருடைய வாழ்க்கை வரலாறு குறித்து, திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளக் கூடவில்லை.

திருத்தக்கதேவர் வாழ்க்கை வரலாறு மட்டுமல்ல; இவர் வாழ்ந்த காலமும் வரையறுத்துச் சொல்ல முடியவில்லை. எட்டாம் நூற்றாண்டுக்கும் பத்தாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில்தான் இவர் வாழ்ந்திருக்க வேண்டுமென்று ஓரளவு ஊகித்துத் தான் கூற வேண்டியிருக்கிறது. திருத்தொண்டர் புராணத்தில் கூறப்பட்டிருக்கும் கதையை உண்மையென்று வைத்துக் கொண்டு பார்த்தால், சிந்தாமணி இயற்றப்பட்ட காலத்தைக் கி. பி. 1133-1146 வரை தமிழகத்தில் செங்கோல் ஓச்சிய குலோத்துங்க சோழமன்னனுக்கு முற்பட்டது என்று கூறமுயல்கின்றனர். யாப்பருங்கல உரையில் சிந்தாமணி பெயரால் குறிப்பிடப்படுவதுடன், அதிலிருந்து பாடல்கள் சிலவற்றை மேற்கோளாகவும் எடுத்துக் காட்டப்படுவதால், சிந்தாமணி பதினோராம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாயிருக்கலாம் என்றும் சிலர் கருத்து வெளியிட்டிருக்கின்றனர். ஏனெனில் யாப்பருங்கலமும் அதன் உரையும் பதினோராம் நூற்றாண்டில் இயற்றப்பட்டவையாகும்.

இன்னொரு ஆதாரமும் காட்டப்படுகிறது. உதயணன் கதை கூறும் பெருங்கதை, கொங்குவேளிர் என்ற சமணப்புலவரால் இயற்றப்பட்ட தமிழ்ப் காப்பியமாகும். இது பைசாசி மொழியிலுள்ள 'பிருகத்கதை'யைக் கங்கநாட்டு மன்னராகிய துர்விநீதன் என்பார் எழுதியுள்ள சமஸ்கிருதப் பெருங்கதையின் தழுவலாகும். துர்விநீத மன்னனுடைய அரசாட்சி ஆறாம் நூற்றாண்டின் முடிவில் தொடங்கியிருக்கிறது. ஆதலால், அவன் மொழி பெயர்த்தது ஏறக்குறைய கி. பி. 600 என்று சொல்லலாம். இச் சமஸ்கிருதப் பெருங்கதை நாட்டில் நன்கு பரவிய பின்பே, கொங்குவேளிர் தமிழாக்கஞ் செய்திருக்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது தமிழிற் பெருங்கதை தோன்றிய காலம் ஏறக்குறைய கி. பி. எழுநூறாம் ஆண்டாயிருக்கலாம் என்ற முடிவுக்கு வரவேண்டியதாயிருக்கிறது. இத் தமிழ்ப் பெருங்கதையைச் சிந்தாமணியில் பல இடங்களில் திருத்தக்கதேவர் எடுத்தாண்டிருக்கிறார். பல கருத்துக்களையும் சொற்களையும் பல இடங்களில் ஒப்புநோக்கினால் இவ்வுண்மை விளங்கும். தமிழ்ப் பெருங்கதை தமிழகத்தில் நன்கு பரவி நிலைத்த பிறகுதான் சிந்தாமணியை மேற்குறித்தவாறு எடுத்தாளக் கூடுமாதலால், கி. பி. எண்ணூறாம் ஆண்டில் சிந்தாமணிக் காப்பியம் இயற்றப்பட்டிருக்க வேண்டும். எனவே சிந்தாமணி கி. பி. எண்ணூறாம் ஆண்டு முதல் ஆயிரம் ஆண்டு வரையுள்ள காலத்துக்கிடையில்தான் திருத்தக்கதேவர் சிந்தாமணியைப் பாடியுலவவிட்டிருக்க வேண்டும். அப்படிப் பார்க்கையில் திருத்தக்கதேவர் தோன்றிய காலம் எட்டாம் நூற்றாண்டிலிருந்து பத்தாம் நூற்றாண்டுக்குள் இருக்கலாம் என்ற முடிவுக்கே நாம் வரவேண்டும். அதாவது கடைச் சங்ககாலத்தில் திருத்தக்கதேவரும் அவர் பாடியுள்ள சிந்தாமணியும் தோன்றியிருக்க வேண்டும்.

திருத்தக்கதேவர் சீவகனைத் தலைவனாகவும், பொருளாகவும் கொண்டு அகப்பொருட்சுவை பெரிதும் நிரம்பி, மற்றச் சுவைகளும் பொதிந்திருக்கப் பெருங் காப்பியமொன்றைத் தொடர்நிலைச் செய்யுளுக்கு ஏற்ற எவ்வகை இலக்கணமும் நன்கு அமைய, எட்டே நாட்களில் பாடி முடித்திருக்கிறார் என்று கூறப்படுகிறது. சிந்தாமணியின் திட்பநுட்பம், அழகு, அமைப்பு நடை முதலிய பலவுங் கண்டு சங்கப் புலவர்கள் மிகவும் வியந்து பாராட்டியிருக்கின்றனர்.

விருத்தப்பாவால் அதாவது விருத்தக் கலித்துறை நெடிலடி நான்கு கொண்ட பாக்களால் ஓசை வேறுபட முதன் முதல் பெருங் காப்பியம் ஒன்றைப் பாடியவர் திருத்தக்க தேவரே யாவர். புதுவகைப் பாவால் தொடர் நிலைச் செய்யுளாக நூல் செய்திருப்பதால், சொற்களும் சொற்றொடர்களும் குறித்துப் பெரிதும் ஆராய்ந்து இவர் காலத்துக்கு முன்பு வழங்காத புதிய பல சொற்களையும் காப்பியம் முழுவதும் விரவச் செய்திருக்கிறார். சொற்றொடர்களும் இதுபோலவே நெடுகிலும் காணப்படுகின்றன. யாப்பு முறையுடன் சைவத் திருமுறைகளிலுள்ள சொற்களையும் சொற்றொடர்களையும் தாராளமாகக் கையாண்டிருக்கிறார். இதுவேயன்றி, வேதகாலக் கதைகளையும் சிவன், திருமால், முருகன் கதைகளையும் உவமைகளாகக் கூறியிருக்கின்றார். கிளைக் கதைகளையும் கற்பார்க்கு அலுப்புத்தட்டாதபடி, சுவையாகச் சொல்லியிருக்கிறார்.

இடைச்சங்க காலத்துக்குப் பின், தோன்றிய நூல்களில், 'இலம்பகம்' என்ற பிரிவைத் திருத்தக்க தேவரே முதன்முதலாகக் கையாண்டிருக்கிறார். இலம்பகம் என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு மாலை என்று பொருளாகும்.

திருத்தக்க தேவருடைய சமயக் கொள்கையை ஒப்புக் கொள்ளாதவர்கள்கூட, நூலின் பொருள் அமைப்பு, அழகு முதலியவற்றில் சிந்தாமணியை வியந்து பாராட்டாத புலவர்களும் உரையாசிரியர்களும் இல்லை. அகப்பொருள்

சுவையும் இசைநுணுக்க விவரமும், வீடுபேறு பற்றிய கொள்கையும், நல்லிசைப் புலவர்களையும் சமயதத்துவ ஞானிகளையும் பெரிதும் கவர்ந்திருக்கிறது. முத்தி யிலம்பகத்தை ஆழ்ந்து படிப்பவர்கள் இது வெறும் இன்ப நூலன்று; வீடுபேறும் பயப்பிக்கும் விழுமிய நூல் எனச் சிந்தாமணியைப் போற்றுவார்கள். மிகச் சிறந்த முறையில் அமைந்துள்ள முத்தி யிலம்பகம் சமயநூல் வகையினுள் ஒன்றாக மதிக்கப்பட வேண்டும்.

இப்பெருங் காப்பியத்தின் தனிச்சிறப்பை நன்குணர்ந்தே டாக்டர் ஜூலியன் வின்சன் என்பார் பிரஞ்சு மொழியில் சிந்தாமணியை ஆக்கியிருக்கிறார். இதுவன்றி, ரெவரண்ட் எச். என்பார் கி. பி. 1868-ஆம் ஆண்டில் சிந்தாமணியில் நாமகள் இலம்பகத்தை ஆங்கில முன்னுரையுடன் வெளியிட்டிருக்கிறார். ரெவரண்ட் பெஸ்கி என்ற இத்தாலியப் பாதிரியாரான வீரமாமுனிவர் 'தேம்பாவணி' என்று தாம் பாடிய சிறு காப்பியத்தில் சிந்தாமணியின் பாநயத்தையும் கருத்தையும் கையாண்டிருக்கிறார். கம்பர் முதலிய பெருங் கவிஞர்களும் நிரம்ப எடுத்து ஆண்டிருக்கின்றனர். சந்தான குரவர்களில் ஒருவரான உமாபதி சிவாச்சாரியார் இயற்றியுள்ள கோயில் புராணத்தில் சிந்தாமணியின் சந்தத்தையும் உவமை நயத்தையும் பரக்கக் காணலாம்.

''சிந்தாமணியும் திருக்கோவையும் எழுதிக் கொளினும்
நந்தாவுரையை எழுதல் எவ்வாறு நவின்றருளே''

என்று சிவப்பிரகாச சுவாமிகள் தாம் இயற்றியுள்ள திருவெங்கைக்கோவையில் சிறப்பித்துப் பாடியிருப்பதொன்றே சிந்தாமணியின் தனிச் சிறப்பை நமக்கு நன்கு உணர்த்தும்.

இத்துணைச் சிறந்த பெருங் காப்பியத்தை தமிழ்மொழிக்கு வழங்கியுள்ள நம் திருத்தக்க தேவர், காப்பியப் பெரும்புலவர்களில் சிந்தாமணி போன்று என்றென்றும் போற்றத்தக்கவராவார்.

## நிர்வாக அதிகாரிகள் நியமனம்

(1) தென்னாற்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம், கீழப்புதுப்பட்டு கிராமம் அருள்மிகு மஞ்சநீசுவரர் கோயிலுக்கு நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப் பெற்றுள்ளார். இக்கோயில் தென்னாற்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம், மரக்காணம் அருள்மிகு பூமீஸ்வரர் கோயிலுடன் இணைக்கப்பட்டுள்ளது. (யு. ஓ. குறிப்பு எண். 14140/81-பி6 நாள் 12-3-81).

(2) தென்னாற்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம், இரும்பை அருள்மிகு மகாகாளீசுவரர் கோயிலுக்கு நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப் பெற்றுள்ளார். இக்கோயில் திண்டிவனம் வட்டம், திண்டிவனம் நகரம், அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டுள்ளது. (யு. ஓ. குறிப்பு எண். 10840/81-பி6 நாள் 26-3-81).

(3) இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கைவட்டம், இடைக்கத்தூர் அருள்மிகு மணிகண்ட ஈஸ்வரர் கோயிலுக்கு நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப் பெற்றுள்ளார். இக்கோயில் இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கை வட்டம் அரியகுறிச்சி அருள்மிகு வேதுடையார் காளியம்மன் கோயிலுடன் இணைக்கப்பட்டுள்ளது. (யு. ஓ. குறிப்பு எண். 12928/81-பி6 நாள் 26-3-81).

(4) கோவை மாவட்டம், உடுமலைப் பேட்டை வட்டம், கொழுமம் அருள்மிகு அனுமந்தராயசுவாமி கோயிலுக்கு நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப் பெற்றுள்ளார். இக்கோயில் கோவை மாவட்டம், உடுமலைப் பேட்டை வட்டம், சங்கராமநல்லூர் அருள்மிகு தாண்டவேசுவரர்—காசி விஸ்வநாத சுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டுள்ளது (யு. ஓ. குறிப்பு எண். 18855/81-பி6 நாள் 25-3-81).

# போக சித்தர்

டாக்டர் திரு. அ.மா. பரிமணம், M.A.Ph.D.,
தமிழ்த்துறைத் தலைவர், புட்பம் கல்லூரி, பூண்டி.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
HR&CE

நீரற வறியாக் கரகத்துத்தாழ்சடைப் பொலிந்த சிவபெருமான் திருமுடியில் விளங்கும் பிறையினைக்கூறும்போது ''அப்பிறை பதினெண் கணனும் ஏத்தவும் படுமே'' என்று புறநானூறு கூறுகின்றது. ஆவினன்குடியிலே முருகப்பெருமானைக் காண வந்த தேவர்கள் அடியார்கள் திருக்கூட்டங்களைக் கூறுமிடத்து நக்கீரர் தம் திருமுருகாற்றுப்படையில் ''ஒன்பதிற்றிரட்டி உயர்நிலை பெறீஇயர்'' என்று கூறியுள்ளார். இவ்விடங்களிலும் பிறாண்டும் வரும் பதினெட்டு என்னும் தொகையை விளக்குமிடத்தில் உரையாசிரியர் பலரும், பதினெண் வகையினரில் சித்தர் என்று ஒரு வகையினரைக் குறிப்பிடுகின்றனர். சித்தர்கள் எனப்படுபவர் மக்களினத்தில் தோன்றியவர்களேனும், தம் தவயோக ஆற்றலால், அணிமா (அணுபோலச் சிறியாதல்), மகிமா(மேரு போலப் பெரிதாதல்), இலகிமா (காற்றுப்போல இலேசாதல்), கரிமா (பொன்போல் பளுவாதல்), பிராப்தி (எல்லாவற்றையும் ஆளல்), வசித்துவம் (அனைவரையும் வசப்படுத்தல்), பிராகாமியம் (கூடுவிட்டுக் கூடுபாய்தல்), ஈசத்துவம் (விரும்பியன செய்து முடித்து அனுபவித்தல்) ஆகிய எண் வகைப் பேராற்றலும் (அட்டமாசித்தி) கைவரப்பெற்று விளங்கும் இயல்புடையராவர்.

அட்டமாசித்தி கைவரப்பெற்ற பேராற்றலாலும், மனித குலத்துக்குப் பயன்மிக விளைக்கவல்லஅவர்தம் தொண்டாலும், பொது மக்களிடையே சித்தர்கள் பெருமதிப்பும் செல்வாக்கும் பெற்று விளங்கினர். இறைவனே எல்லாம் வல்ல சித்தராகி, கல்யானைக்குக் கரும்பருத்தல் போலும் சித்துக்களைச் செய்ததாகவும், அட்டமா சித்திகளை அருளியதாகவும், திருவிளையாடற்புராணம் பேசுகின்றது. முருகப்பெருமானுக்குச் சித்தன் என்றபெயரும் உண்டு. அதனால், அவன் கோயில் கொண்டுள்ள படைவீடுகளில் ஒன்றாகிய திருவாவினன்குடிக்குச் 'சித்தன்வாழ்வு' என்ற பெயரும் காணப்படுகிறது.

பொதுவாக இந்தியாவிலும், குறிப்பாகத் தமிழ்நாட்டிலும் சித்தர்கள் பலர் பலகாலங்களிலும் விளங்கியதாக அறிகிறோம். யோக சாதனையாற் பெற்ற சித்த ஆற்றலால் அவர்கள் பன்னூற்றாண்டுகள் நிலவுலகில் வாழ்ந்ததாகக் கேட்கப்படுகிறது. பேராற்றல் பெற்று விளங்கிய இவர்களைப் பற்றிச் சங்க காலத்தவரும் அறிந்திருந்ததாகத் தெரிகிறது. ''நிலந்தொட்டுப் புகார், வானம் ஏறார், விலங்கிரு முந்நீர் காலிற் செல்லார்'' என்னும் குறுந்தொகைச் செய்யுளடிகள் சித்தர்கள் எனக் கருதப்படும் பெரியோர்களின் ஆற்றல்களிற் சிலவற்றைக் குறிப்பாக உணர்த்துகின்றன. சமணம், புத்தம் முதலிய சமயங்களும் தத்தம் சமயத்தில் நின்று அரிய சித்திகள் பெற்றோரைப் போற்றக் காண்கிறோம்.

''நிலத்திற் குளித்து நெடுவிசும் பேறிச்
சலத்தில் திரியுமோர் சாரணன்''

என்று மணிமேகலையும்,

''நீரினில் தீயினில் வானில் நினைத்துழி ஒதுங்குகின்ற
காரணர் எண்மராவார் சமணரில் இருத்தி பெற்றோர்'

எனச் சூளாமணியும் அவர்களைச் சுட்டுகின்றன. ''திண்டிறல் சித்தர்களே கடைக்கூழை சென்மின்கள்'' என்கிறார் மணிவாசகப்பெருமான். தாயுமானவ அடிகளும் சித்தர் கணத்தைப் போற்றிப் பாடியுள்ளார். குற்றால வளத்தைக் கூறும்போது 'கமனசித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பர்' எனச் சித்தால் பெறும் சிறப்பினைத் திரிகூடராசப்பக் கவிராயர் தம் குறவஞ்சியில் காட்டியுள்ளார்.

சித்தர்கள் எண்ணிலர் விளங்கிய போதும், கோரக்கர் உள்ளிட்ட நவநாத சித்தர்களும், கொங்கணர் உள்ளிட்ட பதினெண் சித்தர்களும் சிறந்தோராகக் கருதப்பட்டனர். இவர்கள் இறையனுபூதி பெற்று, ஆற்றல்மிகு மக்கள் தொடர்புதேவையில்லாதவர்களாயிருந்தாலும் மனித குலத்தின் நன்மைக்காக, மருத்துவம், மந்திரம், சோதிடம் முதலான துறைகளில் தாங்கள் அடைந்துள்ள புலமையைக் கவிதைகளில் வடித்துத் தந்துள்ளனர். தமிழகச் சித்தர்கள் தந்த அறிவுச் செல்வங்கள் பதினெண் சித்தர் ஞானக்கோவைகளாக, அகத்தியர் ஞானமாக, பிற நூல்களாகத் திகழக் காண்கின்றோம். ஏடுகளில் தங்கள் புலமையைத் தேக்கி வைத்துச் செல்லாத சித்தர்கள் எண்ணிலராவர். நூல்களாலும் பிறவற்றாலும் அறியப்பெற்ற சித்தர்களின் வரலாற்றினை அறிவது மிகவும் கடினமாக இருக்கின்றது.

பதினென் சித்தர்களில் ஒருவரும், பழனி மலைக்கோயில் வரலாற்றோடு பெரிதும் தொடர்புடையவருமான போகருடைய வரலாறும் விளக்கமாக அறிய முடியாததாகவே உள்ளது. ஒன்பதாம் திருமுறையைச் சேர்ந்த திருமாளிகைத் தேவர், கருவூர்த்தேவர் ஆகியோருடன் போகருக்குத் தொடர்பு கூறப்படுகிறது. திருவாவடுதுறையில் ஓரரசமரத்தின் கீழ், நவகோடி சித்தர்கள் சீடர்களாக விளங்க, போகர் வீற்றிருந்ததாகவும், அவர்தம் சீடர்களில் சிவனை வழிபடும் சிவசமயிகளும், அம்பிகையைவழிபடும் வாமிகளும் இருந்ததாகவும், அவர்களுடைய மனப் பரிபாகத்திற்கேற்பப் போகர் தீட்சை அளித்ததாகவும் கூறப்படுகிறது. போகசித்தரின் சீடர்களில் சைவநெறி நிற்போருள் திருமாளிகைத் தேவரும், வாம நெறி நிற்போரில் கருவூர்த் தேவரும் சிறந்து விளங்கினார்கள் என்றும், அவர்கட்குச் சைவ சமயமே சிறந்ததென்றும், சிவவழிபாடே சிறப்பானதென்றும் போகர் தெளிவுபடுத்தியதாகவும் கூறப்படுகிறது.

திருநந்திதேவரே, பல்வகைப் பிறப்புற்றுப் பின் போகராகப் பூமியில் தோன்றினார் என்றும், போகர் செனனசாகரம் என்னும் நூற் பாடல் உணர்த்துகின்றது. போகர் தன் வரலாறு கூறுவது போலமைந்த அப்பாடல் வருமாறு :—

''ஆதியிலே நந்தியானேன் அப்பனே தவஞ்செய்து,
சித்தன் அயன் மாலு மானேன்
வேலனென்ற சுப்பிரமணிய ரூபமானேன்
விண்ணவர் சேனாபதி இந்திரனுமானேன்
நானென்ற கிருஷ்ண வடிவாகி நின்றேன்
நற்பிரமமாய் உலகமெங்கு மானேன்
மானென்ற பராபரமாய் நின்று கொண்டேன்
மாநிலத்தில் போகரென்றுபெயர்
வழங்கிற்றேனே''

போகருடைய மரபு கூறும்போது மூலர், காலாங்கி, போகர், கொங்கணர் என்று வரிசைப்படுத்தி,

''கேளப்பா மூலர்க்குக் காலாங்கி பிள்ளை
கெட்டியான காலாங்கி மைந்தர் போகர்
நீளப்பா போகர் பிள்ளை
கொங்கணர்தான்'' (சட்டைமுனி)

என்று சித்தர் பாடல் கூறுகின்றது.

போகர் ஏழாயிரம், போகர் எழுநூறு முதலிய மருத்துவ நூல்களும், ஜால நூல்களும் போகரால் செய்யப்பட்டனவாக அறியப்படுகிறது. போகமுனிவரின் சீடராகப் புலிப்பாணி முனிவர் என்பவர் கூறப்படுகின்றார். அவரும் மருத்துவம் முதலிய துறைகளில் சிறந்தவராகவும் நூல் இயற்றியவராகவும் கூறப்படுகிறது. தொடக்கத்தில் போகர் புத்த மதத்தினரென்றும், தம் சொந்த நாடான சீனத்திலிருந்து வந்த பின்னர் சீனம் திரும்பியவர் என்றும், புலிப்பாணி இவருடன் இங்கு வந்து இங்கேயே தங்கிவிட்டவர் என்றும் சிலர் கருத்துரைக்கின்றனர். ஆனால் போகர் தமிழகத்தையே தம் தாயகமாகக் கொண்டவரென்றும், தம் சித்தாற்றலால் சீனம், உரோமாபுரி, மக்கா மதினா முதலிய பிறநாட்டுப் பகுதிகளுக்கெல்லாம் சென்று கண்டு வந்தவர் என்றும் சிலர் கருதுகின்றனர். போகரும், மருத்துவக் கலையில் சிறந்த அவர்தம் மாணவர் புலிப்பாணியும் தங்கள் இறுதிக் காலத்தில் பழனியில் தங்கியிருந்ததாகத் தெரிகிறது. இச்செய்தி, கொங்கு நாட்டு வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்துரைக்கும் கொங்கு மண்டலச் சதகத்தில் வரும்,

''யோக வைத்தியம்சொல் ரசவாத
மெலாக்கலையும்
தேக நிலை பெருங்காய கற்பங்க ளெண்சித்தியும்
சொல்
போகருடன் புலிப்பாணி முதலிய புண்ணியரெலா
மாகமுற வமர்வைகா நகர் கொங்குமண்டலமே''

என்னும் பாடலில் குறிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் பலவிடங்களில் போகர் இருந்ததாகக் கூறப்படினும், பழனியைத் தவிரப் பிறவிடங்களில் அவர் இறுதிநிலை-சமாதி அடைந்ததாகக் கூறப்படாமையாலும், பழனிக் குன்றின் மேலுள்ள ஆண்டவர் உட்பிராகாரத்தின் தென்மேற்கு மூலையில் போகர் சமாதி என்னுமொரு கோயிலமைப்பு அமைந்திருப்பதாலும் அவர் இத்தலத்தில் நிருவிகற்ப சமாதி எய்தியவர் என்னும் செய்தி உறுதிப்படுகிறது.

முருகப்பெருமான், பழனிக்குன்றிலே கோயில் கொண்ட புராண வரலாறு அறிஞர்கள் பலரும் அறிந்ததாகும். மலைமீதிலங்கும் முருகப் பெருமானைக் கிரேதா யுகத்தில் நான்முகனும், திரேதா யுகத்தில் இந்திரனும், துவாபர யுகத்தில் போகநாதரும் வழிபட்டுத் தங்கள் சாபந் தீரப்பெற்றனர் என்பது புராணக் கூற்றாகும். கலியுகம் தொடங்கி 224 ஆண்டுகள் போகர் வழிபட்டதாகவும், அப் பழமரபு கூறுகிறது. போக சித்தரே தம் பேராற்றலால் நவபாடாணக் கலவை கொண்டு இப்போதும் நாம் கண்டு வழிபடும் அருள்மிகு ஞானதண்டாயுதபாணி சுவாமித் திருமேனியை உருவாக்கியதாகக் கூறப்படுகிறது. நவபாடாணச் சேர்க்கையாலான திருமேனியாக உள்ளமையால், ஆண்டவர்திருமேனி பட்டுவரும் பொருட்கள் அனைத்தும் அருள்பெருக்கும் திருமருந்தாய்-பிணிதீர்க்கும் பெருமருந்தாய் விளங்குகின்றன.

போக சித்தர் உருவாக்கிய ஆண்டவர் திருமேனி தண்டேந்தி இளமைக் கோலத்தில் நின்றருளுகின்றது. இத்திருமேனியின் அழகில் ஈடுபட்டுக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி வழிபடுவதோடு, அத்திருமேனியின் வடிவமைப்பினைச் சிந்திக்கும் போது அரியதொரு சமய வரலாற்றுண்மை புலனாகின்றது. அத்திருக்கோலம், பலர் கருதுமாறு, முதுமைக்கோலம், அன்று என்றும், கரத்திலங்கும் தண்டும் முதுமைக்கான ஊன்றுகோல் அன்று என்றும், ஆண்டவன் இளமைமிக்குக் கையில் தண்டினை ஆயுதமாகக்கொண்டு நின்றுள்ளான் என்றும் அறிதல் வேண்டும். மக்கட்கு வேல் ஆயுதமாக விளங்கியதற்கு முன்னர், தண்டு ஆயுதமாக விளங்கிய உண்மை வரலாற்றில் அறியப்படுகின்றது. ''சேயோன் மேய மைவரை உலகமும்'' எனத்

தொல்காப்பியம் சுட்டிக் காட்டும் மிகப் பழங் காலத்தில், முருகப்பெருமானுக்குரிய படையாக வேலாயுதத்தை அமைத்து வழிபட்டு வருவதற்கு முன்னால் தண்டினை ஆயுதமாக அமைத்து வழிபட்ட நிலை தமிழரிடையே இருந்துள்ளது. தமிழக முருக வழிபாட்டில் அமைந்த அத்தொன்மையான வடிவமைப்பினையே இன்று நாம் காணும் தண்டாயுத பாணி வடிவமைப்பில் காண்கிறோம். இவ்வுண்மையை நாம் ஊகித்துணருமாறு செய்துள்ள பெருமை போகநாதரைச் சார்ந்த தாகும்.

முருகப்பெருமான் திருக்கரத்தில் வேல் ஆயுதமாக அமைந்த பின்னர், அதனை வெற்றியின் அடிப்படையாகவும், ஞானத்தின் சின்னமாகவும் கொண்டு அன்பர்கள், தண்டு ஏந்தி நிற்கும் பெருமானை 'ஞான தண்டாயுதபாணி' (ஞானமாகிய தண்டாயுதத்தைக்கரத்தில் தாங்கியவர்) என்ற பெயரில் வழிபடலாயினர். 'தண்டபாணி' என்னும் பெயருக்கு வேறு வகையான தொரு விளக்கம் செவிவழிச் செய்தியாகக் கேட்கப்படுகிறது. போகநாதர் இப்போது நாம் காணும் திருமேனியைஅமைப்பதற்கு முன்னர்த் தனது யோக தண்டினையும் கமண்டலத்தையுமே வைத்து முருகனை வழிபட்டதாகவும், மக்களின் நன்மை கருதி உருவத் திருமேனியை அமைத்த பின்னர், அத்திருமேனிக்கு முன் வழிபட்ட நிலையைக் குறிக்குமாறு 'தண்டபாணி' (தண்டம்-யோகதண்டம்; பாணி-நீர்க்கரகம், கமண்டலம்) எனப் பெயர் சூட்டினார் என்றும் கூறப்படும். இவ்விளக்கம் பழனி போக மகரிஷி ஆதீனப் பரம்பரை புலிப்பாணி ஆசிரமம் உடையார் வாயிலாகக் கேட்கப்பட்டதாகும்.

போகருக்குப்பின் அவருடைய மாணவர் புலிப்பாணியும் அவருக்குப்பின் அவர் மரபு வழிவந்தவர்களும் ஆண்டவருக்கு வழிபாடு செய்து வரலாயினர். மதுரைத் திருமலை நாயக்க மன்னர் காலத்தில் தளவாயாக விளங்கிய இராமப்பையர் பழனி மலைக்கு வந்த போது, பிராமணரல்லாத அர்ச்சகரிடம் தீர்த்தப் பிரசாதம் வாங்க விரும்பாமையால், அவர் ஏற்பாட்டால் அன்று முதல் ஆதிசைவ மறையவர்கள் ஆண்டவனுக்கு அர்ச்சனை செய்யும் முறை உண்டாயிற்று. புலிப்பாணி மரபில் தோன்றிப் பூசனை செய்து வந்தவர்கள், தொடர்ந்து போகர் சமாதிக்குப் பூசனை செய்து வரவும், ஆலயத்தில் சில உரிமைகள் பெறவும் வகை செய்யப்பட்டது. இச்செய்திகள் அடங்கிய செப்பேட்டின் முழுவாசகத்தைப் பழனித் திருக்கோயில் வெளியிட்டான 'பழனித் தல வரலாறு' நூலிலும் காணலாம்.

போகர் சாபம் பற்றிய விந்தையான செய்திகள் புலிப்பாணி வைத்தியம் 500 என்னும் ஏட்டில் காணப்படுகின்றன. அவை எவ்வாறாயினும் போகர் யோக ஆற்றல் மிக்க சித்தர்களில் ஒருவர் என்பதும், மருத்துவம் முதலிய துறைகளில் வல்லவர் என்பதும், திருமாளிகைத் தேவர் கருவூரார், புலிப்பாணி போன்றோர் அவருக்கு மாணவராக விளங்கினார் என்பதும், அவர்கள் யோக ஆற்றலால் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்திருந்தனர் என்பதும், பழனியில் அவர் இருந்தபோது, காரசார பாடாண உபரச சாதனங்களைக் கட்டி, தண்டபாணித் திருமேனியை அமைத்துத் தந்தார் என்பதும், இறுதியில் அவர் தான் அமைத்த திருமேனிக்கு அருகிலேயே (இப்போதுள்ள ஆலய உட்பிராகாரத்தின் தென்மேற்கு மூலையில்) சமாதி அடைந்தார் என்பதும் யாவரும் அறிந்துணர்ந்த உண்மைகளாகும். இப்போதுள்ள அவர்தம் சமாதிக்கும், ஆண்டவர் கருவறைக்கும் சுருங்கை வழி இருப்பதாகவும் அது இப்போது மூடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. போகர் 7000 என்னும் மருத்துவ நூலும் சில நூல்களும் போகர் எழுதியதாக அறிகின்றோம். பழனித் திருமலையில் போகநாதரின் திருத்தொண்டு, மருத்துவமும் சமயமும் இணைக்கப்பட்ட நிலையில், மக்களினம் உடற்பிணியும், உளப்பிணியும் ஒருங்கே நீங்கப் பெற்று, ஆன்மநலம் சிறந்து பிறவிப் பயன் எய்துதற்காம் சீரிய சாதனமாக அமைந்து விளங்குகின்றது. 'அதிசயங்கள் அனேகமுற்ற பழனிமலை' என்பது அருணகிரி வாக்காகும். போக சித்தரின் ஆற்றலால் உருவாக்கப்பெற்று நின்றருளும் ஆண்டவர்தம் அழகு நலஞ்சான்ற திருமேனியும் அவ்வதிசயங்களில் ஒன்றாக விளங்கும் உண்மை அறிந்தின்புறத் தக்கதாகும்.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

## நிர்வாக அதிகாரிகள் நியமனம்

(1) தென்னாற்காடு மாவட்டம், பண்ருட்டி வட்டம், கொஞ்சிக் குப்பம் அருள்மிகு ஐயனார், விநாயகர், மாரியம்மன் கோயிலுக்கு நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இக்கோயில் பண்ருட்டி வட்டம் நகரம் அருள்மிகு வரதராசப் பெருமாள் கோயிலுடன் இணைக்கப்பட்டுள்ளது. (யு. ஓ. குறிப்பு எண். 18856/81-பி6 நாள் 15-4-81).

(2) தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், கோயில்கண்டங்குடி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப் பெற்றுள்ளார். இக்கோயில் நன்னிலம் வட்டம் திருமீயச்சூர் அருள்மிகு மேகநாத சுவாமி கோயிலுடன் இணைக்கப் பெற்றுள்ளது. (யு. ஓ. குறிப்பு எண். 22344/81 பி6 நாள் 14-4-81).

# பழநிப் பரமன்

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

பழநியைப் பலகாலும் சிந்திக்க வேண்டும்; வந்திக்க வேண்டும். பழநி, பழநி என்று வாய் குளிரச் சொல்லி வாழ்த்த வேண்டும். 'படிக்கின்றிலை பழநித் திருநாமம் படிப்பவர்தாள் முடிக்கின்றிலை'' என்கின்றார் அருணகிரி நாதர். இந்த வாக்கு உயிருள்ள வாக்கு; நமக்கு உயிர் தருகின்ற வாக்கு; உயிரினும் உயர்ந்த உத்தம வாக்கு. சொன்னவர் வாக்கிற் பெரியவர்.

அரும்பு மலராகின்றது; மலர் காயாகின்றது; காய் கனியாகின்றது. அரும்பு-சரியை, மலர்-கிரியை, காய்-யோகம், பழம்-ஞானம்.

''விரும்புஞ் சரியைமுதல்
மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனிபோல்
அன்றோ பராபரமே''

என்பது தாயுமானவப் பெருந்தகையாருடைய அமுத வசனம்.

காய் துவர்க்கும், புளிக்கும்; பழம் தித்திக்கும். வாழைக்காய் துவர்க்கின்றது; மாங்காய் புளிக்கின்றது. வாழைப்பழமும், மாம்பழமும் இனிக்கின்றன. நமது மனம் காயாக இருக்கக் கூடாது; அது அன்பாலும் அருளாலும் முதிர்ந்து பழுக்க வேண்டும். மனம் பழுத்தவர்கள்தான் ஞானிகள். மனம் பழுத்த அடியார்களிடம் ஆசையாகிய துவர்ப்பும், கோபமாகிய புளிப்பும் இருக்கமாட்டா. காமக் குரோத லோப மதமாச்சர்யம் உள்ளது அழுக்கு மனம். இவையில்லாமல் தூயது பழுத்த மனம்.

''செழுக்கமலத் திரளனநின்
சேவடிசேர்ந் தமைந்த
பழுத்தமனத் தடியருடன்
போயினர்யான் பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப்
பொல்லாக் கல்வி ஞானமிலா
அழுக்குமனத் தடியேன்
உடையாய் உன் அடைக்கலமே''

என்கின்றார் மாணிக்கவாசக சுவாமிகள்.

''கடைச் சிறியேன் உளம்பூத்துக்
காய்த்ததொரு காய்தான்
விளக்கமுறப் பழுத்திடுமோ?''
வெம்பி உதிர்ந்திடுமோ?''

என்று ஏங்குகின்றார் இராமலிங்க அடிகள். அந்த ஏக்கமே இன்னும் நம்மில் பலருக்கு வரவில்லை. ஏக்கம் எய்தாதவர் எங்ஙனம் ஆக்கம் பெறுவர்? ஆசையை விட்ட மனம்தான் பழுக்கும். மனிதர்கட்கு உணவிலேதான் எத்தனை ஆசை. அந்தோ! சோற்றாசை விடாத ஒருவன் வேற்றாசையை எங்ஙனம் விடுவான்?

உணவிலே உள்ளஞ் சென்றால் உணர்வு சுருங்கும். அதனால் தவஞ் சுருங்கும். அல்லும் பகலும் உணவு நசையால் உழன்று மாந்தர் மதிமயங்கித் திரிகின்றனர்.

''அற்றைக் கிரைதேடி
அத்தத் திலுமாசைப்
பற்றித் தவியாத
பற்றைப் பெறுவேனோ?
வெற்றிக் கதிர்வேலா
வெற்பைத் தொளைசீலா
கற்றுற் றுணர்போதா
கச்சிப் பெருமாளே''

என்கின்றார் அருணகிரிநாதர்.

விலங்குகளின் உணவு இரை; மனிதனும் விலங்குபோல் அலைந்து உணவு தேடுவதனால் இரைதேடி, என்று இடித்துரைக்கின்றார்.

''சோற்றிலே விருப்பஞ் சூழ்ந்திடில் ஒருவன்
துன்னுநல் தவமெல்லாம் சுருங்கி
ஆற்றிலே கரைத்த புளியெனப் போம்என்
றறிஞர்கள் உரைத்திடல் சிறிதும்
போற்றிலேன் உன்னைப் போற்றிலேன் சுவையில்
பொருந்திய காரசா ரஞ்சேர்
சாற்றிலே கலந்த சோற்றிலே ஆசை
தங்கினேன் என்செய்வேன்! எந்தாய்?''

என்று உலகினர் தன்மையைத் தன்மேல் வைத்துக் கூறி முறையிடுகின்றார் வள்ளலார். எனவே ஆசாபாசங்களை அறவே விட்டார்க்கு உள்ளம் பழுக்கும். அங்ஙனம் ஆசையகன்று உள்ளம் பழுத்த ஞானிகள் பேரின்பப் பெருவாழ்வைப் பெறுகின்றார்கள்.

இந்நிலையை ஆன்ம கோடிகட்கு எளிதில் தரவல்லது பழநியம்பதி. காயைக் கனிய வைக்கும் அப்பழநியம்பதியில் எம்பெருமான் ஞானப் பழமாக வீற்றிருக்கின்றான். தன்னையடைந்தவர்கள் உள்ளங்களையெல்லாம் பழுக்க வைக்கின்றான். பிறக்க முக்திதரும் திருவாரூர், தரிசிக்க முக்திதரும் தில்லை, இறக்க முக்தி காசியிலே. காசியிலே இறந்தால் முக்தி; சிந்தியுங்கள். பல கொலைகளும் எண்ணற்ற களவுகளும் புரிந்த ஒருவன் காசியிலே சென்று ஒரு மரத்தில் கயிறு மாட்டிக்கொண்டு தற்கொலை புரிந்துகொண்டால் முக்தி வருமா? ஒருபோதும் வராது. இதன் உட்பொருள் யாது?

திருவாரூர்-மூலாதாரம், திருவானைக்கா-சுவாதிஷ்டானம், திருவருணை—மணிபூரகம், திருத்தில்லை-அநாகதம், காளத்தி-விசுத்தி, காசி-ஆக்ஞை. ஆக்ஞை என்பது புருவ நடு; புருவ நடுவில் நாட்டத்தை வைத்து எல்லா எண்ணங்களையும் மறக்கின்றவனே காசியில் இறந்தவனாகின்றான்.

திருவளர் ஆரூர் மூலம்
திருவானைக் காவே நாபி
மருவளர் பொழில்சூழ் அண்ணா
மலைமணி பூரம் நீவிர்
இருவருங் கண்ட மன்றம்
இதயமாம் திருக்காளத்தி
பொருவருங் கண்டம் ஆகும்
புருவ மத்தியமே காசி

—திருவிளையாடற்புராணம்.

''கருவிகள்நா லொன்பதும் வேறதாகக்
கண்டகன்ற அதிதநிலை காசியாகும்

—சிவஞானதீபம்

ஆன்மதத்துவம் 24, வித்தியாதத்துவம் 7, சிவதத்துவம் 5, ஆக 36 தத்துவங்களினின்றும் கழன்று, ஆன்மா தத்துவாதீதத்தில் நின்ற அருள்நிலை காசியாகும்.

புருவ நடு, நடு மூக்கு எனப்படும்; அங்கே நாட்டம் வைத்தவன் நானற்றுத் தானாந் தன்மை பெறுபவன்.

நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை
ஓட்டமும் இல்லை உணர்வில்லை தானில்லை
தேட்டமும் இல்லை சிவன் அவன் ஆமே

—திருமந்திரம்.

காசியில் உள்ள பெருமான் எல்லாந் தானான தற்பரன்; விசுவநாதர். விசுவம்-எல்லாம். அந்த விசுவேசப்பெருமானாகிய சிவபெருமான் முருகனைப் பார்த்து, பழம் நீ-பழநி என்று சுட்டிக் காட்டினார். இந்த நுணுக்கமான தத்துவத்தையுணர்ந்த அருணகிரிநாத சுவாமிகள், ''காசியின் மீறிய பழனாபுரி'' என்கின்றார்.

காசியினும் உயர்ந்தது பழநிமலை என்ற அருமையை உன்னுந்தொறும் உன்னுந்தொறும் உள்ளம் உருகுகின்றது. ஆ! ஆ! என்ன அதிசயம்?

''அதிசயம் அநேகமுற்ற பழநிமலைமீது உதித்த அழகே!'' என்ற திருப்புகழடியையும் ஈண்டுச் சிந்தியுங்கள்.

பழநியப்பனை வணங்கினால்தான் மனம் பழுக்கும் என்ற நியதி இல்லை. பழநி என்ற ஊரை வணங்கினாலேயே மனம் பழுத்துவிடுமாம். அத்துணை மகிமையுடைய திருத்தலம் பழநி.

''உனது பழநிமலையெனும் ஊரைச் சேவித்தறியேன்'' என்று கூறி நமக்கு உபதேசிக்கின்றார் எம் அருணகிரிநாதர்.

அஞ்ஞான இருளகற்றும் மெய்ஞ்ஞான பண்டிதன், அருட் செங்கோலை ஊன்றி அரசு புரியுந் திருத்தலம் பழநி, பவநோய் களைந்து முத்திநலம் புரியும் பெரிய வைத்தியநாதனாகக் கந்தநாதன் சந்ததமும் திருவருள் பாலிக்கும் பரமபதம் பழநி. பாடாத ஊமரும் ஆடாத முடவரும் பாடி ஆடும் பழம்பதி பழநி. பழநிமலையைக் கண்டவரைக் கண்டாலும் கலி தீர்க்கும் கருணைக் குன்றம் பழநி. இருமலையும், வினை பெருகித் துன்பந் தரு மலையும்; கரு மலையும், திரண்டு வந்த பாவப் பெரு மலையும் துகளாகச் செய்யும் ஞானத்திருமலை எனத் திகழும் ஒரு மலை பழநி. சிவமலையாந் தவமலையென்று நவநாதரும் புகழும் நவமலை பழநி.

இகபர நலன்களை எளிதில் தரவல்ல பழநிப் பரமனைப் பண்புடன் பணிந்து, பாவப் பிணி தணிந்து, பழநிமலையைப் பணிந்தோரது பதமலரையணிந்து, பரம சுகத்தை அன்பர்கள் பெறுக.

வரதா மணிநீ எனவோரில்
வருகா தெதுதான் அதில்வாரா
திரதாதிகளால் நவலோகம்
இடவே கரியாம் இதிலேது!
சரதா மறையோ தயன்மாலும்
சகலா கமநூல் அறியாத
பரதே வதையாள் தருசேயே
பழனா புரிவாழ் பெருமானே

———

# முருகனும் சம்பந்தரும்

*'வாகீச கலாநிதி'*
திரு. கி. வா. ஜகந்நாதன், M.A.

திருஞானசம்பந்தப் பெருமான் முற்பிறவியில் இருந்த நிலை என்ன? அவர் யாருடைய திரு அவதாரம்? இந்தக் கேள்வியை எழுப்பிச் சேக்கிழாருடைய பெரியபுராணத்தைப் பார்ப்போம். அங்கே சில குறிப்புக்கள் கிடைக்கின்றன. முன்னைப் பிறவியில் சம்பந்தப் பெருமான் சிவபெருமானோடு தொடர்புடையவராக இருந்தார் என்பதை இரண்டிடத்தில் சேக்கிழார் குறிக்கிறார்.

சம்பந்தப்பெருமான் இளம் பருவத்தில் சில சமயங்களில் எதையோ நினைத்துக் கொண்டு அழுபவரைப்போல அழுவாராம்; அதைச் சேக்கிழார்,

''பண்டுதிரு வடிமறவாப்
பான்மையோர் தமைப்பரமர்
மண்டுதவ மறைக்குலத்தோர்
வழிபாட்டின் அளித்தருளத்
தொண்டினிலை தரவருவார்
தொடர்ந்தபிரி வுணர்வொருகால்
கொண்டெழலும் வெருக்கொண்டாற்
போலழுவார் குறிப்பயலாய்''

என்று சொல்கிறார். ''முன்பிறவியில் தம்முடைய திருவடி மறவாப் பான்மையராக இருந்த இப்பெருமானை, சிவபெருமான், தவம்நிறைந்த மறைக்குலத்தவராகிய சிவபாத இருதயர் தம்மைப் பணிந்த வழிபாட்டினால், அவருக்குத் திருமகனாக அளித்தருள, சிவத்தொண்டு இன்னதென்று உலகத்தாருக்கு வெளிப்படுத்தத் திருவவதாரஞ் செய்த இவர், முன்பு தொடர்ந்து பின்பு உண்டான பிரிவுணர்ச்சி ஒவ்வொரு சமயம் பெற்று எழுச்சி பெறவே, அயலான குறிப்பையுடையவராய் அஞ்சினவர் போல அழுவார்'' என்பது இதன் பொருள்.

இங்கே 'பண்டு திருவடி மறவாப் பான்மையோர்' என்றும், 'தொடர்ந்த பிரிவு உணர்வு' என்றும் கூறுவன, சம்பந்தப்பெருமானுக்கும் சிவபிரானுக்கும் முற்பிறவியில் இருந்த தொடர்பைக் குறிப்பவை.

பிரமதீர்த்தத்தில் சிவபாத இருதயர் மூழ்கியபோது அவரைக் காணாமல் இப்பெருமான் தோணியப்பருடைய கோயிலை நோக்கி ''அம்மே, அப்பா'' என்று அழுதார். இதனைச் சொல்லுகிறார் சேக்கிழார்:

''மெய்ம்மேற்கண் துளிபனிப்ப
வேறெங்கும் பார்த்தழுவார்
தம்மேலைச் சார்புணர்ந்தோ
சாரும்பிள் ளைமைதானோ
செம்மேனி வெண்ணீற்றார்
திருத்தோணிச் சிகரம்பார்த்து
அம்மேஅப் பாஎன்றென்
றழைத்தருளி யழுதருள''

தோணியப்பர் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிற் சிகரத்தைப் பார்த்து, 'அம்மே, அப்பா' என்று இப்பெருமான் அழுதார். அதற்கு என்ன காரணம், 'தமக்கும் இறைவனுக்கும் முன்பு உள்ள சார்போ, அல்லது குழந்தையின் இயல்போ என்கிறார் சேக்கிழார். ''தம் மேலைச் சார்பு உணர்ந்தோ'' என்பதனால் இப்பெருமானுக்கும் இறைவனுக்கும் முற்பிறவியில் தொடர்பு இருந்தது என்பது புலப்படும். இந்தத் தொடர்பு எத்தகையது ? திருஞான சம்பந்தர் தேவாரத்தில் திருத்துருத்திப் பதிகத்தில் உள்ள திருப்பாடல் ஒன்று வருமாறு :

''துறக்குமா சொலப்படாய்,
துருத்தியாய், திருந்தடி
மறக்குமா றிலாதஎன்னை
மையல்செய்திம் மண்ணின்மேல்
பிறக்குமாறு காட்டினாய்;
பிணிப்படும் உடம்புவிட்
டிறக்குமாறு காட்டினாய்க்கு
இழுக்கின்ற தென்னையே''

இதில், 'திருந்தடி மறக்குமாறு இலாத என்னை மண்ணின்மேல், பிறக்குமாறு காட்டினாய்' என்ற பகுதி, சம்பந்தர் முன்பு இறைவன் திருவடியை மறவாமல் வாழ்ந்தவர் என்பதையும், பின்பு இறைவன் செயலால் இப்போது பிறந்தார் என்பதையும் தெரிவிக்கின்றது. இந்தக் குறிப்பை எண்ணியே சேக்கிழார் மேற்சொன்ன பாடல்களைப் பாடியிருக்கவேண்டும்.

முருகனுடைய திருவருளால் அநுபூதி பெற்றவரும்; முருகனை ''பெம்மான் முருகன் பிறவான் இறவான்'' என்று சொல்பவருமாகிய அருணகிரிநாத சுவாமிகள், முருகனே ஞான சம்பந்தப் பெருமானாகத் திருவவதாரம் செய்தருளியதாகப் பல இடங்களில் கூறுவார்.

''புழுகொழுகு காழி கவுணியரின் ஞான
புனிதனென ஏடு தமிழாலே
புனலிலெதிர் ஏற அமணர்கழு வேற
அமர்பொருத வீர குருநாதா''

''பாலறாத்திரு வாயால் ஓதிய
ஏறுநீர்க்கெதிர் போயே வாதுசெய்
பாடல் தோற்றிருநாலாம் ஆயிர
சமண் மூடர்
பாரின் மேற்கழு மீதே ஏறிட
நீறிடாத்தமிழ் நாடீடே றிடப்
பாதுகாத்தரு ளாலே கூனிமிர்
இறையோனும்
ஞாலமேத்திய தோர்மா தேவியும்
ஆலவாய்ப்பதி வாழ்வா மாறெனும்
ஞானபாக்கிய பாலா வேலவ
மயில்வீரா''

என்பனபோல வரும் திருப்புகழ்ப் பகுதிகள் இந்தக் கருத்தைத் தெரிவிக்கின்றன.

பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர் இந்தக் கருத்தைச் சொன்னார். அவருக்கு முன் சேக்கிழார் காலத்தில் வாழ்ந்திருந்த ஒட்டக்கூத்தரும், ஞானசம்பந்தர் முருகன் அவதாரம் என்ற கருத்தைச் சொல்கிறார். அவர் பாடிய தக்கயாகப் பரணியில் 'கோயிலைப் பாடியது' என்ற பகுதியில், கொற்றவையின் திருமுன் கலைமகள், ஞானசம்பந்தர் சமணரை வாதில் வென்ற வரலாற்றைச் சொல்வதாக ஒரு செய்தி வருகிறது. அங்கே அந்த வரலாற்றையே ஒட்டக்கூத்தர் பாடுகிறார்.

தேவி கலைமகளைப் பார்த்து அருளிச் செய்கிறாள்.,

''வருகதை தெய்வமகள்என் மருமகள் வள்ளி
வதுவை
மனமகிழ் பிள்ளைமுருகன் மதுரையில்
வெல்லுமினிய
தொருகதை சொல்லுதவள ஒளிவிரி செவ்விமுளரி
ஒளிதிகழ் அல்லிகமழும் ஒருமனை வல்லி
எனவே''

'என் மருமகளாகிய வள்ளியின் மணத்தைப் பெற்று மகிழ்ந்த பிள்ளையாகிய முருகன் மதுரையில் வெல்லும் இனிய கதையைச் சொல்வாயாக' என்று பணிக்கிறாள் தேவி. இதைக் கேட்டுக் கலைமகள் சொல்கிறாள் :

''எழுமலை சொல்லும் அசனி இளமயில் வள்ளி
கணவன்
இறைமலை வில்லி புதல்வன் இகன்மகன்
ஐயைகளிறு
கழுமலம் உய்ய விரவு கலியுக எல்லை பொருத
கதைகளில் உள்ளத மணர் கழுமிசை
கொள்வதிதுவே''

இங்கும். 'மலையைக் கொன்ற இடியை ஒப்பவன், வள்ளிகணவன், சிவபிரான் புதல்வன், அம்பிகையின் பிள்ளை, கழுமலமாகிய சீகாழி உய்யும்படி வந்து பொருத கதை' என்கிறாள்.

இந்த இரண்டு பாடல்களிலும் முருகனே ஞானசம்பந்தராக அவதாரம் செய்தவன் என்ற கருத்தைத் தெளிவாகச் சொல்கிறார் ஒட்டக்கூத்தர். சேக்கிழார் இந்தக் கருத்தைக் குறிப்பாகக்கூடச் சொல்லவில்லை. திருஞானசம்பந்தரைப் பிள்ளையார் என்று குறிப்பார். அவர் அம்மையின் முலைப்பாலை உண்டமையால்,

''யாவருக்கும் தந்தைதாய்
எனும்இவர் இப்படியளித்தார்
ஆவதனால் ஆளுடைய
பிள்ளையாராய்''

என்று பாடுகிறார் சேக்கிழார். சேக்கிழார் பாடிய பெரியபுராணத்துக்கு மூலநூல் திருத்தொண்டத் தொகை, சுந்தரர் பாடிய அது முதல் நூல். அதன் வழிநூல் நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி. அதன் விரிநூல் பெரியபுராணம். ''திருத்தொண்டத் தொகை விரி'' என்று சேக்கிழாரே சொல்வார்.

நம்பியாண்டார் நம்பி சேக்கிழாருக்கு முன் வாழ்ந்தவர். முதலாம் இராசராச சோழன் காலத்தில் இருந்து, அவன் திருமுறையைக் கண்டுபிடிக்கத் துணைசெய்ததோடு, அவற்றை வகைப்படுத்தவும் உதவி செய்தவர். அவர் திருஞானசம்பந்தரைப் பற்றி ஆறுநூல்கள் பாடியிருக்கிறார். அவைகள், ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, ஆளுடையபிள்ளையார் திருச்சண்பை விருத்தம், ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை, ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை, ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை என்பன. அந்த நூல்களில் ஞானசம்பந்தரைப் பற்றிய பல செய்திகளைக் காணலாம். சேக்கிழார் அவற்றையெல்லாம் பார்த்துப் பலவற்றைப் பெரியபுராணத்தில் சொல்லியிருக்கிறார். நம்பியாண்டார் நம்பிகள் திருவாக்கில் காணப்படும் சில செய்திகள் பெரியபுராணத்தில் இல்லை. அவற்றுள் ஒன்று சம்பந்தருடைய முன்னை நிலை.

நம்பியாண்டார் நம்பி, சம்பந்தர் முருகனுடைய திருவவதாரம் என்பதைக் குறிப்பாகப் புலப்படுத்துகிறார். அவற்றை இனிப் பார்ப்போம் !

முருகனை மலைமகள் புதல்வன் என்பது வழக்கு. ''இழையணி சிறப்பிற் பழையோள் குழவி'' என்பது திருமுருகாற்றுப்படை. முருகனுக்குரிய இந்தத் தொடரால் சம்பந்தப் பெருமானைச் சொல்லுவார் நம்பிகள்,

''காழி நாடன் கவுணியர் தலைவன்
மாழை நோக்கி மலைமகள் புதல்வன்'' (1)

''பொற்பமர் தோள நற்றமிழ் விரக
மலைமகள் புதல்வ கலைபயில் நாவ'' (2)

என்பவை ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவையில் வருவன.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியில் ஒரு பாட்டு, அகத்துறையமைந்தது. பாங்கன் தலைவனை வியத்தல் என்னும் துறை அது. தலைவி இன்ன இடத்தில் இன்ன எழிலோடு இருக்கிறாள் என்று தலைவன் சொல்ல, அது கேட்ட பாங்கன் அங்கே சென்று அவளைப் பார்க்கிறான். 'அறிவிற் சிறந்த நீ ஒரு பெண்ணிடம் மயங்கலாமா?' என்று தலைவனை இடித்து உரைத்துவிட்டு வந்தவன் அவன். இப்போது தலைவியைப் பார்த்த பிறகு, 'இந்த எழில் மங்கையைப் பார்த்து இங்கேயே மயங்கி நின்றுவிடாமல் நம்மிடம் வந்து செய்தியைச் சொன்ன அவன் மன உறுதியைப் பாராட்டத்தான் வேண்டும்' என்று வியந்து கூறுகிறான். பாங்கன் தலைவனை வியந்து சொல்வதாக அமைந்த பாட்டு அது. 'இந்தப் பெண்ணின் கண்ணாகிய அம்புக்கு இலக்காகியும் தன் இயல்பு மாறாமல் வந்த என் தலைவனுக்கு ஒப்பானவர் இவ்வுலகத்தில் யார் இருக்கிறார்கள்?' என்று வியக்கிறான்.

''மயில்ஏந் தியவள்ளல் தன்னை அளிப்ப
மதிபுணர்ந்த
எயில்ஏந் தியசண்பை நாதன் உலகத்து
எதிர்பவர் யார்?
குயில்ஏந் தியபொழில் சோங்கேந்
தியகொம்பின் அம்பு தழீஇ
அயில்ஏந் தியமலர் கண்டுள
னாய்வந்த அண்ணலுக்கே''

'குயில்களைத் தன்பால் தாங்கிய சோலையில், கோங்கரும்பு போன்ற தனங்களை ஏந்திய பூங்கொம்புபோன்ற தலைவியினுடைய அம்பின் இயல்பைப் பொருந்திக் கூர்மையைத் தாங்கிய மலரைப் போன்ற விழிகளைக் கண்டும், உயிரோடு வந்த தலைவனுக்கு, மயிலைக் கொடியாக ஏந்திய முருகனைத் தன்பால் உண்டாக்குவதற்காக, சந்திரனோடு சேர்ந்த மதில்களை உடைய சீகாழிக்குத் தலைவனாகிய சம்பந்தப் பெருமானுக்குரியஉலகத்தில் ஒப்பானவர் யார்? என்பது இதன் பொருள். 'சண்பைநாதன் உலகத்து அண்ணலுக்கு ஒப்பாவர் யார்?' என்று முடியும்.

இதில் சம்பந்தப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராக வைத்துப் பாடுகின்றார் நம்பிகள். மயிலைக் கொடியாக ஏந்திய வள்ளல் முருகன். அவனைச் சம்பந்தப்பெருமானாக உலகத்துக்கு அளிக்க வேண்டும் என்று சீகாழி எண்ணியதாம். சிவபெருமான் அளித்த புதல்வன் முருகன், அவனைச் சம்பந்தராகத் தர எண்ணிய சீகாழி,ஓரளவு சிவபெருமானைப் போலத் தோற்றம் அளிக்க விரும்பியதாம். சிவபெருமான் தன் தலையில் மதியை வைத்திருக்கிறான். அதுபோல நாமும் நம் சிகரத்தில் மதியை வைக்கலாம் என்று தன் உறுப்பாகிய மதிலில் சந்திரனை அணிந்திருக்கிறதாம். இங்கே சண்பைநாதனாகிய சம்பந்தர் முருகன் திருவவதாரம் என்ற குறிப்பை வைத்திருக்கிறார். முருகனைத் தரத் தானும் சிவபெருமானைப்போலச் சந்திரனைச் சூடிக்கொண்டதாகக் கற்பனை செய்கிறார்.

ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகத்தில் ஒரு பாட்டு; அதுவும் அகத்துறை அமைந்த பாட்டே, 'நொதுமலர் வரைவுணர்த்தித்தோழி வரைவுகடாதல்' என்னும்துறை. தலைவனும் தலைவியும் களவுக் காதல் செய்து வரும்போது அவளை அவன் மணக்கும்படி செய்யவேண்டுமென்று தோழி எண்ணுகிறாள். 'அயலார் இவளை மணக்க முயலுகிறார்கள். அதற்குள் நீ இவளை மணப்பதற்குரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டும்' என்று சொல்கிறாள். இந்தப் பாடலிலும் பாட்டுடைத் தலைவராகச் சம்பந்தர் வருகிறார்.

'சரதம் மணம்மலி பரிசம் வருவன;
தளர்வில் புகலியர் அதிபன், நதிதரு
வரதன், அணிதமிழ் விரகன், மிகுபுகழ்
மருவு சுருதிநன் மாலயின் அமர்தரு
விரதம் உடையை நின்இடையி னவண்மனம்
விரைசெய் குழலியை அணைவ தரிதென
இரதம் அழிதர வருதல் முனம்இனி
எளிய தொருவகை கருது மலையனே''

'மலைக்குத் தலைவனே, இவருடைய மணத்தின் பொருட்டு நிரம்பிய பரிசங்கள் வருகின்றன; இது நிச்சயம். தளர்ச்சியில்லாத சீகாழிப்பதியில் உள்ளார்க்குத் தலைவனும், நதிதரு வரதனும், அலங்காரம் செய்யும் தமிழ் விரகனும் ஆகிய ஞானசம்பந்தப் பெருமானுடைய, மிக்க புகழ் பொருந்திய சுருதிமலையில் தங்கும் தவமுடையாய் நீ ; நின்னிடத்தில் மனமானது, 'இனிமேல் அங்குள்ள மணமுடைய குழலையுடைய தலைவியைச் சேர்வது அரிது' என்று சுவை அழியும்படியான நிலைவருவதற்கு முன், இப்போதே அவனை மணப்பதற்குரிய எளிய வழி ஒன்றை ஆராய்ந்து மேற்கொள்வாயாக' என்பது இப்பாடலின் பொருள்.

இங்கே ஞானசம்பந்தப் பெருமானை மூன்று வகையாகச் சிறப்பிக்கிறார் நம்பிகள். புகலியர் அதிபன், நதிதருவரதன், தமிழ் விரகன் என்பன அவை. புகலியர் அதிபன் என்பது அவர் திருவவதாரம் செய்த சீகாழித் திருப்பதியை எண்ணி அமைத்த பெயர். மூன்றாவதாகச் சொல்லும் தமிழ் விரகன் என்பது சம்பந்தப் பெருமானே தம்மைத் தம் தேவாரப் பாசுரங்களில் சொல்லிக் கொள்ளும் தொடர்.

இடையில் உள்ள நதிதரு வரதன் என்பது தான் ஆராய்வதற்குரியது. அதற்கு நதியைத் தரும் வரதன் என்றும், நதியால் தரப்பெற்ற வரதன் என்றும், இருவகையாகப் பொருள் விரிக்கலாம். ஞானசம்பந்தர் எந்த ஆற்றையும் உண்டாக்கியதாக வரலாறு இல்லை. அப்படியே நதியால் தரப்பெற்ற வரதன் என்பதும் ஞானசம்பந்தர் வரலாற்றில் இல்லை.

என்றாலும் நதியால் தரப்பெற்ற வரதன் என்பது முருகனுக்குப் பொருத்தமான பெயர். அவன் கங்கையால் தரப்பெற்றவனாதலின் காங்கேயன் என்னும் பெயர் பெற்றான். ''நதிபுத்திர'' என்று அநுபூதியிலும், ''ஆயிரமுகத்து நதி பாலனும்'' என்று திருவகுப்பிலும் அருணகிரிநாதர் முருகனை நதிதரு வரதனாகக் கூறுகிறார்.

எனவே, 'நதிதரு வரதன்' என்பது முருகனைக் குறிக்கும் தொடராகவே கொள்வதற்குரியது. சம்பந்தரைச் சொல்லும்போது முருகனுக்குரிய பெயரைச் சொல்வதற்குக் காரணம் முருகனே சம்பந்தராக அவதரித்தான் என்பதே

எனவே நம்பியாண்டார் நம்பிகள் முருகனுக்குரிய பெயர்களாகிய, ''மலைமகள் புதல்வன்'', ''மயில் ஏந்திய வள்ளல்'' ''நதிதரு வரதன்'' என்பவற்றால் சம்பந்தரைக் குறித்ததால், அவரும் முருகனே சம்பந்தப் பெருமானாக எழுந்தருளினான் என்ற கருத்துடையவர் என்பது தெளிவாகும்.

இந்தக் கருத்தை முதன் முதலாகச் சொன்னவர் நம்பியாண்டார் நம்பிகள், பிறகு கூறியவர் ஒட்டக்கூத்தர், அப்பால் பலகாலும் கூறியவர் அருணகிரிநாதர் என்பதை இதுகாறும் எழுதியவற்றால் உணரலாம்.

***

# திருமுருகாற்றுப்படை*

ந.ரா. முருகவேள், M.A., M.O.L.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)

## முன்னுரை

திருமுருகாற்றுப்படை செந்தமிழ்த் தெய்வமாகிய முருகப்பெருமானின் துதி நூல்கள் பலவற்றுள் மிகவும் முதன்மையும், தொன்மையும் வாய்ந்தது. முருகன் அடியார்கள் அனைவருமே, இதனைத் தொன்றுதொட்டுப் போற்றிப் பாராயணம் செய்து வருகின்றனர். இங்ஙனம் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளாகப் போற்றப்பெற்று வரும் திருமுருகாற்றுப்படையின் சிறப்பு, எல்லையற்றதாகும்.

## கச்சியப்பர்

இற்றைக்குச் சற்றேறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டு வாழ்ந்திருந்தவரும், முருகனின் வரலாறு கூறும் கந்தபுராணம் என்னும் செந்தமிழ்ப் பெருநூலைப் பாடியருளியவரும் ஆகிய கச்சியப்ப சிவாசாரியர், திருமுருகாற்றுப்படையினைப் பெரிதும் மதித்துப் போற்றி நாடோறும் பாராயணம் செய்து வந்தனர். திருமுருகாற்றுப்படையினை அருளிய ஆசிரியர் நக்கீரனார்பால் கச்சியப்பசிவாசாரியர் பெருமதிப்பும் பெரும்பக்தியும் கொண்டிருந்தார். கந்த புராணத்தில் முருகனைப் பற்றித் துதிக்குங்கால், முருகனின் ஆறுபடைவீடுகளின் பெயர்களைப் பெரிதும் போற்றி, அப்பெயர்கள் எதுகைத் தொடையில் அழகுற அமையும்படி சிறந்த துதிச் செய்யுட்களை அவர் அருளிச் செய்திருக்கின்றார். திருமுருகாற்றுப்படையினைப் பின்பற்றியே, கச்சியப்ப சிவாசாரியர் தமது கந்தபுராணத்தில், முருகனின் ஆறுபடைவீட்டுத் தலங்களைப் பற்றிய துதிப்பாடல்களை அமைத்தருளினார் என்பது தெளிவு.

மேலும், கந்தபுராண நூலின் முடிவில் தமது பணிவுடைமை தோன்றக் கச்சியப்ப சிவாசாரியர் அருளிச் செய்திருக்கும் பின்வரும் கருத்தமைந்த பாடலும், இங்கு நாம் அறிந்து இன்புறுதற்குரியது. ''சிவபெருமான், பிரமன் திருமால் உமை ஆகியோர் செய்கின்ற பூசைகளை ஏற்றுக்கொள்வது போலவே, அவர்களை நோக்க மிகவும் இழிந்தவர்களாகிய இவ்வுலக மக்களின், எளியவழிபாட்டையும் வெறுக்காமல் விரும்பி ஏற்றுக்கொண்டு அருள்புரிகின்றார். அதுபோன்று, பொய்யற்ற புலமை வாய்ந்த ஆசிரியர் நக்கீரனார் போன்ற மாபெரும் புலவர்களின் பாடல்களையெல்லாம் ஏற்றுக்கொண்டருளிய முருகன், மிகவும் எளியவனாகிய என்னுடைய புலமையற்ற சிறு சொல்லாகிய இக்கந்த புராண நூலையும், வெறுக்காமல் விரும்பி ஏற்றுக்கொண்டு அருள்புரிவான்'' என்னும் கருத்தமைய,

''பொய்யற்ற கீரன் முதலாம் புலவோர் புகழ்ந்த
ஐயற்கு எனது சிறுசொல்லும் ஒப்பாகும்; இப்பார்
செய்யுற்றவன் மால்உமை பூசைகொள் தேவ தேவன்
வையத்தவர் செய் வழிபாடும் மகிழும் அன்றே.''

என்று அழகுறப் பாடித் துதிக்கின்றார். இப்பாடலால், பெரும் கவிஞராகிய கச்சியப்ப சிவாசாரியர்க்குத் திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரரிடம் எத்துணைப் பெருமதிப்பும் பக்தியும் இருந்தன என்று நாம் எண்ணி உணரலாம்.

## அருணகிரிநாதர்

இங்ஙனமே முருகன் அடியார்களுள் பெருமுதன்மை வாய்ந்தவரும், இற்றைக்குச் சற்றேறத்தாழ 600 ஆண்டுகட்கு முன்னர் விளங்கியிருந்தவரும் ஆகிய அருணகிரிநாதரும், திருமுருகாற்றுப்படையினை வியந்து புகழ்ந்து தமது திருப்புகழில் பல இடங்களில் குறிப்பிட்டு அருளியுள்ளார்.

''வளவாய்மை சொற்பரபந்தம்
உள கீரனுக்கு உகந்து
மலர்வாய் இலக்கணங்கள் இயல்போதி
அடிமோனை சொற்குஇணங்க
உலகாம் உவப்ப என்றுஉன்
அருளால் அளித்துகந்த பெரியோனே'' [1]

''நக்கீரர் ஓதிய வளமைசேர்
தமிழுக் காக நீடிய கரவோனே'' [2]

''கீதஇசை கூட்டி வேதமொழி சூட்டு
கீரர்இயல் கேட்ட க்ருபைவேளே'' [3]
—திருப்புகழ்

''நக்கீரர் சொல் தித்தித்ததே''
—கந்தர் அந்தாதி 54

* பழநி அருள்மிகு பழநியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரியில், 31-3-81 அன்று நிகழ்ந்த ''திருமுருகாற்றுப் படைக் கருத்தரங்கில்'' வழங்கப் பெற்ற ஆய்வுக் கட்டுரை.

'வாக்கிற்கு அருணகிரி' என்னும் மா பெரும் புகழ் பெற்ற அருணகிரிநாத சுவாமிகள் அவர்களே, தமது ஒப்புயர்வற்ற சந்த நலம் செறிந்த செந்தமிழ்த் திருப்புகழ்ப்பாடல்களில், திருமுருகாற்றுப்படையினை, 'வளவாய்மை சொற்பிரபந்தம்' என்றும்; 'வளமைசேர் தமிழ்' என்றும்; 'வேதமொழி' என்றும் மிகவுயர்த்துப் புகழ்ந்து, ''நக்கீரர் சொல் தித்தித்ததே'' என்றும் அருளிச் செய்வாராயின், இந்நூலின் பெருமையை அளவிட்டுக் கூறுதல் நம்மால் இயலுமோ?

## சிவப்பிரகாசர்

இவ்வாறே வாழையடி வாழையாகத் தொன்றுதொட்டு வந்த பெருஞ் சான்றோர்கள் ஆகிய முருகன் அடியார்கள் அனைவருமே, திருமுருகாற்றுப்படையினைத் தலைசிறந்த தெய்வத் திருநூலாகக் கொண்டு, ஓதி ஓதி உவந்தனர் என்பதில் ஐயமில்லை. முருகனைப் பற்றிய நூல்கள் எல்லாவற்றுள்ளும் பழமையும், பெருமையும், முதன்மையும் வாய்ந்து விளங்குவது திருமுருகாற்றுப்படையே. இது பற்றித்தான் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், ''பாவுள் முன்னுற வந்து நிற்கும் முருகாற்றுப்படை'' என இதனைச் சிறந்தெடுத்துப் பாராட்டியுள்ளார். அதற்கேற்ப இந்நூல் 'பத்துப்பாட்டு' என்னும் சங்கத் தொகை நூலில் முதலாவதாக அமைந்துள்ள திறனும், இங்கு நாம் நினைவு கூரத்தக்கது.

மேலும் அவர், திருமுருகாற்றுப்படையின் சிறப்பைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: ''முருகன் தணியா அதிமோக தயாபரனாய், பணி யா?என வள்ளி பதம் பணிந்து,அவ் வள்ளியம்மையின் இனிய மொழிகளைச் செவிமடுப்பதில் அளவிலா ஆர்வம் கொண்டு திகழ்கின்றான் எனினும், யாரேனும் அன்பர் ஒருவர், எங்கேனும் இருந்து திருமுருகாற்றுப்படையினை ஓத முற்படுவாராயின், முருகப்பெருமான் வள்ளியம்மையின் இனிய சொற்களையும்கூடப் புறக்கணித்துவிட்டு; தன்னுடைய பன்னிரண்டு செவிகளையுமே ஒரு சேரக் குவித்து, அவ்வன்பரின் திருமுருகாற்றுப்படைப் பாராயணத்தினைக் கேட்டு மகிழ்ந்து அருள்புரிகின்றான். முருகனின் பன்னிரு செவிகளும் பருகும் அமுதமாகத் திருமுருகாற்றுப்படை திகழ்கின்றது. அதனை ஓதி வழிபடும் அடியவர்கள் விரும்பி நினைப்பவற்றையெல்லாம், அவர்கள் நினைத்தபடியே, முருகன் விரும்பி நிறைவேற்றியருளுகின்றான்'' எனச் சிவப்பிரகாசர் பாடுகின்றார்.

இன்னன நினைந்து கீரன்
இலங்கிலை நெடுவேற் செம்மல்

பன்னிரு செவியும் ஆரப்
பருகு அமுதாகி, ஓதின்

உன்னி உன்னி யாங்கு, இங்கு
உதவுவ தாகிப், பாவுள்

முன்னுற வந்து நிற்கும்
முருகாற்றுப் படை, மொழிந்தான். (1)

பொன்அவிர் சுணங்கு பூத்த
புணர்முலைக் கருங்கண் வள்ளி

கன்னலும் அமுதும் தேனும்
கைக்கும்இன் தீஞ்சொல் மாற்றித்

தன்நிகர் புலவன் கூறும்
தமிழ், செவி தாழ்த்துக் கேளா

அந்நிலை மனம் களித்தான்;
அறுமுகம் படைத்த கோமான்

—சீகாளத்திப்புராணம்.

## ஆற்றுப்படை

தமிழிலுள்ள பிரபந்தங்கள் என்னும் சிற்றிலக்கிய வகைகள், தொண்ணூற்றாறு வகைப்படும் என்பர். அவற்றுள் ஆற்றுப்படை என்பதும் ஒன்று. ஆற்றுப்படை என்னும் சொல், வழிப்படுத்துதல், வழி கூறி அனுப்பிவைத்தல் எனப் பொருள்படும். (ஆறு படு ஐ). சிறுபான்மை வருவித்தல் எனவும் அதற்குப் பொருளுண்டு. 'முருகு ஆற்றுப்படுத்த உருகெழுவியன் நகர்' என்னும் வரி, முருகனை வருமாறு வழிப்படுத்தின அழகு பொருந்திய அகன்ற நகரம் (கோயில்), எனப்பொருள் படுதல் காணலாம்.

ஆற்றுப்படை என்னும் நூல் வகையானது, புலவர் ஆற்றுப்படை, பாணர் ஆற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, விறலி ஆற்றுப்படை என நான்கு வகைப்படும். ஓர் அரசன் அல்லது வள்ளலிடம் சென்று பரிசு பெற்றுத் திரும்பி வரும் புலவன் ஒருவன், வழியில் தன்னை ஒத்த மற்றொரு புலவனைச் சந்தித்து,"யான் இன்ன வள்ளலிடம் சென்றேன்; இன்ன இடத்தில் அவனைக் கண்டேன்; அவனை இவ்விவ்வாறு பாடினேன்; அவனுடைய இயல்புகள் இத்தகையவை; இத்துணைப் பொருள்களை அவன் எனக்குப் பரிசிலாக வழங்கினான்; நீயும் அவனிடத்துச் சென்று பாடினால், பரிசில் வழங்கப் பெறுவாய்'' என்று, அவ் வள்ளலைச் சென்று காண்பதற்குரிய வழி முதலிய விவரங்களையெல்லாம் விளக்கமாகக் கூறி அனுப்புவதாகப் பாடப்பெறுவது, புலவர் ஆற்றுப்படை எனப்படும். இவ்வாறே பாணர், பொருநர், விறலியர் என்பவரும், தமக்குள் ஒருவர் மற்றொருவரை ஆற்றுப்படுத்திக்கொள்ளும் முறையில் பாடப்பெறும் நூல்கள், அவரவர்களின் பெயர்களால் வழங்கும்.

''கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கம்....."

என்பது ஆற்றுப்படை நூல்களுக்குத் தொல்காப்பியப் புறத்திணைஇயல் வகுக்கும் இலக்கணம் ஆகும்.

## முருகாற்றுப்படை

ஆற்றுப்படை நூல்கள் பலவற்றுள்ளும் தலைசிறந்தது திருமுருகாற்றுப்படை எனலாம். ஆதல்பற்றியே, பத்துப்பாட்டு என்னும் சங்கத்

தொகை நூலில், பிற எல்லாப் பாடல்களுக்கும் முன்னதாக, முதற்கண் திருமுருகாற்றுப்படை அமைக்கப்பட்டுள்ளது. இது புலவர் ஆற்றுப் படை என்றே பெயர் வழங்குவதற்குரியது. ஆயினும் பொருளின் முதன்மையும், சிறப்பும் பற்றி முருகாற்றுப்படை யெனவே தொன்று தொட்டு வழங்கிவருகின்றது. நம்மை அனைய அரசனோ அல்லது வள்ளலோ ஆகிய மனித ரிடத்து ஆற்றுப்படுத்தும் முறையில் பாடாமல், எல்லாம்வல்ல இறைவனிடத்தில் ஆற்றுப்படுத் தும் நிலையில், இதனை முதன் முதலாகப் பாடியருளிய ஆசிரியர் நக்கீரர் பெருமானின் கவிதைத்திறம், ஒரு சிறந்த புரட்சிப் புதுமைச் செயல் எனப்போற்றிப் புகழ்தற்குரியதாகும். சங்கத் தமிழ்த் தலைமைப் புலவராகிய நக் கீரரின் தமிழ்ப்புலமைக்கும், தலைசிறந்த சமய உணர்வுக்கும், இந்நூல் ஒப்புயர்வற்ற சான்றாக இலங்குகின்றது.

முருகன் அருளைப் பெற்ற அருளாளன் ஒருவன், அதனைப் பெறாத அடியவன் ஒரு வனுக்கு, முருகனின் சிறப்பும், அவன் எழுந் தருளியிருக்கும் தலங்களும், அவற்றின் பெரு மைகளும், அத் தலங்களில் ஒன்றற்குச் சென்று முருகனை வழிபடும் முறையும் கூறி, அவனை முருகனிடத்து வழிப்படுத்தும் முறையில், இந் நூல் பாடப் பெற்றுள்ளது.

## பழம்பாடல்

ஆசிரியர் நக்கீரர் அருளிய திருமுருகாற் றுப்படையினை நாடோறும் ஓதி முருகனை வழிபடுதலால், நாம் எல்லா நலங்களும் பெற லாம்; நம்முடைய கவலைகள் எல்லாம் நீங்கும்; முருகன் நமக்கு இரங்கி நம்முன் வந்து தோன் றிக் காட்சி தந்து அருள்புரிவான். இது பெரி யோர்கள் பலரும் தம்முடைய வாழ்வில் கண்ட அனுபவ உண்மை. இதனை ஒரு பழம் பாடல் இனிது தெளிவுறக் குறிப்பிடுகின்றது.

நக்கீரர் தாம்உரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறும் சாற்றினால்,—முற்கோல
மாமுருகன் வந்த மனக்கவலை தீர்த்தருளித்
தான்நினைத்த எல்லாம் தரும்.

# திருமுருகாற்றுப்படையின் கருத்துச் சுருக்கம்

## 1. திருப்பரங்குன்றம்

உலகத்திலுள்ள உயிர்த் தொகுதிகள் அனைத்தும் மகிழும்படி எழுந்து, மேருமலையை வலமாகச் சுற்றி வருபவன் சூரியன். அவனைப் பல சமயத்தவர்களும் புகழ்ந்துபோற்றுவர். அத்தகைய சூரியன், கடலின்கண் உதயம் செய் தாற்போல, மயிலின்மீது அமர்ந்து விளங்கு பவன் முருகன்.

1. நீல நிறம் வாய்ந்தது கடல்; அதுபோல முருகன் ஏறிவரும் மயில் நீல நிறமுடையதாகத் திகழ்கின்றது. 2. சூரியன் சிவந்த நிறம் உடை யவனாக இருக்கின்றான்; அதுபோல, முருக னும் செந்நிறம் உடையவனாகத் திகழ்கின் றான். 3. சூரியன் உலகின் புற இருளை நீக்கு கின்றான்; அதுபோல முருகன் தன்னை வழி படும் அடியவர்களின் அக அருளைப் போக்கி யருள்கின்றான். 4. சூரியனுடைய கதிர்கள் ஒளியைத் தந்து உயிர்களுக்கு நலம் செய்கின் றன; அதுபோல முருகனின் திருவருளும் உயிர் களுக்கு நலம் பல விளைவித்துப் பாதுகாத்து அருள்கின்றது. 5. சூரியனைப் பல சமயத்தவர் களும் போற்றுதல் போல, முருகனைப் பல சமயத்தவர்களும் விரும்பிப் போற்றுவர். இவ் வாற்றால், முருகன் உலகுக்கு ஒரு பெரும் ஞான சூரியனாக, எங்கும் என்றும் நீக்கமின்றிப் பரவிச் சுடர்விடும் ஒப்பற்ற ஒளி வடிவினனாகத் திகழ்கின்றான்.

அவனுடைய திருவடிகள் அழகும் வலிமை யும் உடையவை; தம்மை வந்து புகலடைபவர் களின் தீவினையையும் அறியாமையையும் போக்கிக் காத்தருள்பவை. அவனுடைய திருக் கைகள் இடியைப் போலப் பகைவர்களை அழிக்கவல்லன. அவன் குற்றமற்ற கற்பினை யும், ஒளிபொருந்திய நெற்றியினையும் உடைய தெய்வயானையின் கணவன். வெண் கடம்ப மரத்தின் பூவால் தேர்ச் சக்கரம் போலத் தொடுக்கப் பெற்ற குளிர்ந்த உருண்ட மலர் மாலைகள், அவன் மார்பில் அசைந்துகொண்டி ருக்கும்.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired,
HR&CE Administration Dept

## சூரர மகளிர் :

பெரிய மூங்கில்கள் ஓங்கி வளரும் வான ளாவிய மலையில், ஒரு சோலை உள்ளது. அங்கே தம் தெய்வத் தன்மையால் அச்சத்தை விளைவிக்கின்ற வானுலகப் பெண்கள் பலரும் கூடுவர்; அழகு விளங்கும் மலை இடமெல்லாம் எதிரொலி எழும்படியாகப் பாடி ஆடுவர். அவர்கள் கிண்கிணி சூழ்ந்து ஒளிபொருந்திய சிவந்த சிறிய பாதங்களையும், திரண்ட கால் களையும், வளைந்து ஒடுங்கிய இடையையும் உடையவர்கள். அவர்களின் தோள்கள் மூங் கிலைப் போன்றிருக்கும். அவர்களின் மெல்லிய பூந்துகில், இந்திர கோபப் பூச்சியின் நிறத்தைப் போல, இயல்பாகவே சிறந்து விளங்கும். அது செயற்கையாகச் சாயம் தோய்க்கப் பெறா மல், இயற்கையாகவே செந்நிறம் வாய்ந்தது. பல மணிகள் கோத்ததும், ஏழு வடங்கள் கொண்டதும் ஆகிய மேகலையை அவர்கள் அரையில் அணிந்திருப்பார்கள். அவர்களின் அழகு இயற்கையாகவே அமைந்ததாகும். எவ ருடைய கையினாலும் செயற்கையாகச் செய் யப்பட்டதன்று அது. அவர்களால் அணியப் பெற்றஒளிமிகுந்த அணிகலன்கள் சாம்பூநதம் என்ற பொன்னால் இயன்றவை. அவர்களின் மேனி குற்றமற்றது. அதன் மினுமினுப்பும் ஒளியும், நெடுந்தூரத்தைக் கடந்து செல்லும் தன்மையுடையன.

இச்சூரர மகளிர்க்குத் துணை செய்யும் தோழிப்பெண்கள் சிலருளர். அவர்கள், கோதி

வகிர்ந்து கடைகுழன்று பளபளப்பு மிக்க சூரர மகளிரின் கூந்தலில், வெட்சிப் பூக்களை விடுபூவாகத் தூவுகின்றனர்; அதற்கு நடுவே குவளைப் பூவின் இதழ்களைக் கிள்ளி இட்டு முடிக்கின்றனர்; சீதேவி என்னும் தெய்வ உத்தியையும், வலம்புரிச் சங்கு வடிவாகச் செய்த அணிகலனையும், தலையில் வைத்தற்குரிய இடத்தில் வைக்கின்றனர். நெற்றியிலே மணங் கமழும் திலகம் தீட்டுகின்றனர். அதன்கண் அழகுறத் தங்கும்படி சுறாமீனின் திறந்த வாயைப் போன்ற அணிகலனை அணிகின்றனர்; நன்றாக முடித்த கொண்டையில் செண்பகப் பூவைச் செருகுகின்றனர்; அதன்மேல் மருதமலர்க் கொத்துக்களை இடுகின்றனர்; அதற்கு மேலே செந்நிற அரும்புகளைச் சேர்த்துக் கட்டிய மாலையை வளைவாகச் சூட்டுகின்றனர்; அசோகம் தளிர்களைத் திருத்திக் காதுகளில் தரிக்கின்றனர்; அத்தளிர்கள் மார்பிற் படிந்து அழகுற அசைந்து விளங்கும்; அம் மார்பில் சந்தனக் குழம்பை நிறையப் பூசி, அதன்மீது வேங்கை மலரின் மகரந்தத்தை அப்புவர். விளாமரத்தின் சிறிய தளிரைக் கிள்ளி, ஒருவர் மேல் ஒருவர் தெறித்து அழகுற விளையாடுவர்; முருகனின் கோழிக்கொடி ஓங்கி நிலைபெறுக என்று கூறி வாழ்த்துவர்.

இத்தகைய சூரர மகளிர் விளையாடும் சோலையிலுள்ள காந்தட் பூக்களாலான பெரிய குளிர்ந்த மாலைகளை, முருகன் தன் திருமுடியின்கண் அணிந்து கொண்டிருப்பான். அக் காந்தட் பூக்கள் வண்டுகள் மொய்க்கப்பெறாத சிறப்புடையவை.

## முருகனின் வேல் :

முருகனுடைய வேல், ஒளி மிகுந்தது; வலிவானது; கூர்மை மிக்கு நீண்டிருப்பது. முருகனின் வேற்படை, உலகிற் பழமையாக உள்ள கடலும் நிலை குலையும்படி, அதனுள் புகுந்து, அங்கே ஒளித்துக்கொண்டிருந்த சூரபதுமனை இருகூறாகப் பிளந்தது; அதனால் குதிரைத் தலையும் மனிதவுடலும் ஆகிய இரண்டு பெரிய வடிவங்கள் ஒன்றாக அமைந்த அச்சூரபதுமனுடைய உடல் அறுபட்டு, வேறு வேறு துண்டங்களாயின. ஆயின பின்னரும், கவிழ்ந்து தலைகீழாகத் தொங்கும் பூங்கொத்துக்களையுடைய மாமரமாகச் சூரபதுமன் மீண்டும் வடிவெடுத்து வந்தான். அதுபோது முருகன், அவுணர்களின் மிக்க வலிமை அழியும் படியும், அசுரர்களுக்கு அச்சம் தோன்றும்படியும் போரிட்டு, மாமரமாக நின்ற சூரபதுமனைத் தடிந்தான். முருகனின் வேல், மேலும் போரில் முனைந்து சென்று, சூரபதுமனது துணைவர்களாகிய அவுணர்களை யெல்லாம் தோல்வியுறச் செய்து அழித்தது.

## பேய்களின் துணங்கைக் கூத்து :

அங்ஙனம் போர் நிகழ்ந்த களத்தில் பேய்கள் பல கூடிப் பிணங்களைத் தின்று களித்துத் துணங்கைக் கூத்து ஆடுகின்றன. அப்பெண் பேய்கள் காய்ந்த தலை மயிரை உடையன; வரிசையற்றுப் பிறழ்ந்த பற்களை உடையன; அவைகளின் வாய் பெரிதாய்த் திறந்திருக்கும்; அவற்றின் விழிகள் சுழன்று கொண்டு ஊன் வடிந்து, கொடும் பார்வை வாய்ந்திருக்கும்; அவற்றின் காதுகள் நீண்டு மார்பு வரையில் தொங்கியிருக்கும்; அக்காதுகளில் பிதுங்கிய கண்களை உடைய ஆந்தையும், நச்சுத்தன்மை மிக்க பாம்புகளும் தொங்கிக்கிடக்கும்; இரத்தம் படிந்து, வளைந்து கூர்மையான நகங்களை உடைய தம் விரல்களினால், அப்பேய்கள் இறந்துபட்ட அவுணர்களின் பிணத் தலைகளில் உள்ள கண்களைத் தோண்டிப் புசிக்கும். பின்னர் அத் தலைகளைத் தம் கைகளில் ஏந்தி, அவற்றின் பிணத்தை வழித்துத் தின்னும். அங்ஙனம் தின்ற மகிழ்வால், அச்சமும் அருவருப்பும் தோன்றும்படி, தம்முடைய தோள்களை அசைத்துக் கொண்டு, வெறி மிகுத்துத் துணங்கை என்னும் இழிந்த கூத்தை கூடி, அப்பேய்கள் இன்புறும். இங்ஙனம் பிணம் தின்னும் பேய்கள் மகிழ்ந்து துணங்கைக் கூத்து ஆடும்படி, முருகன் சூரபதுமனைப் போர்க்களத்தில் வென்றான்.

## கூடல் மாநகர் :

மதுரைக்குக் கூடல் என்று ஒரு பெயர் உண்டு. அக்கூடல் மாநகரம் மதில் சூழப்பெற்றது. அம்மதில்களைச் சேண் உயர்ந்து ஓங்கும் நெடுங் கொடிகள் அணி செய்கின்றன. அக்கொடிகள், போரிற் பெற்ற வெற்றிக்கு அறிகுறியாகவும், போரைப் பெற விரும்புதற்கு அறிகுறியாகவும் எடுக்கப்பெற்றவை. அந் நகரின் மதில் வாயில்களில், போருக்கு வரும் பகைவர்களை ஏளனம் செய்யும் முறையில், அவர்களைப் பெண்கள் போலக் கோலம் செய்து காட்டி, அப்பெண்களின் நிலையில் அவர்கள் விளையாடும் பொருட்டு, நூலால் செய்யப் பெற்ற பந்தும் பொம்மைகளும் தொங்கவிட்டு வைக்கப் பெற்றிருக்கும். எதிர்த்துப் போர் செய்வதற்குத் துணிவுடைய பகைவர்கள் எவரும் கிடைக்காமையினால், போரில்லாத மதில் வாயில்களை யுடையது அக்கூடல் மாநகர். மேலும், அந்நகரில் கடைத்தெருக்கள் பல உண்டு. அக்கடைத் தெருக்களில், களவு பொய் ஏமாற்றம் முதலிய குற்றங்கள் நிகழமாட்டா. அவைகள் செல்வப் பெருக்கமும், பணப்புழக்கமும் மிகுதிப்பட்டுச் சிறந்து விளங்குகின்றன. ஆதலால், திருமகளே அரசு வீற்றிருப்பது போன்ற சிறப்பை உடையன, அக்கடைத் தெருக்கள்! பல புலவர்கள் கூடித் தமிழை ஆராய்ந்ததனாலும், அந்நகருக்குக் கூடல் என்று பெயர் அமைந்தது. அந்நகரின் தெருக்கள் மிக நீண்டனவாய் விளங்கும். அவற்றில் பெரிய பெரிய மாட மாளிகைகள் அழகுற நிறைந்திருக்கும்.

இத்தகைய கூடல் மாநகரின் மேற்குத் திசையில் **திருப்பரங்குன்றம்** உள்ளது. அதனைச் சுற்றிச் சேறு நிறைந்த வயல்கள் உள்ளன. அங்கே தாமரை, நெய்தல், முதலிய மலர்கள் அழகுறப் பூத்துள்ளன. வண்டின்

கூட்டங்கள், நாளெல்லாம் தாமரை மலரில் தேனைஉண்டு களித்து மயங்குகின்றன. அத னால் மாலைக் காலத்தில் சூரியன் மறையுங் கால், தாமரை மலர்கள் குவியத்தொடங்குவ தனை அறியாமல், அவற்றிலேயே மயங்கி விழுந்து கிடக்கும் வண்டுகள், இரவெல்லாம் அம் மலர்களிலேயே உறங்க நேருகின்றது. மறு நாள் வைகறையில் தாமரைமலர்கள் மீண்டும் மலரத் தொடங்கும்போதே அவ்வண்டுகள் வெளியில்வர முடிகின்றது. அப்போது அவை கள் வெளிவந்து, அவ் வைகறைப்போதில் அருகே உள்ள நெய்தற் பூக்களிலும், சுனைப் பூக்களிலும் சென்று ஊதி இன்புறுகின்றன. இத்தகைய வளப்பம் சான்றது திருப்பரங்குன் றம்; அங்கே முருகன் பெரிதும் விரும்பி எழுந் தருளியிருக்கின்றான்.

## (2) திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்)

முருகன், களிற்றூர்திப் பெருமான் (கஜ வாகனர்) என்னும் நிலையில், பிணிமுகம் என் னும் பெயருள்ள யானையை ஊர்தியாகக் கொண்டு, திருச்சீரலைவாய் என்னும் திருச்செந் தூரில் விளங்குகின்றான். அந்த யானையின் நெற்றியானது வரிகளையுடையது. அங்குசத் தால் குத்தப்பெற்று, ஆழ்ந்த வடுக்களைக் கொண்டது. வாடாத பொன்னரிமாலையும், ஓடை என்னும் நெற்றிப்பட்டமும், அதன் மத்த கத்தில் அசைந்துகொண்டிருக்கின்றன. அதன் இரு பக்கங்களிலும் மாறிமாறி ஒலிக்கும் மணி கள் தாழ்ந்து கிடக்கின்றன. அது காற்றைப் போன்று வேகமான நடையையுடையது. எதிர்க்க முடியாத கூற்றுவனைப் போன்ற ஆற் றல் வாய்ந்தது. முருகன், அதன்மீது ஏறி அமர்ந்து உலா வருவான். தாமம் ,மகுடம், பதுமம், கிம்புரி, கோடகம் என்னும் ஐந்து வகையுறுப்புக்களையும், நிரம்பிய சிறந்த வேலைப்பாட்டினையும் உடைய, அவனது திரு முடியில்,வெவ்வேறு நிறங்களை உடைய அழகிய மணிகள், மின்னலைப்போல ஒளிவிட்டு அழகு செய்யும். அவனுடைய திருமுகம் நிறை வெண் மதியைப் போன்றது. அவனது காதுகளில் அசைந்து ஒளிவிட்டு விளங்கும் பொற்குண் டலங்கள், நிறைந்த வெண்மதியைச் சூழ்ந்து, அதன் அருகில் விளங்கும் விண்மீன்களைப் போன்று திகழ்கின்றன.

## ஆறு திருமுகங்கள்

வருத்தங்களைப் பொருட்படுத்தாத கொள்கையுடன், தமது தவ ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கின்ற ஞானிகளின் உள்ளத்திற் பொருந்தி, முருகனது ஒளிமிக்க அழகிய ஆறு திருமுகங்கள் தோன்றும். 1. அம் முகங்களுள் ஒன்று, இருள்மிக்க இப்பெரிய உலகமானது குற்றமின்றி விளங்கும்படி பல ஒளிக்கதிர் களைத் தோற்றுவிக்கும். 2. ஒருமுகம், அன்பர் கள் துதிக்க, அவர்களுக்கு இணங்கி இனிதாகத் தோன்றி, அவர்கள்பால் உள்ள காதலால் மகிழ்ந்து, அன்போடு வரம் கொடுக்கும். 3 ஒரு முகம், மந்திரங்களை உடைய வேத விதிகளி னின்று வழுவாத அந்தணர்களின் வேள்வி களுக்கு இடையூறு நேராதபடி கடைக்கண் நோக்கம் செலுத்தும். 4 ஒருமுகம், மக்களின் அறிவினுள் அகப்படாது எஞ்சி நின்ற பொருள் களை எல்லாம், உலகம் இன்புறும்படியாக உணர்த்தி, கலை நிரம்பிய முழு வெண்திங்கள் போலத் திசைகளை எல்லாம் ஒளிபெறச்செய்து கொண்டிருக்கும். 5. ஒருமுகம், பகைவர்களை அழித்து, அவர்கள் பிறர்மேற் செய்யும் போரைக் கெடுத்து, நீங்காத கோபம் கொண்ட நெஞ்சத்துடன்,போர்க்களத்தை விரும்பும், 6. ஒருமுகம், கொடிபோன்ற இடையை உடைய வளும், குறவர்களின் அழகிய இளம் பெண் ணும் ஆக உள்ள வள்ளி அம்மையுடன், மகிழ்ச்சி யுற்றிருத்தலை விரும்பி இருக்கும். இங்ஙனம் முருகனின் ஆறு திருமுகங்களும், அவ்வவற்றிற் குரிய தொழில்களை முறைப்படச் செய்து கொண்டு வருகின்றன.

## பன்னிரு திருக்கைகள்

முருகனின் ஆறு திருமுகங்களும் செய்யும் தொழில்களுக்கு ஏற்ப, அவனது பன்னிரண்டு திருக்கைகளும்; முறையே இயங்குகின்றன.

மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப் பல்கதிர் விரிந்த முகத்திற்கு ஏற்ப, உயிர்களைச் சூரிய வெப்பத்தின் கொடுமையினின்று காப்ப தற்காக, வானத்தில் இயங்குகின்ற தெய்வ முனிவர்களுக்குப் பாதுகாவலாக ஏந்தியது ஒரு கை (1). அதற்கு இணையான கை இடுப்பிலே வைக்கப்பெற்றுள்ளது (2).

ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகிக் காதலின் உவந்து வரம் கொடுப்பதற்கு,யானை மேல் வருதல் முருகனின் இயல்பாதலின், யானையைச் செலுத்துவதற்காக அங்குசம் கடாவியது ஒரு கை (3). அதற்கு இணையான திருக்கை செந்நிற ஆடையை யுடுத்துள்ள துடையின் மேலே கிடந்தது (4).

மந்திர விதியின் மரபுளி வழாத அந்தணர் களின் வேள்வியை அசுரர்கள்வந்து கெடுக்கா மல் தடுத்தற் பொருட்டு, ஒருகை வேற் படையைச் சுழற்றியது (5). மற்றொரு கை கேடயத்தை ஏந்தியது (6).

வேதாகமங்களில் விளங்காத பொருள் களை முனிவர்களுக்குத் தத்துவ நுட்பம் பொலிய உணர்த்துங்கால், ஒருகை மோன முத்திரை தாங்கி, மார்பொடு விளங்குகின்றது (7). ஒருகை மார்பில் மாலையுடன் சேர்ந்து அழகுறத் திகழ்கின்றது (8).

தீயவர்களை அழித்து நல்லவர்களைக் காத்தற்பொருட்டு ஒரு கை, தொடியோடு மேலே சுழன்று களவேள்விக்கு முத்திரை வழங் குகின்றது (9). மற்றொரு கை, இனிய ஓசை யுள்ள மணியை ஒலிக்கின்றது (10).

உலகியலில் உயிர்களுக்கெல்லாம் இல்லற வாழ்க்கையின்பம் உதவுதற்பொருட்டு வள்ளி யம்மையாருடன் நகையமர்ந்த திருமுகத்திற்

கேற்ப, ஒரு கை மேகத்தினின்று மழையைப் பொழிவிக்கின்றது (11). மற்றொரு கை தேவ மகளிர்க்கு மணமாலையைச் சூட்டுகின்றது(12).

இங்ஙனம் தனது ஆறு திருமுகங்களுக்கேற்பத் தன்னுடைய பன்னிரண்டு கைகளும் ஏற்றபெற்றி தொழில் செய்து இயங்க, அருளே திருவுருவமாக அமர்ந்து விளங்கும் திருமுருகப் பெருமான், வான துந்துபி ஒலிக்கவும், கொம்புகள் இசைக்கவும், வெண்சங்குகள் முழங்கவும், இடியேறு போன்ற முரசம்அதிரவும், மயிலானது வெற்றிக் கொடியின்மீது இருந்து அகவவும், வானவழியாக விரைவாகச் செல்லுதலை மேற்கொண்டு, திருச்சீரலைவாய் என்னும் திருச்செந்தூரிலே வந்து தங்குவான். இஃது அவனுக்குரிய நிலையான பண்பாகும்.

## (3) திருவாவினன்குடி (பழநி)

முருகப்பெருமான் சூரபதுமனை வென்று, தேவர்களைச் சிறைவிடுத்து, தேவேந்திரனின் மகளாகிய தெய்வயானையை மணந்துகொண்டு மகிழ்ந்திருந்தபொழுது, தம் கையில் உள்ள வேற்படையை நோக்கி ''நமக்கு எல்லாம் தந்தது இவ்வேல்'' என்று உவகை மீதூரக் குறிப்பிட்டருளினார். அப்போது அண்மையில்இருந்த பிரமன், ''இவ்வேலுக்கு இத்தகைய சிறப்பினை யானே அளித்தேன்'' என்று இறுமாப்பு மேலிட்டு இயம்பினான். அதுகேட்ட முருகப் பெருமான், ''நம் திருக்கை வேலுக்கு ஆற்றல் அளிப்பவன் நீயோ?'' எனச் சினந்து இகழ்ந்து வினவி, ''இங்ஙனம் செருக்குற்றுக்கூறிய நீ மண்ணுலகிற்குச் சென்று பிறந்து வருந்தி மாழ்குக'' என்று வெஞ்சொல்விடுத்தார். அதனால் பிரமதேவன் படைப்புத் தொழிலை இழந்தான். படைப்புத்தொழில் நிகழாமற் போகவே, முறையே திருமாலுக்கும் உருத்திரனுக்கும் உரிய காத்தற்றொழிலும் ஒடுக்குதற்றொழிலும்கூட நிகழ முடியாமல் நின்று போயின. இத் தீங்குகள் எல்லாம் நீங்குதற் பொருட்டுத் திருவாவினன்குடியில் தேவர்கள் முருகன்பால் குறையிரந்து கொள்ள வருகின்றனர். அவர்கள் முருகன்பால் தாமே முன்னர்ச் செல்ல அஞ்சி, முருகனின் அருளுக்குரிய முனிவர்களை முன்னே விடுத்து, அவர்களின் பின்னர் இசைபாடி முருகனின் முனிவைத் தீர்க்க வல்ல கந்தர்வரையும், கந்தர்வ மகளிரையும் அனுப்புகின்றனர்.

### முனிவர்கள்

முனிவர்கள் மரவுரியைத் தைத்து உடையாக அணிந்தவர்கள். வலம்புரிச் சங்குபோல அழகாய் முடிக்கப்பட்ட வெண்மையான நரைத்த முடியை உடையவர்கள். மாசற்ற ஒளிமிகுந்த மேனியை உடையவர்கள். மான்தோலைப் போர்த்திருப்பவர்கள். தசை இல்லாத மார்பினையும், எலும்புகள் மேலெழுந்து தோன்றுகின்ற உடம்பையும் உடையவர்கள். பகையும் கோபமும் நீங்கிய மனத்தினர். எல்லாவற்றையும் கற்றவரும் அளந்தறிய முடியாதபேரறிவை உடையவர்கள். கற்றவர்களுக்கெல்லாம் எல்லையாய் இருக்கும் தலைமைப்பாடு வாய்ந்தவர்கள். காமத்தையும் கடுஞ்சினத்தையும் நீக்கிய தவம் மிக்கவர்கள். எவரையும் எதனையும் வெறுக்காத அருளாளர்கள்.

இத்தகைய முனிவர்களுக்குப் பின்னால், அன்பு நிறைந்த நெஞ்சமும், மென்மையான மொழியும் உடைய கந்தவர்கள், இனிய யாழை வாசித்துச் சென்றார்கள். அவர்கள் முகையவிழ்ந்த மாலையை மார்பில் அணிந்திருந்தார்கள். செவியினாலே சுருதியை அளந்துஅமைத்த நரம்புகளையும் வார்க்கட்டினையும் உடையது அவர்களுடைய யாழ். இக்கந்தர்வர்களோடு, கந்தர்வமகளிரும் விளங்கித் தோன்றினர். அவர்கள் நோயின்றி அமைந்த உடலை உடையவர்கள்.

இவ்வாறு பலரும் உடன்வர, கொடிய பாம்புகளை அழிக்கின்ற கருடனைக் கொடியாக அடைய **திருமாலும்;** வெள்ளேற்றுக் கொடியை உயர்த்தி, உமாதேவியை இடப்பாகத்தில் கொண்டு, முக்கண்களையுடையவனாய், முப்புரங்களை அழித்த வலிமை மிக்க **உருத்திரனும்;** ஆயிரம் கண்களை உடையவனாய், நூறு வேள்விகளை முடித்துப் பகைவர்களை அழித்த வெற்றி மிக்கவனாய், நான்கு தந்தங்களையுடைய ஐராவதம் என்னும்யானையின் பிடரியில்அமர்ந்து வரும் செல்வம் மிக்க **இந்திரனும்;** நான்கு திக்குப்பாலகர்களும்; வான்வழியாக ஆவினன்குடிக்கு வந்து முருகனை வணங்கி வழிபட்டு அருள்பெற விழைகின்றனர். முப்பத்து முக்கோடி தேவர்களும், பதினெண்வகைத் தேவகணத்தினரும் புடைசூழ, அவர்கள் தாமே முன்சென்று முருகனைக் காண அஞ்சி, முருகனின் அருளுக்குரிய சிறந்த முனிவர்களை முன்னே செல்லச் செய்தனர். அம்முனிவர்களை அடுத்து அன்பு நிறைந்த நெஞ்சையும் மென்மொழியையும் உடைய **கந்தர்வர்கள்,** இனிய யாழை இசைத்துச் சென்றனர். அவர்களைத் தொடர்ந்து கந்தர்வப் பெண்கள் சென்றனர். இங்ஙனம் சிறந்த முனிவர்களும் கந்தர்வர்களும், கந்தர்வ மகளிரும், முன்னே செல்ல, அவர்களின் பின்னே திருமாலும், உருத்திரனும், இந்திரனும் இந்நிலவுலகிற்கு வந்தார்கள். இங்ஙனம் தேவர்களும் மூவர்களும் வந்து கண்டு வணங்கிக் குறை இரக்கும்படி, முருகன் திருவாவினன்குடியில் தங்கியிருப்பான்.

## (4) திருவேரகம் (சுவாமிமலை)

திருவேரகம் என்னும் தலத்திலும் எழுந்தருளியிருப்பதற்கு உரியவன் முருகன். திருவேரகத்தில் முருகனை, (உபநயனத்திற்கு முன்பு ஒரு பிறப்பும், அதற்குப் பின்பு ஒரு பிறப்பும் ஆக) இருபிறப்பாளராகிய அந்தணர்கள், உரிய காலத்தைத் தேர்ந்து துதிப்பர். அவர்கள் தாய் வழியும் தந்தைவழியும் ஆகிய மரபு இரண்டும் நன்கு மதிக்கப்பட்ட பழம்பெரும் குடிகள் பலவற்றில் தோன்றியவர்கள். ஓதல் ஓதுவித்தல், வேட்டல் வேட்பித்தல், ஈதல் ஏற்றல் என்னும் தமக்குரிய ஆறுதொழில்களிலும் முறை பிறழாது ஒழுகுபவர்கள். நாற்பத்தெட்டு ஆண்

டுகள் பிரமசரிய நெறியில் கழித்தவர்கள். அறத்தை வளர்க்கும் கொள்கையுடையவர்கள். ஆகவனீயம் தட்சிணாக்கினி காருகபத்தியம் என்னும் சிறந்த முத்தீச் செல்வத்தை வளர்ப்பவர்கள். ஒன்பது இழைகளைக்கொண்டு, முப்புரிகளாக அமைந்த நுண்ணிய பூணூலை உடையவர்கள். அவர்கள் ஈரமான உடை, உடம்பிலே கிடந்து உலரும்படி உடுத்திக் கைகளை உச்சியிற் குவித்து, ஆறு எழுத்தாலாகிய ('சரவணபவ' — 'குமாராயநம' — 'முருக போற்றி' என்பன போன்ற, முருகனுக்குரிய) மந்திரத்தை* வாய்க்குள்ளே உச்சரித்து, மணம் பொருந்திய நல்ல மலர்களைத் தூவி, முருகனைப் புகழ்ந்து வழிபடுவார்கள். இவ்வந்தணர்களின் வழிபாட்டுக்கு மிகவும் மகிழ்ந்து முருகன் திருவேரகத்தில் தங்கியிருப்பான். அதுவும் அன்றி:—

## (5) குன்றுதோறாடல் (திருத்தணிகை, கதிர்காமம் முதலியன):

முருகன், குறிஞ்சி நிலமாகிய குன்றுகள் தோறும் வேலனாக நின்று ஆடுதலையும், தனக்குரிய நிலைபெற்ற குணமாகக் கொண்டவன். குன்றுகளில் வேடுவர்கள் வில்லை ஏந்தி, மார்பில் மணமுள்ள சந்தனத்தைப் பூசி, மூங்கிலிலே விளைந்த கள்ளின்தெளிவைத் தங்கள் சுற்றத்தாருடன் கூடி உண்டு மகிழ்ந்து, தொண்டகம் என்னும் பறையைக் கொட்டிக் குரவைக் கூத்தாடுவார்கள். இவ்வேடர்களின் பெண் மக்கள் சுனையிற் பூத்த மலர்களைக் கண்ணியாகத் தொடுத்துத் தலையில் அணிந்திருப்பர். அவர்களின் கூந்தல் கொண்டையாகச் சேர்த்துக் கட்டப்பெற்றிருக்கும். மராமரத்தின் வெண் பூங்கொத்துக்களையும், கஞ்சங் குல்லையையும், இடையிடையே சேர்த்துக் கட்டிய தழை ஆடையை அரையில் உடுத்தியிருப்பார்கள். பலவகை மணி வடங்களையும் அணிந்திருப்பார்கள். இப்பெண்களும் குரவைக் கூத்தில் கலந்துகொண்டு குரவைக் கூத்தாடுவார்கள்.

வேடர்கள் ஆடும் குரவைக் கூத்தில் படிமத்தான் எனவும், தேவராளன் எனவும் கூறப்பெறும் வேலனும் கலந்துகொண்டு ஆடுவான். கோயிலிற் பூசை செய்துகொண்டு, தெய்வ ஆவேசம் பெற்று ஆடி, குறி முதலியன சொல்லி வருதல், இவ்வேலனின் செயலாகும். வேலைக் கையிற் பிடித்துக்கொண்டு ஆடுவதனால், கோயிற் பூசகனாகிய இவனுக்கு வேலன் எனப் பெயர் ஆயிற்று. மலைநாட்டில் வேலன் என்ற பெயரால், இன்றும் கோயிற் பூசகன் வழங்கப் படுகின்றான்.

குரவைக் கூத்தாடும் வேலன், பச்சிலைக் கொடியில் சாதிக்காயை இடையிடையே சேர்த்து, தக்கோலக் காயைக் கலந்து, காட்டு மல்லிகையுடன் வெண்தாளியைக் கட்டின கண்ணியை அணிந்திருப்பான். சிவந்தமேனியனாய்ச் செவ்வாடை தரித்திருப்பான். அவன் தன்னுடைய காதுகளில் அசோகம் தளிரைச் செருகியிருப்பான். காலில் கச்சைகட்டிக் கழல் அணிந்திருப்பான். வெட்சிமாலை சூடியிருப்பான். குழலையும் கொம்பையும் ஊதிச் சிறிய இசைகளை உண்டாக்குவான். ஆட்டுக்கிடாயும் மயிலும் அவனுக்கு அருகில் இருக்கும். அவன் கோழிக்கொடியை ஏந்தியிருப்பான். உயரமான வடிவத்தையுடைய அவன், தோளில் கடகத்தை அணிந்து, நிலத்தில் புரளும்படி ஆடை உடுத்தியிருப்பான். நரம்பு ஒலித்தது போன்ற இனிய குரலிலே பாடும் பெண்களுடன், மான் பிணைகளைப் போன்ற இளம் மகளிரை, முழவு போன்ற தன் தோள்களினாலே தழுவி ஆடுவான்.

இங்ஙனம் வேடர்களும், வேட்டுவ மகளிரும், வேலனும், குரவைக் கூத்தாடி மகிழும் குன்றுகள்தோறும், முருகன் தானும் ஆடல் நிகழ்த்தி நிலை பெற்று விளங்குவான். அதுவும் அன்றி:—

## (6) பழமுதிர்சோலை

முருகன் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருப்பான். அவன் இல்லாத இடம் எதுவுமில்லை. உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேறுபாடின்றி, அன்பினால் தன்னை வழிபடும் அடியவர்கள் அனைவருக்கும் ஏற்ற பெற்றி அவன் அருள்புரிந்து உதவுகின்றான். சிறிய தினை அரிசியைப் பூக்களோடு கலந்து பிரப்பரிசியாக வைத்து, ஆட்டை அறுத்துக் கோழிக் கொடியை நிறுத்தி, மலை நிலத்து ஊர்கள் தோறும் எளிய மக்கள் இயற்றும் சிறப்புடைய திருவிழாக்களில், அவன் எழுந்தருளியிருப்பான். அன்பர்கள் தன்னைத் துதிப்பதனால், அவர்கள் விரும்பும் இடங்களில் எல்லாம் தங்கி நிலை பெறுவான். படிமத்தான் ஆகிய வேலன் இயற்றும் வெறியாடு களங்களிலும், காடுகளிலும், சோலைகளிலும், ஆறுகளிலும், குளங்களிலும், நாற்சந்தி முச்சந்திகளிலும், புதிய பூக்களையுடைய கடம்ப மரத்திலும், ஊர் நடுவில் உள்ள மரத்தின் அடியிலும், மக்கள் பலரும் கூடும் பொது இடமாகிய அம்பலங்களிலும், பசுக்கள் உராய்ந்துகொள்ளும் நடுதறிகள் உள்ள இடங்களிலும், முருகன் எழுந்தருளி விளங்குவான். அன்றியும் நாத்திகர்கள் அஞ்சுமாறு, தான் வந்து தோன்றும்படி ஆற்றுப் படுத்தப்பட்ட மலைக்கோயில்களிலும், முருகன் உறைவான்.

---

* முருகனுக்குரிய ஆறெழுத்து மந்திரம் "ஓம் சரவணபவ" என்று பலரும் பொதுவாகக் கூறுவது உண்டு. இதில் 'ஓம்' என்னும் பிரணவம் எல்லா மந்திரங்களின் முன்னுமே சேர்த்து ஓதப் பெறுவதாகலின், அஃது எழுத்துக் கணிப்பில் எடுத்துக் கொள்ளப்பெறுவதில்லை. நச்சினார்க்கினியர் "நமோ குமாராய" என்பர். ''நாதா குமார நம என்று அரனார் ஓதாய் என ஓதியது எப்பொருள்தான்?' எனவரும் அருணகிரிநாதர் கந்தரனுபூதிப் பாடலும், இதனையே குறிப்பதாகத் தெரிகின்றது. "முருகபோற்றி" என்பது, முருகனுக்குரிய தமிழ் மந்திரம் என்பர் அருட்டிரு மறைமலையடிகள்.

—ஆசிரியர்

முருகன் இவ்வாறு ஆங்காங்கே பல இடங்களிலும் தங்கி விளங்கி இருப்பான். அவ்விடங்களுள் **பழமுதிர்சோலை*** என்னும் தலமும் ஒன்று. அங்குள்ள மலையினின்று பெருகும் அருவி, பல நிறம் பொருந்திய ஆடைகளைப் போல நுடங்கி அசைந்து வரும்; அகில் மரங்களைச் சுமந்துவரும்; சந்தன மரங்களை உருட்டிக்கொண்டு வரும். மூங்கிற் கிளைகளைப் பறிக்கும்; மலைமேல் தொடுக்கப்பட்ட தேன் கூடுகளைச் சிதைக்கும்; ஆசினிப்பலாவின் முதிர்ந்த சுளைகளும், சுர புன்னை மரத்துப் பூக்களும், அவ்வருவி நீரில் உதிர்ந்துவிழும்; ஆணும் பெண்ணும் ஆகிய கருங்குரங்குகள் நடுங்கவும், யானைகள் குளிரால் ஒடுங்கவும், அவ்வருவி வெள்ளம் அலைவீசிச் செல்லும். பெரிய களிறுகளின் முத்துடைய தந்தங்களை வாரி எடுத்துப் பொன்னும் மணியும் கொழித்துக்கொண்டு, அருவிவெள்ளம் தாவிக் குதித்து ஓடும். அதுபோது, அருவி நீர்ப்பெருக்கு வாழை மரங்களைச் சாய்க்கும். தென்னங்குலைகளை உருட்டும். கரடிகளும் பன்றிகளும், கோழிகளை அஞ்சிக் கற்பிளவாகிய குகைகளில் ஒளிந்து கொள்ளச் செய்யும். காட்டெருமைக் கிடாய்கள் கதறுமாறு மிக உயரத்திலிருந்து 'இழும்' என்ற ஓசை உண்டாகும்படி மலைமேல்இருந்து அருவிகள் கீழே விழும். இத்தகைய பல அருவிகளை உடைய பழமுதிர்சோலை என்னும் தலத்திற்கு உரிமை உடையவன் முருகன்.

## ஆற்றுப்படை :

இவ்வாறு திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருஆவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை (சோலைமலை) என்னும் ஆறு தலங்களிலும் முருகன் எழுந்தருளியிருப்பான். அவனுடைய திருவடியை நினைவுகூர்ந்த நின் உள்ளம், செம்மல் உள்ளமாகும். நினைக்கத்தகாதவற்றை விடுத்து நினைக்கத் தக்கதை நினைக்கப் பெற்றதனால், அது சிறப்புடைய தாயிற்று. நன்மை பொருந்திய கொள்கையை

---

* திருமுருகாற்றுப்படையின் இறுதியில் வருகின்ற ''பழமுதிர் சோலை மலைகிழவோனே'' என்னும் தொடரை அடிப்படையாகக் கொண்டு, முருகனின் ஆறாவது படைவீட்டின் பெயர், 'பழமுதிர் சோலை' என்று வழங்கப்பெற்று வருகின்றது. இத் தொடரைப் 'பழம்-முதிர்-சோலை' எனச் சிலர் கொள்வர். சோலைகளிற் பழங்கள் முதிர்தல் இயல்பேயாகலின் அதன்கண் சிறப்பேதும் இல்லை என்றும், 'பழம்-உதிர்-சோலை' எனக் கொள்ளின், பழங்கள் ஏராளமாக உதிர்ந்து குவியலாகக் கிடக்கும் சோலை எனப் பொருள்பட்டு, அதன் வளப்பம் புலப்படுத்தப் பெறும் என்றும் சிலர் கருதுவர். இனி, இத் தொடரினை இவ்வாறு கொள்ளாமல் 'பழமுதிர்' என்பதனை அடைமொழியாகக் கொண்டு, அஃது அடுத்து நிற்கப்பெறும் **'சோலைமலை'** என்பதே, ஆறாவது படைவீட்டின் பெயர் எனக் கொள்ளவும் இடமுள்ளது. கச்சியப்ப சிவாசாரியர் 'பழமுதிர் சோலை' என்றும், அருணகிரிநாதரும் பாம்பன் சுவாமிகளும் 'சோலைமலை' என்றும் கொண்டுள்ளனர். இஃது 'அழகர்கோயில்' என இந்நாளில் மதுரைக்கு அருகில் உள்ள தலத்தினைச் சார்ந்ததாகக் கருதப்படுகின்றது. —ஆசிரியர்

விரும்பிய சிறந்த உள்ளத்துடன், நீ முருகனிடம் சென்று தங்கும் மெய்ஞ்ஞானப் பேற்றைப் பெற விரும்பினையாயின், நற்பண்புகள் பலவும் சேர்ந்து நன்மை பொருந்திய நின் நெஞ்சகத்தில் உண்டான இனிய விருப்பம் கைகூடி நிறைவேறும். ஆதலின் நீ விரும்பிய அந்த நற்பேற்றை அடைய இப்பொழுதே இம்முயற்சியை மேற்கொள்க. மேற்குறித்த ஆறு இடங்களிலோ, அல்லது வேறு பிற இடங்களிலோ சென்று, நீ முருகனை நேரிற் காணலாம். அங்ஙனம் காணும்பொழுது இனிய முகத்துடன் அவனை அன்புடன் துதித்துக் கையினால் தொழுது வாழ்த்தி, அவனது திருவடிகள் உனது தலையில் பொருந்தும்படி வணங்கிப் பின்வருமாறு புகழ்க:

## புகழுரைகள் :

''நெடிய பெரிய இமய மலையில், சரவணப் பொய்கையில், அக்கினித்தேவன் அங்கையில் ஏற்று விடுப்ப, அங்கே கார்த்திகைப் பெண்டிர் அறுவராலும் பாலூட்டி வளர்க்கப் பெற்று, ஆறு வடிவங்கள் ஒன்றாகச் சேர்ந்த பெருமானே! கல்லால மரத்தின் நிழலில் எழுந்தருளும் சிவபெருமானின் செல்வனே! மலைமகளின் புதல்வனே! பகைவர்களுக்குக் கூற்றுவனைப்போன்றவனே! அழகிய அணிகலன்கள் பல அணிந்த சிறப்பினையுடைய காடு கிழாளின் குழவியே! தேவர்கள் வணங்குகின்ற விற்படையை உடைய தலைவனே! மாலையணிந்த மார்பனே! நூல்களை உணர்ந்த புலவனே! போரில் ஒப்பற்றவனே! போரில் வெற்றிமிக்க வீரர் வீரனே! அந்தணர்களுக்குச் செல்வமாக விளங்குபவனே! அறிஞர்கள் புகழ்கின்ற மலை போன்றவனே! வள்ளி தெய்வயானையின் கணவனே! வேலைக் கையில் ஏந்தியவனே! சான்றாண்மைக் குணங்களாகிய செல்வம் மிக்கவனே! கிரவுஞ்சம் என்னும் மலையை அழித்த, அழியாத வெற்றிப் புகழை உடையவனே! வானளாவியபெரியமலைகளையுடைய குறிஞ்சி நிலத் தலைவனே! புகழ்மிக்க புலவர்களுக்குத் தலைவனே! பெறுதற்கரிய சிறப்பினைஉடைய வீடுபேற்றைத் தரும் முருகனே! விரும்பி வழிபடும் அடியவர்களுக்கு எல்லா இன்பங்களையும் நிறையக்கொடுக்கும் புகழ் மிக்கவனே! துன்புற்றவர்களுக்கு அருள்புரியும் வேந்தனே! அடியவர்களைத் தாங்குகின்றவனே! பகைவர்களுக்கு அச்சத்தை விளைவிப்பவனே! நெடுவேளே! பெரியவர்கள் எல்லாம் போற்றுகின்ற பெரும் புகழ் மிக்க இறைவனே! சூரபதுமனின் குலத்தை வேரோடு அறுத்த வலிமை மிக்கவனே! மதவலி என்ற பெயருடையவனே! போர்புரிதலில் எடுத்துக்காட்டானவனே! மிக்க பெருந்தகையோனே! என்று பலவாறாக யான் கூறிய முறையில் நீ அவனை விடாது புகழ்க. பெருமானே! நின் சிறப்பை முழுதும் அளந்தறிதல் உயிர்களுக்கு இயலாது. ஆதலின் நின் புகழை முழுவதும் கூறுதற்கு எளியேன் வல்லன் அல்லேன். நினக்கு இணையானவர்கள் இல்லாத புலமை உடையவனே! நின் திருவடிகளை நினைந்து விரும்பி இங்கு வந்தேன்'' என்று, முருகன்பால் நின் விண்ணப்பத்தைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்க.

இங்ஙனம் நீ, நின் விண்ணப்பத்தைச் சொல்லி முடிப்பதற்குள், பல்வேறு வடிவம் கொண்ட சிறு பூதங்கள் பல, அவ்விடத்தே பெருமை மிகத் தோன்றி, ''இவன் தங்கள் அருளைப் பெறுதற்குத் தகுதியுடையவன்; அறிவு முதிர்ந்த சொல்வளமுடைய புலவனாகிய இவ்விரவலன், தங்களின் செழும் புகழை நாடி இங்கே வந்திருக்கிறான்'' என்று இனிய நல்ல சொற்களால் முருகனைப் பரவும். அப்போது தெய்வத் தன்மை நிரம்பியதாகவும், வலிமை மிக்கதாகவும், வானத்தை அளாவுகின்றதாகவும் உள்ள, உயர்ந்த வடிவத்துடன் முருகன் தோன்றுவான். தோன்றி, அச்சம் தரவல்ல தனது பெருநிலையை உள்ளடக்கி மறைத்துக் கொண்டு, மணம் கமழ்வதும், தெய்வத்தன்மையுடையதும், அழகு வாய்ந்ததுமான தனது இளமை நலத்தைக் காட்டி, , ''நினது வரவை யானறிவேன். நீ அஞ்சற்க'' என்று அன்புள்ள நல்ல மொழிகளைப் பலகாலும் கூறி அருள் புரிவான். மேலும் உலகத்தில் நினக்கு ஒருவரும் ஒப்பில்லை எனும்படி, பெறுதற்கரிய சிறந்த பற்பல பரிசில்களையும் வழங்கியருள்வான் (என்பது திருமுருகாற்றுப்படையின் கருத்துச் சுருக்கம்).

***

---

## நக்கீரரின் அரிய - அழகிய சொல்லாக்கம் !

கவிஞர்களும் புலவர்களும், ஒருமொழியின் சொற்களையே கருவிகளாகக்கொண்டு, தத்தம் கலைத் திறத்தின் எழில்நலம் காட்டிக் களிப்புறுத்துவர். சொற்களைத் திறன் தெரிந்து கையாளும் அரும் பெரும் திறமையைக் கொண்டே, கவிஞர்கள் அல்லது புலவர்களின் அருமையும் பெருமையும் அளக்கப் பெறும். **நக்கீரர்** என்பதில், ந-சிறப்புணர்த்தும் இடைச்சொல்; கீர்-சொல், சொல்வன்மை. நக்கீரர் என்னும் சொல்லுக்குச் 'சிறந்த சொல்வன்மையுடையவர்' என்பது பொருள். அதற்கேற்ப, நக்கீரர் பலப்பல புதிய அரிய சொல்லாக்கங்களைப் படைத்துக் கவிதை இயற்றும் நல்லாற்றல் மிக்கவர் என்பதனை, அவர் பாடியருளிய திருமுருகாற்றுப்படையில் வரும் பல சான்றுகள் புலப்படுத்துகின்றன.

மாற்றுயர்ந்து தூய சிறந்த பொன்னானது, ஆடகம் சாதரூபம், கிளிச்சிறை, சாம்பூநதம் என்று நான்கு வகைப்படும். இவற்றுள்ளும் சாம்பூநதம் என்னும் பொன்னே மிகவும் சிறந்துயர்ந்தது ஆகும். திருப்பரங்குன்றம் ஆகிய மலைநிலத்துச் சூரர மகளிர், சாம்பூநதம் என்னும் உயர்ந்த பொன்னால் இயன்ற அழகிய இழைகளை அணிந்துள்ளனர். அதனைக் குறிப்பிட வரும் நக்கீரர், **சாம்பூநதம்** என்னும் சொல் வடசொல்லாதலின், அதனை அங்ஙனமே தமது தெய்விகக் கவிதையில் அமைக்க விரும்பிற்றிலர். 'சம்பு' என்னும் சொல்லுக்கு நாவற்பழம், நாவல்மரம் என்பது பொருள். அந் நாவல் மரங்கள் நிறைந்திருப்பது சம்புத்தீவம். அதன்கண், 'நாவல்மரப் பழங்களின் சாறு படிந்து அதனால் விளைந்த பொன்' என்பது, சாம்பூநதம் என்னும் வடசொல்லுக்குரிய பொருள். ஆதலின் அக்கருத்தினைக் குறிக்கும் வகையில் ''**நாவலொடு பெயரிய பொலம்** புனைஅவிர் இழை'' என்னும் தொடரினை, அழகுற அமைத்து வழங்குகின்றார், நக்கீரர்! இப்புதிய சொல்லாக்கத்தொடர், நக்கீரரின் நல்ல தமிழ் உணர்வைத் தெள்ளிதின் விளக்குவதாகும்.

நக்கீரர் பெருமானின் நயம்மிகுந்த இத்தகைய நல்ல சொல்லாக்க முறையினைப் பின்வந்த சான்றோர்கள் சிலரும், பெரிதும் தழுவிப் போற்றியுள்ளனர். இங்கு ஒன்றை மட்டும் குறிப்பிடுதல் சாலும். பாரதக்கதையில் போதரும் 'திருதராட்டிரன்' என்னும் அரசனைப் பற்றிய குறிப்பொன்று, சங்க கால நூலாகிய கலித்தொகைப் பாடல் ஒன்றில் வருகின்றது. **திருதராட்டிரன்** என்னும் சொல், தமிழ்மொழியின் இயல்பிற்கேற்ற சொல்லமைப்பு உடையதன்று. ஆதலின், அதனை அங்ஙனமே குறிப்பிட விரும்பாமல், பாலை பாடிய பெருங்கடுங்கோ என்னும் சங்க காலப் புலவர், பின்வருமாறு குறிப்பிடுகின்றார். திருதராட்டிரன் கண்பார்வையற்றவன்; பிறவியிலேயே குருடன் . அவனைப் பிறர் பார்த்தல் இயலுமேயன்றி, அவன் பிறரைப் பார்த்தல் இயலாது. அவனது நிலை கண்ணாடியைப் போன்றது. கண்ணாடியை நாம் பார்க்கலாம், ஆனால் கண்ணாடியால் நம்மைப் பார்க்கமுடியாது. இத்தகைய கண்ணாடியைப் போன்ற இயல்புடையவன் ஆதலின், திருதராட்டிரனுக்குத் 'தர்ப்பண ஆனனன்' 'முகுர ஆனனன்' (தர்ப்பணம், முகுரம்— கண்ணாடி: ஆனனம்-முகம்) எனப் பெயர்கள் வழங்கும். அதுபற்றி அவனை **"வயக்குறு மண்டிலத்து வடமொழிப் பெயர்பெற்ற முகத்தவன்"** என்று பாலைபாடிய பெருங்கடுங்கோ குறிப்பிட்டருளுகின்றார்.

''வயக்குறு மண்டிலம்'' என்பது, கண்ணாடியைக் குறிக்கும். 'ஒளி மிகுந்த வட்ட வடிவம் உடையது' என்பது பொருள். சூரியர்கள் பன்னிருவரில் **பகன்** என்னும் சூரியன், தக்கனின் வேள்வியில், வீரபத்திரரால் ஒறுக்கப்பெற்றுக் கண்குருடாயினான் என்பது வரலாறு. அதனைத் தழுவி 'வயக்குறு மண்டிலம்' என்னும் தொடர், 'பகன்' என்னும் சூரியனையும் குறிப்பதாகத் கொள்ளலாம். சாம்பூநதம் என்னும் பொன்னை 'நாவலொடு பெயரிய பொலம்' என்று நக்கீரர் வழங்கியதைத் தழுவியே, திருதராட்டிரனை 'வயக்குறு மண்டிலத்து வடமொழிப் பெயர்பெற்ற முகத்தவன்' என்று பாலை பாடிய பெருங்கடுங்கோ பாடியருளினார் ஆதல் வேண்டும்!

இச்சொல்லாக்க முறையினைத் தழுவி மாணிக்கவாசகர் '**நரசிங்கம்**' என்பதனை 'ஆள்அரி' என்றும்; திருத்தக்கதேவர் '**புத்திசேனன்**' என்பவனைத் 'திங்கள் விரவிய பெயரினான்' என்றும்; கம்பர் '**அசகாய சூரன்**' என்பவனைக் 'கூட்டு ஒரு வரை வேண்டாக் கொற்றவன்' என்றும் ஆங்காங்குத் தம் நூல்களில் அழகுறக் குறிப்பிட்டருள்வாராயினர். ஆசிரியர் அருட்டிரு **மறைமலையடிகளார்** Tennyson என்பதனைத் **தேனிசையன்** என்றும், Shakespeare என்பதனைச் **செகப்பிரியர்** என்றும், Annie Besant என்பதனை **அன்னை வசந்தை** என்றும் குறிப்பிடுதல், இங்கு நாம் சிந்தித்து இன்புறுதற்குரியது.

—**ஆசிரியர்**

---

# எம்பெருமானும் எம்பெருமானாரும்

திரு. நா. வேணுகோபால் நாயகர், B.A., B.L.,
செயலாளர் : வைணவ மகா சங்கம், சென்னை.

திருப்பெரும்பூதூரிலே திருவவதரித்தருளிய இராமாநுசர், தமது ஐந்து ஆசாரியர்களிடத்தும், ஐந்து அரிய வைணவ விஷயங்களைக் கற்றார். இளையாழ்வார் என இளமையில் பெயரிடப் பெற்ற இராமாநுசர், மதுராந்தகம் ஏரிக் கரையில், திருவரங்கம் பெரிய நம்பிகளைச் சந்தித்தபோது, அவரிடம் திருவிலச்சினை பெற்றுத் துவய மந்திரத்தையும் உபதேசிக்கப் பெற்றார். காஞ்சி வரதராசப் பெருமாளின் நியமனப்படி, பெரியநம்பிகளையே பிறகு பிரதம ஆசாரியராக ஏற்றார்.

இலட்சுமண முனி எனவும் பெயர்பெற்ற இராமாநுசர், திருமலையில் தமது தாய் மாமனான திருமலைநம்பிகளிடம் இராமாயணக் காலட்சேபம் சேவித்தார். இராமாநுசமுனி, திருக்கச்சிநம்பிகள் மூலமாகக் காஞ்சி தேவப்பெருமாளுடைய கருணையால் பிரசித்தி பெற்ற ஆறுவார்த்தைகளையும் அடையப் பெற்றார்.

உடையவர் எனச் சிறப்பாக அழைக்கப்பட்ட இராமாநுசர், திருமலை ஆண்டான் என்ற ஆசாரியர் பக்கலிலே திருவாய்மொழிக் காலட்சேபம் பயின்றார். எதிராசர் எனவும் ஏற்றம் அடைந்த இராமாநுசர், தமது பரமாசாரியரான ஆளவந்தார் நியமனப்படி திருக்கோட்டியூர் நம்பிகள் பக்கலிலே ஓம் நமோ நாராயணாய என்னும் பெரிய திருமந்திரத்தின் உட்பொருளைக் கற்க விரும்பித் திருவரங்கத்திலிருந்து திருக்கோட்டியூருக்குப் பதினேழு முறை எழுந்தருளினார்.

இராமாநுசர் இவ்விதமாக அடிக்கடி எழுந்தருள்வதையும், சோகமுகத்துடன் திரும்புவதையும்கண்ட திருக்கோட்டியூர் வைணவப் பெருமக்கள் வருந்தி, தாம் இருக்கும் இடமே தெரியாமல் வசிக்கும் திருக்கோட்டியூர் நம்பிக்குத் திருமந்திரார்த்தத்தின் உட்பொருள் தெரியுமா என்பது, சந்தேகத்திற்கு இடமான விஷயம் என்றும், அப்படி அந்த நம்பிகளுக்குத் தெரிந்திருப்பின் தங்களுக்கு உபதேசித்திருப்பார் என்றும் அல்லது பதினேழுமுறை வருகை தரும் இராமாநுசருக்காவது உபதேசித்திருப்பார் என்றும், அவ்விதம் உபதேசிக்காமையால், நம்பிகளுக்கே தெரியாது என்றுதான் ஏற்படுகிறது என்றும் தெரிவித்தார்கள்.

இராமாநுசரோ, தமது பரமாசாரியரான ஆளவந்தார் நியமனத்தை நிறைவேற்றவேண்டுமென விரும்பினார். பதினெட்டு ஒரு நல்ல எண் ஆயிற்றே! புராணங்கள் பதினெட்டு, வைணவ ரகசியங்கள் பதினெட்டு, மகாபாரதத்தின் அத்தியாயங்கள் பதினெட்டு, பாரதப் போர் நடந்த நாட்கள் பதினெட்டு, கண்ணன் அருளிய கீதையின் அத்தியாயங்களும் பதினெட்டு. எனவே இராமாநுசரும் பதினெட்டாவது முறையாகத் திருக்கோட்டியூர்சென்று நம்பிகளிடம் திருமந்திரார்த்தத்தின் உட்பொருளை உணர்த்தும்படி வேண்ட விரும்பினார்.

இராமாநுசருடைய ஆழ்ந்த விருப்பத்தை உணர்ந்த திருக்கோட்டியூர் நம்பிகளும் அத்தலத்தில் உள்ள சௌம்யநாராயணப் பெருமாள் சந்நிதிக்கு அழைத்துச் சென்று, அங்கு நரசிம்மர் எழுந்தருளியுள்ள ஒரு இருட்டான பகுதியை அடைந்தார்.

நம்பிகள் இராமாநுசருக்குத் தன் திருவடிகளைக் காட்டி, தாம் அருளப் போகும் திருமந்திரார்த்தத்தை ஒருவருக்கும் வெளியிடக்கூடாதென்றும், அப்படி வெளியிடின் நரகம் தான் சித்திக்கும் என்றும், உறுதி வாங்கிக்கொண்டு திருமந்திரார்த்தத்தைச் சாதித்தருளியதே தாமதம்! ஆகாயத்தை எட்டிப் பிடிக்கும் ஏற்றக்கோல், பாதாளத்தில் உள்ளகிணற்று நீரை அடைவதற்காகத் தன் முனையில் கட்டியுள்ள சாலைக் குனிந்து குனிந்து முகந்துகொண்டதும், உடனே கிணற்றைத் திரும்பிக்கூடப் பாராமல் உயரக் கிளம்பித் தன்னை எதிர்பார்த்துக் கிடக்கும், வாய்க்காலையும், வயலையும் நிரப்புவதுபோல, உடனே இராமாநுசர் திருக்கோட்டியூர்க் கோயிற் கோபுரத்தின் மீது ஏறித் திருமந்திரார்த்தத்தைச் சகலரும் அறிய வெளியிட்ட பிறகே அமைதிபெற்றார்.

இதனை அறிந்ததிருக்கோட்டியூர்நம்பிகள் சினம்பொங்கி எழுந்தார்! இராமாநுசரைக் கடிந்தார்! இராமாநுசர் அமைதியாக நம்பிகளைநோக்கி, திருமந்திரார்த்தத்தைச் செவியேற்ற அனைவருக்கும் பரமபதம் கிடைப்பது நிச்சயமானால், அதனை ஆசாரியரின் ஆணையை மீறி வெளியிட்டதனால் நான் ஒருவன் ஏன் நரகம் புகுதக்கூடாது என்று விண்

ணப்பித்தார். அதனைக் கேட்டு நீர்ப்பண்டமாய் உருகிவிட்ட நம்பிகளும், இராமாநுசரைக் கட்டித் தழுவிக் கொண்டு, ''எம்பெருமான் கருணைக்கடல், எம்பெருமானையும் கருணையில் விஞ்சிய நீர் கருணைப் பெருங்கடலே! அதனால் அவனோ எம்பெருமான்! நீரோ எம்பெருமானார்! அவனையும்விட அதிகமாகக் கொண்டாடப்பட வேண்டியவர் நீரே'' எனப் பாராட்டிப் போற்றி மகிழ்ந்தார்.

இங்குச் சில கேள்விகள் எழுகின்றன! இராமாநுசரின் பதிலைக்கேட்டதும், திருக்கோட்டியூர் நம்பிக்கு அவர் பக்கலிலே அளவு கடந்த அன்பு பீரிட்டுக் கொண்டு வந்து விட்டதென்றால், அவர் எப்படி ஆச்சரியப்பட்டுப் பேசியிருக்க வேண்டும்? திருமந்திரார்த்தத்தைத் தெரிந்து வைத்திருந்தும், ஊரிலுள்ள ஒருவருக்கும் அருளாமல், பதினேழுமுறை வந்து வேண்டிய இராமாநுசருக்கும் அருளாத தன்னுடைய கல்நெஞ்சைவிட, இராமாநுசரின் நெஞ்சு கனிந்த நெஞ்சு என்றல்லவா அவர் பாராட்டியிருக்க வேண்டும்! சகல பக்தர்கட்கும் திருமந்திரார்த்தத்தை உபதேசித்து அவர்கட்கு எல்லாம் பரமபதம் வாய்க்கும்படி அருளாமல், 'பழுதே பலகாலும் போயின என்று அஞ்சி அழுதேன்' என்றல்லவா புலம்பியிருக்க வேண்டும். இராமாநுசர் திருமந்திரார்த்தத்தைத் தன் உள்ளத்தில் தேக்கியதும்.

''வான் கொண்டு கிளர்ந்தெழுந்த
தண்முகிலைப் போன்றும்'',

''கார்காலத் தெழுகின்ற
கார்முகிலைப் போன்றும்''

''மாமுத்த நிதிசொரியும்
மாமுகிலைப்போன்றும்''

திருக்கோட்டியூர் சந்நிதிக் கோபுரத்தின் மீது எழுந்தருளி, பக்தர்களின் மனம் குளிரத் திருமந்திரார்த்தத்தைத், ''திரண்டேறிப் பொழிந்தமைக்கும், நிரந்தேறிப் பொழிந்தமைக்கும், மதயானை போலெழுந்த'' இராமாநுச முனி வேழத்திற்கு, வறண்ட சூல் கொள்ளாத மேகம் என வாழ்ந்துவிட்ட தம்மை ஒப்பிட்டுக் கொண்டு,

''காரேய் கருணை இராமாநுச!
இக்கடலிடத்தில்
ஆரே அறிபவர் நின்னருளின் தன்மை!
அல்லலுக்கு,
நேரே உறைவிடம் நான்!
வந்து நீ என்னை உய்த்தபின்உன்
சீரே உயிர்க்குயிராய், அடியேற்கு
இன்று தித்திக்குமே!''

என்றல்லவா தம்மட்டில் இப்புகழ்மாலையை முடித்திருக்க வேண்டும்!

அவ்விதமில்லாமல், எம்பெருமானாகிற திருமகள் கேள்வனாம் நாராயணனை இழுத்துப் போட்டுக்கொண்டு, அவனுடைய கருணையை விட, உம்முடைய கருணை அளவுகடந்துள்ள படியினாலே அவன் ''எம்பெருமான்! நீரோ எம்பெருமானார்!'' என்று போற்றியது எங்ஙனம் பொருந்தும்?

ஆகவே, திருமந்திரம் விஷயமாகவும், அதன் உட்பொருளான திருமந்திரார்த்தம் விஷயமாகவும், எம்பெருமானாகிற இறைவன் எவ்விதம் தன் கருணையை வெளியிட்டுள்ளான் என்பதை ஆராய வேண்டும். வைணவக் கொள்கைப்படி எம்பெருமான் ஐந்து நிலைகளிலே உலகோர் உய்யும்பொருட்டு எழுந்தருளியுள்ளான்.

1. பரமபதத்திலே பரமபதநாதனாக எழுந்தருளியுள்ள நிலையிலே பெரிய பிராட்டியாருக்குத் துவய மந்திரத்தை உபதேசித்தருளினான்.

2. வியூக நிலை என்னும் திருப்பாற்கடலில் சயன நிலையில், அவதியினால் அவசர மனுப்போடும் முனிவர்கட்கும், தேவர்கட்கும் அபயமளித்தருள்வதே வேலை! உபதேசத்திற்கு இது இடமில்லை.

3. கண்களுக்கும் ஏனைய பொறிகளுக்கும் புலனாகாத அந்தர்யாமித்துவ நிலையிலே இறைவனைக் காணவும் முடியாது; கேட்கவும் முடியாது! எனவே அங்கும் உபதேசத்திற்கு இடமில்லை.

4. அவதாரங்கள் எடுத்துக் காட்சிதரும் விபவநிலையிலே (அ)வராகநயினாராக வராக சரம (உயர்ந்த) சுலோகத்தையும், (ஆ)இராம பிரானாக இராம சரம சுலோகத்தையும், (இ) கண்ணனாகப் பகவத் கீதையில் கிருஷ்ண சரம சுலோகத்தையும் வெளியிட்டருளினான்.

வழிபாட்டிற்கு உரிய உருவ வடிவாகிற அர்ச்சை நிலையிலே, திருவதரி காச்சிரமத்திலே, வதரி விருட்சத்தின்கீழ், வேதங்களிலும் வெளியிடப்படாத குறையை நீக்கி, ஓம் நமோ நாராயணாய என்னும் திருமந்திரத்தை முதன் முதலாக வெளியிட்டருளினான். உயர்ந்த இத் திருமந்திரத்தை உலகறிய வேண்டுமென்ற பரம கருணையினாலே, தன்னையே உபதேசிக்கும் ஆசாரியனாகவும், அதனைச் செவியேற்கும் நரநாராயணனாகவும் இரண்டு கூறுகளாக நியமித்துக் கொண்டு வெளியிட்டருளினான்; கேட்பதற்கும் ஒரு நரன் (மனிதன்) கிடைக்காத நிலையிலே.

ஸ்ரீவைணவ ஆசாரியரான பிள்ளைலோகாசாரியர், தாம் அருளிய முமுட்சுப்படி (மோட்சம் அடைய விரும்புகிறவர்கள் பெறும் அறிவு) என்னும் நூலிலே, திருமந்திரப் பிரகரணத்திலே எம்பெருமான் அர்ச்சை நிலையிலே திருமந்ரத்தைவெளியிட்டதை, எட்டு பாகங்களாலான வாக்கியத்திலே குறிப்பிடுகின்றார். திருமந்திரமும் எட்டெழுத்துத்தானே!

1. சமுசாரிகள் தங்களையும் ஈசுவரனையும் மறந்து,

2. ஈசுவர கைங்கரியத்தையும் இழந்து,

3. இழந்தோம் என்கிற இழவும் இன்றிக்கே,

4. சமுசாரமாகிற பெருங்கடலிலே விழுந்து நோவுபட,

5. சர்வேசுவரன் தன் கிருபையாலே, இவர்கள் தன்னை அறிந்து கரைமரம் சேரும்படி,

6. தானே சிஷ்யனுமாய்

7. ஆசாரியனுமாய் நின்று,

8. திருமந்திரத்தை வெளியிட்டருளினான்!

இவ்விதமாகத் திருமந்திரத்தை வெளியிட்டதனால், ஈசுவரனுடைய கருணை பலித்ததா? சமுசாரிகள் கரைமரம் சேர்ந்தார்களா? பிறவிப் பெருங்கடலினின்றும்! வதரிகாச்சிரமத்தில் ஸ்ரீமந்நாராயணனும், நரநாராயணனும் 'படிதாண்டாப் பத்தினி'களாக எழுந்தருளியுள்ளனர். அங்கே வெளியிடப்பட்ட திருமந்திரமும் 'கடல்சூழ்ந்த மண்உலகம் வாழப்' பரவவில்லை.

தமிழ்நாட்டின் மண்ணிலே, முதன் முதலாகத் திருமந்திரம், அசல் நரன் காதிலே ஓதப்பட்டது! தம்மை மணக்க விரும்பினால், ஓராண்டு காலம் பாகவத ததியாராதனை புரிய வேண்டுமென்ற நிபந்தனையை நிறைவேற்றப் பொருள் இல்லாமல், வழிப்பறி நடத்தி, நித்திய ததியாராதனையைப் புரிந்து வந்தார் குறையலூர் வாழ் வேந்தனான திருமங்கையாழ்வார். இவரை ஆட்கொள்ள வேண்டுமெனத் திருவுள்ளம் பற்றித் திருஆலித் திருநகரியிலே எழுந்தருளியுள்ள வயலாலிமணவாளப்பெருமாள், பிராட்டி சகிதமாகத் திருமணங் கொல்லைக்கு எழுந்தருளினார். அவர் ஆபரணங்களை அபகரித்துக்கொண்ட ஆலிநாடராம் திருமங்கையாழ்வார், அவைகளை மூட்டையாய்க் கட்டிக் கீழே வைத்ததை எடுக்கமுடியாமற் போகவும், என்ன மந்திரம் செய்தீர் என வாளை உருவிக் கேட்கவும், மாயோனும் திருமங்கையாழ்வாரைத் தம் வலது திருச்செவியைத் தாழ்த்தச் சொல்லி 'ஓம் நமோ நாராயணாய' என்னும் பெரிய திருமந்திரத்தை உபதேசித்தருளினான். இங்ஙனம் மாயோனை வாள்வலியால் மந்திரங் கொண்டார் மங்கையர்கோன்!

''மாலைத் தனியே வழிபறிக்க வேணுமென்று கோலிப்பதிவிருந்த கொற்றவ''னான திருமங்கைமன்னன், திருமந்திர உபதேசத்தை இறைவனிடமிருந்து பெற்றதும், திருமந்திரத்தை வெளியிட ஆரம்பித்துத் திறந்த வாயை மூடாமல் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாசுரங்களை அருளினார். பரகாலனின் இப்பனுவல்கள் நெஞ்சுக்கு இருள்கடிதீபம்! அடங்கா நெடும் பிறவி நஞ்சுக்கு நல்ல அமுதம்! தமிழ் நன்னூல் துறைகள் அஞ்சுக்கு நல்ல இலக்கியம்! ஆரணசாரம்! பர சமயப் பஞ்சுக்கு, அனலின் பொறி!

இறைவனுடைய கருணை திருமங்கையாழ்வாரிடம் வாய்ந்தது! திருமந்திரத்தைப்பெற்ற ஆழ்வாரும் உயர்ந்தார்! இதை ஆழ்வாரே அருள்வதைச் சேவிக்கலாம்.

''உய்வதோர் பொருளால்,
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து,
நாடினேன் நாடி நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்!''

குலந்தரும்! செல்வம் தந்திடும்! அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலம்தரம் செய்யும்! நீள் விசும்பருளும்!
அருளொடு பெருநிலம் அளிக்கும்!
வலந்தரும்! மற்றும் தந்திடும்! பெற்ற
தாயினும் ஆயின செய்யும்!
நலம்தருஞ் சொல்லை நான் கண்டுகொண்டேன்!
நாராயணா என்னும் நாமம்!

இதனால் திருமங்கை மன்னனும் கரைமரம் சேர்ந்தார்!

''கற்றார் பற்றறுக்கும் பிறவிப் பெருங்கடலே,
பற்றா வந்தடியேன் பிறந்தேன், பிறந்த பின்னை
வற்றா நீர்வயல்சூழ் வயலாலி அம்மானைப்
பெற்றேன்! பெற்றதும் பிறவாமை பெற்றேனே!
1735

வாவித்தடஞ்சூழ் மணிமுத்தாற்று நறையூர் நெடுமாலிடம் திருவிலச்சினை பெற்ற திருமங்கை மன்னன், திருமந்திரத்தை உலகோருக்கு வெளியிடுவதையே சேவையாகக் கொண்டார்.

''எனக்கு என்றும்
தேனும், பாலும், அமுதும் ஆய
திருமால் திருநாமம்,
நானும் சொன்னேன் நமரும் உரைமின்!
நமோ நாராயணமே!'' —1543

''குன்று குடையாய் எடுத்த அடிகள்
உடைய திருநாமம்!
நன்று காண்மின் தொண்டீர்! சொன்னேன்
நமோ நாராயணமே'' —44

''எங்கள் அடிகள், இமையோர் தலைவர்
உடைய திருநாமம்,
நங்கள் வினைகள் தவிரஉரைமின்
நமோ நாராயணமே!'' —64

எம்பெருமானிடம் திருமந்திரத்தைச் சேவித்த திருமங்கைமன்னன் அதன் உட்பொருளை ஆராய்ந்தார். எம்பெருமான் அன்றி, வேறு ஒருவருக்கும் உரியேன் அல்லேன் என்ற திருமந்திர அர்த்தமான அநந்யார்க சேஷத்துவத்தை உணர்ந்தார்.

''மடையார் நீலம் மல்கும் வயல்சூழ்
கண்ணபுரம் ஒன்று
உடையானுக்கு, அடியேன் ஒருவர்க்கு உரியனோ?

இதுவே இறைவனுக்கு அடிமைப்பட்டிருத்தல். அவனுக்கே தொண்டு செய்தல். அதாவது பகவத் சேஷத்துவம். திருமந்திரத்தின் உட்பொருள் இறைவனுக்கே அடிமைப்பட்டிருத்தலாகிய பகவத் சேஷத்துவம் என்று மேல் எழுந்தவாரியாகக் காணப்படினும், பக்தர்கட்கு அடிமைப்பட்டு அவர்கட்குத் தொண்டு செய்தலே, அதாவது பாகவத சேஷத்துவமே திருமந்திரத்தின் சிறந்த உட்பொருள் என்பதை மேலும் தெரிந்து கொண்டதையும் வெளியிடுகிறார் திருமங்கையாழ்வார்.

''மற்றும் ஓர் தெய்வம் உளது என்று இருப்பாரோடு
உற்றிலேன்! உற்றதும் உன் அடியார்க்கு அடிமை!
மற்றெல்லாம் பேசினும் நின்திருஎட்டெழுத்தும்
கற்றது நான், கண்ணபுரத்துறை யம்மானே!''

திருமந்திரத்தில், அனேக உட்பொருள்கள் அடங்கியிருப்பினும், அவற்றுள் தாம் சிறந்ததாகத் தெரிந்து கொண்ட மிக்க நுண்ணிய உட்பொருள், பக்தர்கட்கு அடிமைப்பட்டு, அவர்களுக்குத் தொண்டு புரியும் பாகவத சேஷத்துவமே என வெளியிட்டருள்கிறார் திருமங்கையாழ்வார்.

இவ்விதமாகத் திருமந்திரத்தின் உட்பொருளை ஆழ்வார்கள் வித்தாகக் காட்டியதை, இவர்களுக்குப் பின்வந்த ஆசார்யர்கள் தங்களுடைய மிக உயர்ந்த வியாக்கியான உரைகளால் பெரும் விருட்சங்களாக்கியதை ஆசான்-சீடன் என்ற வழிமுறையிலே பக்குவம் அடைந்த நிலையினைச் சோதித்துப் போதித்துப் பாதுகாத்து வந்தனர். இதற்கு ஓராண்வழி என்று பெயர். பரவலாக எல்லோருக்கும் இயம்பவில்லை. இந்த நிலைமையை எதிராசர் மாற்றி, வைணவத்தால் வையமெல்லாம் பயன் பெற வேண்டும் என்ற பெருநோக்குடன், ''உயர்ந்த ஞானநோக்குடைய ஆசாரியப் பெருமக்களை அவனியிலே ஆசை உடையவர்கட்கெல்லாம் கட்டுப்பாடுகள் இல்லாமல் உபதேசிக்க வேண்டுமென்று நியமித்தருளினார். அதாவது முன்பு இருந்த வரம்பை அறுத்துப் போட்டார்.

மணவாளமாமுனிகள் என்னும் வைணவ ஆசாரியர், தாம் இயற்றிய உபதேச இரத்தின மாலையிலே, எதிராசர் தமது இன்னருளினாலே உலகு உய்யச் செய்த உதவியைப் பாராட்டுகிறார்.

ஓர் ஆண்வழியாய் உபதேசித்தார் முன்னோர்,
ஏரார் எதிராசர் இன்னருளால்-பாருலகில்
ஆசை உடையோர்க்கு எல்லாம் ஆரியர்காள் கூறும்
என்று
பேசி வரம்பறுத்தார் பின்!

கருணைக்கடலான எம்பெருமான் திருமந்திரத்தை வதரிகாச்சிரமத்தில் தன்னையே நரநாராயணனாகக் கொண்டும், திருவாலி—திருமணங்கொல்லையில் திருமங்கையாழ்வாருக்கும் திருமந்திரத்தை-ஒருவருக்கு ஒருவர் உபதேசிப்பது என்ற முறையை ஏற்படுத்தினான்.

கருணைப் பெருங்கடலான எம்பெருமானாரே திருமந்திரத்தையும், அதன் உட்பொருளையும்கூட, ஆசையுடையோர்கள் திரள்திரளாகத் திரண்டு வரினும், கூறுங்கள் என்று நியமித்ததுபோல, திருக்கோட்டியூர்க் கோயிலின் கோபுரம்மீது ஏறித் திருமந்திரார்த்தத்தை வெளியிட்டு நடைமுறையிலும் அநுட்டித்துக் காட்டினார்.

இன்றும் திருக்கோட்டியூர்க் கோபுரத்தின் மீது சிலைவடிவில் எம்பெருமானார் திருமந்திரார்த்தத்தை உபதேசித்தருளும் காட்சியைச் சேவிக்கலாம். இராமாநுசர் அவதரித்தருளிய திருப்பெரும்பூதூரிலே ஆண்டுப் பெருவிழா சமயம் ஆதிசேட—நாகவாகன சேவையின் போது, திருமந்திரார்த்தத்தை அவர்முன் சேவிப்பார்கள். ஆதிசேடனின் அவதாரமான எதிராசரே பரமகருணையுடன் உலகோர்க்குத் திருமந்திரத்தின் அர்த்தத்தை உபதேசித்தருள்கின்றாராம்!

எம்பெருமான் திருமந்திரத்தைப் பர, வியூக அந்தர்யாமித்துவ, அவதார நிலைகளுக்குப் பிறகு கடைசியாக ஏற்பட்ட அர்ச்சை (வணங்கப்படுவதற்காக உருவ வடிவு கொள்ளும்) நிலையிலே வெளியிட்டான். அவ்வளவு கால தாமதமாயிற்று எம்பெருமானுக்கு! எம்பெருமானாரோ, நொடி நேரமும் தாமதிக்காமல் திருமந்திரார்த்தத்தைக் கோபுரம் ஏறி வெளியிட்டருளி, தமது ஆசாரியரான திருக்கோட்டியூர் நம்பிகளால் 'எம்பெருமானார்' என்ற கீர்த்திக் கிரீடம் சூட்டப்பட்டார்!

பூலோக வைகுண்டமான திருவரங்கம் பெரிய கோயிலிலே எழுந்தருளியுள்ள நம்பெருமாளாகிய அரங்கத்தம்மானும், எம்பெருமானார் என்ற விருதை ஆமோதித்து, அவருடைய பரந்த கருணையை, கைங்கர்யத்தைப் பாராட்டி, ஸ்ரீவைணவ மதத்திற்கே ''எம்பெருமானார் தரிசனம்'' என்று திருப்பெயர் சூட்டி மகிழ்ந்தானாம்! தரிசனம் என்றால் உண்மையை வெளியிடும் மதம் எனப் பெயர். உடையவர் வைணவ தரிசனத்தை மகோன்னதமாகவும் புரட்சிகரமாகவும் பரவச் செய்ததை, உலகோர் உணர்வதற்காக, நன்றியறிதலுடன் இப்படிப் பெயரிட்டருளினானாம் பொன்னரங்கனும்!

மணவாள மாமுனிகள் உபதேச ரத்தின மாலையிலே இதை வெளியிட்டு உபகரிக்கின்றார்! ''எம்பெருமானார் தரிசனம்'' என்றே இதற்கு நம்பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்தார்! அம்புவியோர் இந்தத் தரிசனத்தை எம்பெருமானார் வளர்த்த அந்தச் செயல் அறிகைக்கா!"

# அமுதப் புனல்

திரு கா. அ. ச. ரகுநாயகன், எம். ஏ.,
திருப்பத்தூர், வ. ஆ. மா.

கண்ணனுடைய இளமைப் பருவத்தோடு ஒன்றிவிட்டது புல்லாங்குழல். அவன் திருவாய்ப்பாடியில் வளர்கிறான் என்பதற்கு இது ஓர் அடையாளமாகத் திகழ்வது. ஆயர்களின் வாழ்க்கையில் அவர்களுக்குத் தேவைப்படுவது குழல். ஆனிரைகளையும் கன்றுகளையும் அவர்கள் காட்டுக்கு ஓட்டிச் சென்று மேய்த்து வருபவர்கள். காட்டில் அவர்களுடைய மாடுகளும் கன்றுகளும் அவர்களை விட்டு நெடுந்தொலைவு விலகிச் செல்லாமல் காக்கவும், கவலையின்றி அவைகள் நன்றாக மேயவும், மேய்த்து முடிந்த பின்னர் மாலையில் அவர்களிருக்கும் இடத்தை அறிந்து அவைகள் வந்து சேரவும், ஆயர்கள் தங்கள் கையில் குழல் வைத்துக்கொண்டு, அதனை அவ்வப்போது ஊதித் தங்களுடைய இருப்பை அவைகளுக்குத் தெரிவிப்பார்கள்.

திருவாய்ப்பாடியில் வளரும்போது கண்ணனும் காட்டுக்குச் சென்று காலிகளை மேய்த்து வருவான். அதனால் அவனும் ஆயர்களைப் போலவே குழலைக் கையில் வைத்துக்கொண்டு ஊதுவது வழக்கம்.

ஒருநாள் கண்ணன் பிருந்தாவனத்தில் நின்று குழலை ஊதுகிறான். அந்தக்குழலோசை பூவுலகமெங்கும் நிறைகிறது; தேவலோகத்தையும் எட்டுகிறது. குழலோசையின் இனிய சுவையினால், அற்புதங்கள் பல அங்கே நிகழ்கின்றன. அவைகளைப் பெரியாழ்வார் என்னும் பெரியவர் தம் திருமொழியில் மிக அழகாகப் பாடி அருளியுள்ளார்.

வலம்புரிச் சங்கைத் தன் திருப்பவள வாயினில் வைத்து ஊதுகின்ற திருமால் அதனை விட்டுவிட்டு இங்குவந்து வேய்ங்குழலை எடுத்து ஊதுகின்றான். வெண்சங்கின் முழக்கத்தால் பெருமான் உகந்தாரெல்லாம் வாழ்வர்; அவன் முனிந்தாரெல்லாம் வாழ்வு இழப்பர். ஆனால், இப்போது இவன் ஊதுகின்ற குழலின் ஓசையே தன்னைக் கேட்டாரையெல்லாம் பிணித்துத் தன்வயமாக்கிவிடுகிறது.

கண்ணன் ஊதிய குழலோசை திருவாய்ப்பாடியை எட்டியவுடனே அங்குள்ள சிறுமியரெல்லாம் குழலோசைவரும் வழியைப் பற்றிச் சென்று கண்ணன் இருக்கும் இடத்தை அடைகின்றார்கள். குழலின் ஓசையைக் கேட்ட அளவில், அச் சிறுமியரின் உள்ளம் நெகிழ்கிறது. உடல் பரபரத்தெழுகிறது. கண்ணனைத்தழுவத் துடிக்கும் உடலுறுப்புகள் அவர்களை இழுத்துச் செல்கின்றன.

கண்ணனிடத்தில் ஆயர் சிறுமியருக்குள்ள காதலை அறிந்த பெரியவர்கள், அவர்களுக்குப் பல கட்டுக்காவலை ஏற்படுத்தியுள்ளார்கள். ஆனால் கண்ணனுடைய குழலோசை காவலிருப்போரை உறங்கச் செய்துவிடுகிறது.

பிருந்தாவனத்தை அடைந்த பெண்கள், அங்கே ஒருவர்பின் ஒருவராக, ஒரு கயிற்றில் ஒழுங்குபடத் தொடுத்த மாலையைப்போல, வரிசையாக நிற்கின்றனர். ஆர்வத்தோடு ஓடி வந்த அந்தச் சிறுமிகள் அங்கே கண்ணனைக் கண்டதும் நாணித் தலை கவிழ்கின்றனர்.

இரண்டாவது பாடலில், கண்ணன்குழலை ஊதும்போது, அவன் முகத்திலும் மற்ற உறுப்புகளிலும் ஏற்படும் அசைவுகளை நமக்கு விளக்கமாக எடுத்துக்காட்டுகிறார் ஆசிரியர். கண்ணன் தன் தலையை இடப்புறமாகச் சாய்க்கின்றான். அப்போது அவனுடைய மேலுதடும் இடப்பக்கத் தோளுடன் சாய்கிறது. இரு கைகளும் ஒன்றாக இணைந்து குழலைப் பிடிக்கின்றன. புருவங்கள் நெறித்து மேலே ஏறுகின்றன. காற்றை உள்ளே வாங்கி நிறுத்துவதனால், அவன் திருவயிறு குடம்போல் திரட்சி பெறுகிறது. கடைவாய் இரண்டும் குவிகின்றன.

ஆய்ப்பாடிச் சிறுமியர்கள் மட்டும் அன்றிப் பிற மங்கையரும் கண்ணனை நாடி வருகின்றனர். விரைவாக ஓடிவரும் அப்பெண்களின் மலரணிந்த கூந்தல் அவிழ்ந்து அலைகிறது. அப்போது அவர்கள் தோகை மயிலெனத் தோன்றுகின்றனர். நெகிழ்ந்த தம் ஆடைகளை ஒரு கையினால் பற்றி வருகின்றனர். நாணத்தால் அவர்கள் கண்ணன் அருகே செல்ல முடியாது ஒடுங்கி நிற்கின்றனர். ஆயினும் அவர்கள் பார்வை கண்ணனை நோக்கி ஓடுகிறது.

பரமபதத்தில், இளமையுடைய அரசனாக வீற்றிருக்கும் எம்பெருமான் படிப்படியாகத் தன்னைத் தாழ்த்திக்கொண்டு ஆனிரை மேய்க்கும் கோவிந்தனாக வந்துள்ள பெருமையை மூன்றாம் பாடலில் நிரல்படக் கருதுகின்றார் பெரியாழ்வார். முதலில் அத்திருநாட்டிலேயே எளிய சிறுவனாயிருக்கின்றான்; பின்னர்ப் பூவுலகம் வந்து வசுதேவர்க்கு மகனாய் அவதாரம் செய்கிறான்; வடமதுரைக்கு மன்னன் ஆகின்றான்; அங்கிருந்து ஆய்ப்பாடிக்குச் செல்கிறான்; ஆயர்குலத்துச் சிறு பிள்ளையாகிறான்; இறுதியாக அக் குலத்துக்குரிய தொழிலை மேற்கொண்டு மாடுகளை மேய்க்கும்கோவிந்தனாகின்றான்.

கண்ணன் ஊதும் குழலோசை வானுலகத்துக்கும் சென்று எட்டியதனால், அங்குள்ள இளம் பெண்களும் பூவுலகம் வருகின்றனர்; கண்ணனிருக்குமிடத்தை அடைகின்றனர் குழலோசையைக் கேட்ட அவர்கள் மனம் நீராய் உருகியது; மலர்போன்ற கண்கள் உவகைக் கண்ணீரைப் பெருக்கின. தேன் வழியும் கூந்தல் அவிழ்ந்து அலையவும், நெற்றியில் வியர்வை அரும்பவும், அவர்கள் தங்கள் காதுகளைக் குழலோசையில் ஈடுபடுத்தி அதனை ஊன்றிக் கேட்டனர்.

ஆய்ப்பாடி மக்களுக்குத் தீமைசெய்யும் எண்ணத்தோடு வந்த தேனுகன், பிலம்பன், காளியன் ஆகிய அசுரர்களை அழித்து அந்தக் காட்டில் பற்பல இடங்களிலும் திரிந்து குழல் ஊதினான் கண்ணன். காண்போரின் கண்கள் குளிரும் நீல மேகவண்ணமும், மனத்தைக் கவரும் இளமையும் பொருந்திய திருமேனியை உடையவன் கண்ணன். அவன் ஊதிய குழலோசையைக் கேட்ட மேனகை, திலோத்தமை, அரம்பை, உருப்பசி ஆகிய ஆடல் பாடல் வல்ல தேவமகளிர் தங்கள் கலைத்திறமையின் கீழ்மைக்கு நாணினர். 'கண்ணன் நடையழகுக்கு முன்னே தங்கள் ஆடல் எங்கே? அவன் குழலோசைக்கு முன்னே தங்கள் பாடல் எங்கே? என்று அவர்கள் மருண்டனர்; மயங்கினர். 'ஆடல் பாடல்' என்ற சொற்களையும் இனித் தம் வாயால் சொல்லத் துணியோம் என்று அவைகளைத் தவிர்த்தனர்.

நரசிங்க அவதாரத்தை எடுத்துத் திருமால் இரணியனுடைய வல்லமைகளை அழித்தான். அதனைக் கண்டு மூன்று உலகங்களிலுமுள்ள அரசர்கள் அஞ்சினார்கள். அத்தகைய அஞ்சத்தக்க அவதாரத்தை எடுத்த அவனே இப்போது கண்ணுக்கினிய கண்ணனாக வந்து தோன்றியுள்ளான். அவன் தன் வாயில் வைத்து ஊதும் குழலின் ஓசையோ மிக இனிமையாக இருக்கிறது; கேட்டாரைப் பிடித்து இழுக்க வல்லதாக இருக்கிறது. தும்புரு, நாரதர் ஆகிய இரு முனிவரும் வீணையில் வல்லவர்கள். அவர்களுடைய வீணையின் நரம்புகள் பேராற்றலை உடையன. செவிப்புலனுடையோரைத் தம் நாதத்தின் பெருமையால் கவர்ந்திழுப்பன. இவைகளைத் தமக்கே உரிமையாய்க் கொண்டு விளங்கிய அம்முனிவர்கள் இருவரும் பெருமிதத்தோடு இருந்தனர். இவர்களும் கண்ணனுடைய குழலோசையைக் கேட்டு விதிர்விதிர்த்தனர். தங்கள் வீணைகளைத் துறந்தார்கள்; பின் அதனை மறந்தார்கள். கிந்நரங்களை எடுத்துக் கொண்டு பாடித் திரிவதனால் 'கின்னர மிதுனங்கள்' என்று புகழ்பெற்றவர்களும் தங்கள் கிந்நரங்களை இனித் தொடமாட்டோம் என்று விரதம் பூண்டுவிட்டனர்.

கண்ணன் குழல் ஊதினபோது மேலும் சிலர் இடர் உற்றார்கள். வான வெளியில் திரிகின்ற ஆகாய கந்தருவர் கண்ணனுடைய குழலிசையாகிய 'அமுத கீதவலை'யில் கட்டுண்டனர். அவர்களும், 'இனி நாம் பாடினால் அது எடுபடாது' என்பதை உணர்ந்து, அதற்கு முன் அவர்கள் பாடியதற்காகவும் நாணி. அழ வழிந்தனர்; மனம் நைந்தனர்; உடல் சோர்ந்தனர். சோர்வு மிகுந்தது. அதனால் அவர்கள் வாய்விட்டுச் சொல்லவும் இயலாதவர்களாய்த் தம் கைகளை மடக்கிச் சைகையால் காட்டி நின்றார்கள்.

ஆநிரைகளை மேய்க்கும் ஆயர் சிறுவர்களின் கூட்டத்திடையே நின்று கண்ணன் குழலூதுகின்றான். அவன் இங்கு எளியவனாகத் தோன்றினாலும், நாகத்தை அணையாக உடைய பரமபதத்தானே என்பதை நமக்கு ஆசிரியர் நினைவூட்டுகிறார். அவன் ஊதிய குழலோசை தேவலோகத்தில் கேட்டபோது அங்கிருந்த தேவர்களும் பூவுலகத்தை நாடி வந்தனர்; கண்ணன் இருக்கும் திருவாய்ப்பாடிக்கே சென்றனர். அவர்களுடைய எண்ணிக்கைப் பெருக்கினால் அங்கு இடம் போதவில்லை. அவர்கள் நெருங்கி நின்றார்கள். அந்தணர்கள் யாகத்தில் அளிக்கும் 'அவிசை'த் தேவர்கள் விருப்பத்தோடு உண்பார்கள்; ஆனால் இப்போது அதை உண்ணவேண்டும் என்ற நினைவும் அவர்களுக்கு இல்லை. செவிக்குணவாக இனிக்கின்ற குழலோசையை உட்கொண்டு உள்ளம் களித்தனர். கண்ணனை ஒரு சிறுபொழுதும் அவர்கள் விட்டுப் பிரியாமல், அவனைப் பின்தொடர்ந்து சென்றனர்.

R. RAJU, M.A.
Dy Commissioner (Retired)
HR&CE Administration Dept

மேல் இரண்டாம் பாடலில், கண்ணன் குழல் ஊதினபோது அவன் திருமேனியில் ஏற்படும் சில அசைவுகளைச் சுட்டிக் காட்டினார். மேலும் சிலவற்றை இப்பாடலில் கூறுகின்றார். கண்ணனுடைய சிறு விரல்கள் குழலின் மீது இடமும் வலமுமாகத் தடவி அசைகின்றன. குழலின் உள்ள துளைகளை இசைக்கு ஏற்ப மூடியும் திறந்தும் அவை சஞ்சரிக்கின்றன. கண்விழிகள் மேலே செல்கின்றன. கடைவாய் இரண்டையும் குவித்து அவன் ஊதுகின்றபோது வாயினுள் இழுத்து நிறுத்தும் காற்றினால் வாய் குமிழ்கிறது; புருவத்தில் சிறு வியர்வை அரும்புகிறது; அந்தப் புருவம் மேலே கிளர்ந்து வளைகின்றது.

கண்ணனுடைய குழலோசையைக் கேட்ட பறவையினங்களும் தங்கள் கூடுகளை விட்டு அவனிடம் வந்து அவனைச் சூழ்ந்து கொண்டன. வெட்டிவீழ்த்திய காட்டைப் போல, அவை ஒன்றின்மேல் ஒன்றாக விழுந்து தம் வசமிழந்திருந்தன. கறவைகளும் அங்கே வந்து தம் கால்களைப் பரப்பிப் படுத்துக்கொண்டன; தம் தலைகளைத் தொங்கவிட்டன. செவிகளை ஆட்டாமல் நிறுத்தின. ஆநிரைகள் செவிகளை எப்போதும் அசைத்துக்கொண்டேயிருக்கும் இயல்புடையன. இப்போது செவிகளை அசைத்தால் இசையைத் தொடர்ந்து கேட்கத் தடையாகுமே என்று அவை தம் செவிகளை ஆட்டவில்லை.

கொண்டல் வண்ணனாகிய கண்ணன் முகத்தில், சுருண்டிருண்டுள்ள அவன் குழல் கற்றைகள் தாழ்ந்து தவழ்கின்றன. அவன் புல்லாங்குழலை எடுத்து ஊதுகின்றான். அந்த

ஓசை மான் கணங்களின் செவிகளில் கேட்கிறது. ஓசையின்பத்தில் அவைகளும் மயங்குகின்றன. எப்போதும் இயல்பாகப் புல் மேய்ந்துகொண்டிருக்கும் அவைகள் அதனை மறந்தன; வாயில் கவ்விய புல்லை விழுங்காமலும் உமிழாமலும் வைத்திருந்தன. அந்தப் புல் தாமாகவே கடைவாய் வழியே நழுவி விழுந்தன. அந்த மான்கணங்கள் நின்ற இடத்தில் அப்படியே நின்றன. அசையவில்லைஅவைகள் சித்திரத்தில் எழுதியவைபோல் இருந்தன.

கண்ணன் தனக்கு அடையாளமான மயிற் பீலியைத் தன் தலையில் அணிந்துள்ளான்; பீதக ஆடையை அழகாக இடையில் உடுத்திக் கொண்டுள்ளான்; அரிய அணிகலன்களைத் தன் திருமேனியில் சாத்திக்கொண்டுள்ளான். ஆயர்களின் தலைவனான அந்தக் கண்ணன் குழலை ஊதினான். தேவர்கள் மனிதர்கள் பறவைகள் விலங்குகள் போலவே ஓரறிவுடைய மரங்களும் உள்ளுருகினமையை இப்பாவில் வெளியிடுகிறார் விட்டுசித்தன். மரங்கள் உள்ளுருகியதை அவை தேன் பிலிற்றியதால் அறிகிறோம். கிளைகளிலிருந்து மலர்கள் வீழ்கின்றன. வளர்ந்து நீண்ட கொம்புகள் கீழே தாழ்ந்து நிற்கின்றன; இசையில் ஈடுபடுகின்றன. திருமால் உலாவிச் சென்று நிற்கும் திசைகளை நோக்கித் தொழுவாரைப் போல, அவை தம் கொம்புகளைக் குவிக்கும். அந்த மரங்களின் பண்புகள் வியக்கத்தக்கவை அன்றோ!

ஆனிரை மேய்க்கும் கண்ணன், தன் அழகிய வாயினில் குழலை வைத்து ஊதுகின்றான். குழலின் துளைகள் வழியாகக் கிளர்ந்து அலையெறிந்து குதிக்கின்றது, 'அமுதப்புனல்'. அந்தக்குழல் முழவத்தின் விளைவுகளையெல்லாம் பெரியாழ்வார் விரித்துரைத்துள்ளார். அந்தத் தமிழ்ப் பாடல்களைப் பொருள் தெரிந்து பாட வல்லவர்கள் குழலினும் இனிய சொற்களைப் பேசிப் பெரியோர்களின் திருக்கூட்டத்தில் சேர்வார்கள்.

ஆயர் சிறுமியரும், பூவுலக மங்கையரும் வானிளம்படியரும் குழலோசையைக் கேட்டு மனமுருகி நிற்கின்றனர். பறவையினங்களும் கறவைக் கணங்களும் மான்கூட்டங்களும் கண்ணனை வந்தடைகின்றன. மரங்கள் உள்ளுருகித் தம் கொம்புகள் தாழ்கின்றன.

மேனகை முதலான ஆடலரசிகள் ஆடல் பாடலில் தமக்கு மேம்பட்டாரில்லை எனத் திரிந்தவர்கள்; தும்புருவும் நாரதரும் நல்ல நரம்புடைய வீணைகளைத் தம் பெரிய உடைமைகளாக எண்ணிக் கொண்டிருந்தவர்கள், கின்னர மிதுனங்களும் அவ்வாறே பெருமை விளங்கத் திரிந்தவர்கள்; வான வெளியில் திரியும் கந்தருவரும் தமக்கு நிகரில்லையென எண்ணினவர்கள்; தேவர்கள் மனிதர்களின் வாடையைப் பொறுக்க மாட்டோமென்று பூமியில் கால் வைக்கவும் அருவருத்தவர்கள், இவர்கள் அனைவரும் 'தான்' 'தனது' என்னும் முனைப்பு மிக்கிருந்தவர்கள். 'வித்யா கர்வம்' என்னும் அறியாமையில் மூழ்கியிருந்தவர்கள். கண்ணன் தன் குழலோசையின் வழியாக இவர்களின் முனைப்பைத் தகர்த்தெறிந்தான்.

தன்குழலின் வழியாக, 'அமுதப்புனல்' பாய்ச்சி உலகெங்கும் நிறைத்தான் கண்ணன். உயிர்களெல்லாம் அந்தப்புனலில் குளிர்ந்து மகிழ்கின்றன.

---

## காலைக் கதிரவனும், கடவுட் காட்சியும்

ஆசிரியர் நக்கிரனாரின் அறிவாராய்ச்சி மிக்க புலமை உள்ளத்திற்குக் காலைக் கதிரவனின் உதயக்காட்சி, கடவுட்காட்சியையும் உணர்வையும் உண்டாக்கிய செய்தியைத் திருமுருகாற்றுப்படை நமக்குத் தெரிவிக்கின்றது. இங்ஙனமே மேலை நாட்டில் வாழ்ந்திருந்த தத்துவ நூற்பேராசிரியர் ஆகிய ஜீன் ஜேக்ஸ் ரூசோ (1712-1778) என்னும் அறிஞர் ஒருவருக்கும், நீலக்கடலின்மேல் இவர்ந்து வரும் காலைச் செஞ்ஞாயிற்றின் உதயக்காட்சி, கடவுள் உணர்ச்சி ஊட்டிய திறம்பற்றி, அவரே பின்வருமாறு கூறியிருத்தல், நாம் இங்கு உணர்ந்து மகிழ்தற்குரியது.

''ஆ, பெருமாட்டி! சில சமயங்களில் எனது படிப்பறையில் தனிமையாக, யான் என் கைகளினால் கண்களைப் பொத்திக்கொண்டோ, அல்லது இரவின் இருளிலோ இருக்கும்போது, கடவுள் இல்லை என்று யான் கருதுவது உண்டு. ஆனால், அதோ பாருங்கள்! உலகைக் கவிந்து கொண்டிருக்கும் பனிப்படலங்களைச் சிதறச் செய்துகொண்டும், இயற்கையின் மினுமினுப்பான வியத்தகு காட்சிகளை வெளிப்படுத்திக் கொண்டும், உதய ஞாயிறு தோன்றுகிறது. புறத்தே கவிந்துள்ள பனிப்படலத்தை மட்டுமேயல்லாமல், என் உள்ளத்தே சூழ்ந்துள்ள அறியாமையும் ஐயமுமாகிய மேகங்களையும்கூட, அஃது அஃகி அகன்றொழியுமாறு செய்கின்றது. என்னுடைய பக்தி உணர்வையும், எனது கடவுளையும், அவரிடத்தில் என் நம்பிக்கையையும், யான் மீண்டும் கண்டு உணர்கின்றேன். நான் அவரை வியக்கின்றேன்; அவரை வழிபடுகின்றேன்; அவர்தம் முன்னிலையில் யானே அவரது திருவடிகளில் நெடுக விழுந்து பணிந்து வணங்குகின்றேன்.''

''Ah, Madame !'', Rousseau writes to an aristocratic lady, ''Sometimes in the privacy of my study, with my hands pressed tight over my eyes or in the darkness of the night, I am of opinion that **there is no God**. But look yonder the **rising of the sun**, as it scatters the mists that cover the earth and lays bare the wondrous glittering scene of nature, disperses at the same moment all cloud from my soul. I find my faith again, and my God, and my belief in Him. **I admire and adore Him**, and I prostrate myself in His presence.''

—**Dr. Bertrand Russel**,
History of Western Philosophy, **p. 666.**

நக்கீரர் கண்ட நற்காட்சியும், ஜீன் ஜேக்ஸ் ரூசோ என்னும் தத்துவ அறிஞரின் உள்ளத்து உணர்ச்சியும், எத்துணைப் பொருத்தமுற ஒன்றி இயைந்து காணப்படுகின்றன. —ஆசிரியர்

# அன்புநெறி

திரு. ஆர். சதாசிவம், B.A.,M.L.

(முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை)

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே

(திருமூலர் திருமந்திரம்)

அன்பே கடவுள் என்பது உலகத்தில் எல்லா மதங்களிலும் காணப்படும் பொதுக் கொள்கை. கடவுளிடத்தில் செலுத்தப்படும் அன்பே 'பக்தி' எனப்படும். கண்ணப்பநாய னாரின் தீர்ந்த அன்பிற்கு நிகராக ''பேறினி வேறுண்டோ'' என்கிறார் சேக்கிழார் சுவாமி கள். ஆனால், ''தீர்த்த அன்பாய அன்பர்க்கு'' அவரினும் மேம்பட்ட அன்பையுடையவர் கடவுள். மாணிக்கவாசக சுவாமிகள் சிவபெரு மானை ''அன்பினில் விளைந்த ஆரமுதே'' என்கிறார். சிவபெருமான், அரி அயனுக்கு அரியவன்; ஆனால், அடியவருக்கு எளியவன். ஆண்டவனை மெய்யன்பினாலன்றி, அறிவா லோ ஆற்றலாலோ அடைவது இயலாதென்பது நமது சமயம் போதிக்கும் உண்மை. முதிர்ந்த மெய்யன்பர்கள்பால் அவரினும் மிகுதியாக அன்பு செலுத்துவது ஆண்டவனியல்பு என்பது அவன் திருவிளையாடல்களிலிருந்து புலனாகும்.

மதுரை மாநகரிலே வந்தி யென்னும் தவ மூதாட்டிக்காக மண் சுமந்து, அதற்குக் கூலி யாக உதிர்ந்த பிட்டை ஏற்று, உண்டு, அங்கு அரசனால் அடிக்கப் பெற்றுப் ''புண்ணைத் தாங்கிய பொன் மேனியன்'' அருள், அடி யார்க்கு எளியவரான ஆண்டவனின் தன்மை யைப் புலப்படுத்துகிறது.

''இது வைகையங் கரையின் மண்படப் பல்
கால் எழுந்து விளையாடும் பதம்!''

என்று 'திருவடிப்புகழ்ச்சி'ப் பாடலிலே வள்ள லார் இதைக் குறிக்கின்றார். இவ்விதமாக இறைவனின் அன்பினைப் பெற்றவர் இழி குலத்தினராயினும், அவர் வணங்குவதற் குரியவர் என்பதை அழகாக,

''. . . . . . . . . . . . . . . . . . . . . . . .
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராயின்
அவர்கண்டீர் யாம்வணங்கும் கடவுளாரே''

என்று அப்பர் கூறுகிறார்.

இராமகிருஷ்ணர் தம் உபதேசத்தில் அன் பில் மூன்று படித்தரங்கள் இருக்கின்றனவென் றும், ஒருவர் தம்முடைய இன்பத்திற்காக வென்று பிறரை நேசிப்பது கடைத் தரமான தென்றும், அதைவிட ஒருபடி மேலேயிருப்பது தோழமை அன்பென்றும், ஆனால், தலையா யது தாம் யாரை நேசிக்கின்றாரோ அவரு டைய இன்பத்திலேயே கண்ணும் கருத்துமா யிருந்து, அவர் பொருட்டுத் தம் இன்பத்தை யும், தம்மிடத்துள்ள அனைத்தையும் தியாகம் செய்கிற மன நிலையினால் விளையும் 'சமர்த்த அன்பே' யென்கிறார். இந்த சமர்த்த அன்பே ''பக்தி'' எனப்படும் உண்மை அன்பு. தன்னு டைய இன்பத்திற்காகப் பிறரை நேசிப்பது அன்பு அல்ல; அதை ஆசை என்றே சொல்ல வேண்டும். ஆங்கிலத்தில் 'அன்பு' என்னும் சொல்லிற்கும் 'ஆசை' என்னும் சொல்லிற்கும் வேறுபாடில்லாமல் (லவ்) என்னும் சொல் லையே பயன்படுத்துகிறார்கள். அன்பு வேறு, ஆசை வேறு. அன்பின் விளைவு ஆரமுதம்; ஆசையின் விளைவு துன்பம். ''ஆசைக்கோர் அளவில்லை'' என்பது தாயுமானவரின் புகழ் பெற்ற பாட்டின் கருத்து. நாம் எந்தப் பொரு ளின் மீதோ, எவரின் மீதோ அதிக ஆசை வைத்தல் கூடாது. இதே கருத்தை

''ஆசை அறுமின்கள், ஆசை அறுமின்கள்
ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்''

என்னும் பெரியோர்கள் வாக்கு நமக்குப் புகட்டு கிறது.

இதிலிருந்து, ஆண்டவன் மீதுகூட நாம் வைப்பது ஆசையாக இருப்பது கூடாது, ''சமர்த்த அன்பாக'', உண்மை அன்பாக, இருத்தல் வேண்டும் என்பது தெளிவாகும்.

ஆங்கிலச் செய்யுள்களில் இரண்டுகதைகள் 'அன்பே கடவுள்' என்று எல்லா மதத்திலு முள்ள கருத்தை நன்கு விளக்குகின்றன.

'ஆபு பென் ஆதம்' என்பவருக்கு ஓரிரவு ஒரு தெய்வீகக் காட்சி கிடைத்தது. ஒரு தேவ தூதர் தங்க மயமான ஒரு புத்தகத்தில் ஏதோ எழுதுவதை அவர் கண்டார். ஆதம் அன்புடன் ''என்ன எழுதுகிறீர்?'' என்று வினவ, கடவுளின் அன்பர்களின் பெயர்களை எழுதுவதாகத் தேவ தூதர் விடையளித்தார். அந்தப் புத்தகத்தில்

தம்முடைய பெயர் இடம் பெற்றிருக்கிறதா என்று ஆதம் ஆவலுடன் கேட்க, தேவதூதர் 'இல்லை' என்றதும், முகமலர்ச்சியுடன் தன் பெயரை ''மக்களின் அன்பர்'' என்று எழுதிக் கொள்ளும்படி விண்ணப்பம் செய்தார். மறு நாளிரவு அதே தேவ தூதர் ஆதமுக்குக் காட்சியளித்து, தாம் எழுதியபுத்தகத்தை ஆதமுக்குக் காண்பித்தபொழுது, ஆதமுடைய பெயர் எல்லோருடைய பெயருக்கும்முன்னால் காணப்பட்டது. பிற மக்களிடம் அன்பு செலுத்துபவர் தாம், கடவுளின் அன்பராவர் என்னும் கருத்து இந்தக் கதையில் நன்கு புலனாகிறது.

முகம்மதியர்களுக்கு ''வம்மாஸ்'' இரவு என்று ஒரு விழா உண்டு. அப்துல்லா, அகம்மது என்று இரு சகோதரர்கள் இருந்தனர். அப்துல்லா மூத்தவன். அவனுக்குத் திருமணமாகிக் குழந்தையுண்டு. அகம்மது இளையவன்; திருமணமாகாதவன். தனியாக மனைவி, மக்களில்லாமல் வசிக்கும் தன் தம்பியைப் பார்த்து, தன் நிலத்தில் விளைந்த தானியத்தை அன்புடன் கொடுக்க எண்ணி, தன் மனைவியிடம் விடை பெற்று அந்த விழா இரவில் அப்துல்லா புறப்பட்டான். அதே இரவில் அதே நல்ல எண்ணம் அகமதுக்கும் தோன்றியது. தனியாக வசிக்கும் அகம்மதுகுடும்பத்துடனிருக்கும் சகோதரனைக் கண்டு களிப்பூட்ட வேண்டும் என்ற எண்ணத்துடன், தானும் தன் நிலத்தில் விளைந்த தானியத்தை எடுத்துச் சென்றான். மறுநாள்அருணோதய வேளையில் சகோதரர்களிருவரும் பாதி வழியில் சந்தித்தனர். அவர்கள் அன்பும், அன்புக் காணிக்கையான தானியமும் சம அளவாக இருந்தது. எங்கு இருவர் மனத்திலும் நல்ல அன்பு கலந்த எண்ணம் ஒரே வேளையில் தோன்றிற்றோ, அங்குதான் ''அல்லா'' இருக்கிறார் என்று இந்தச் சம்பவத்தைக் கேட்ட 'காலிப்' அரசர் முடிவு கூறினார். இவ்விரு கதைகளும் ''அன்பில் விளையும் ஆரமுதே'' ஆண்டவன் என்பதை உணர்த்துகின்றன.

இராமலிங்க சுவாமிகள் இயற்றிய திருவருட்பாவின் முதல் பதிப்பு 1867-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. அவர் நிறுவிய சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தின் நூற்றாண்டு நிறைவு விழா, பல இடங்களில் சிறப்பாக நடைபெற்றது. திருவருட்பா முதலில் வெளியிடப்பட்ட காலத்திலிருந்து நூறு ஆண்டுகள் கழிந்து போயின. அந்தத் தெய்விக நூலில் அடங்கியிருக்கும் கொள்கைகளும், தத்துவங்களும் எல்லாச் சமயத்தாரும் ஒப்புக் கொள்ளக்கூடிய பொது உண்மைகள். படித்து, கேட்டு பின்பற்றி நம் வாழ்க்கையைப் புனிதமாக்குவதற்கு ஏற்ற கொள்கைகளடங்கிய சிறந்த நூலாகும் திருவருட்பா. முக்கியமாக அது 'அன்பு' நெறியைப் புகட்டும் நூலாக விளங்குகிறது.

நாம் இறைவனிடம் விரும்பி வேண்டத்தக்கது உண்டென்றால், அவ்விதம் நம் மனத்தில் ஏற்படும் இச்சையும், இறைவனுடைய விருப்பமேயாகும் என்பது மாணிக்கவாசகரின் மணிவாக்கு. இராமலிங்க சுவாமிகள் இறைவனிடம் விண்ணப்பம் செய்து கொள்வதும் அவர் போதிக்கும் அன்பு நெறியையே காட்டுகிறது:

''அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்''.

எவன் ஒருவன் மனிதன், முதலான எல்லா உயிரினங்கள் மீதும் அன்பு செலுத்துகிறானோ அவன்தான் இறைவனை ஏற்றமுறையில் வழிபடுகிறானென்ற இதே கருத்தை மிகவும் அழகாக மேல்நாட்டுக் கவிஞர் ஒருவர் கூறியிருக்கிறார்.

இராமலிங்க சுவாமிகள் ஜீவகாருண்ய ஒழுக்கத்தை மிக்க விரிவாகப் போதித்துள்ளார். புலால் உண்ணாமை, பசி, பிணி முதலிய துன்பங்களால், வருந்துபவர்களுக்கு உதவி செய்தல் எல்லாம் ஜீவகாருண்யச் செயல்கள். ஜீவகாருண்ய ஒழுக்கத்திற்கு அடிப்படையாக அமையும் தத்துவம் அன்பேயாகும். எவன் ஒருவன் அன்பையும், இரக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கையை நடத்துகிறானோ, அவனுக்கு இறைவன் அருள்புரிவான் என்பது அடிகளின் கருத்து. ஜீவகாருண்யமே முக்திக்கு முதற்படியென்றும், கடவுளை அடைவதற்கு அவனருள் வேண்டுமென்றும், அவ்வருள் அன்பாலல்லாது வேறு வகையாலடைவது அரிது என்றும், இவ்வன்பு ஜீவகாருண்யத்தால் அல்லது வேறு வகையால் வராது என்பதும், ஜீவகாருண்யத்தின் விளைவே அன்பு என்பதும் அடிகளின் அறிவுரை. ஜீவகாருண்ய ஒழுக்கத்தைப் பற்றிய போதனையை அடிகள் கீழ்க் கண்ட கடவுள் வாழ்த்துடன் துவக்கியிருக்கிறார் :

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே!
அன்பெனும் குடில்புகும் அரசே!
அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே!
அன்பெனும் கரத்தமர் அமுதே!
அன்பெனும் கடத்துள் அடங்கிடுங் கடலே!
அன்பெனும் அணுவுள்ளார் ஒளியே!
அன்பெனும் உயிருள் ஒளிர்தரும் அறிவே!
அன்புரு வாம்பர சிவமே!

இராமலிங்க சுவாமிகள் வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் மனம் வாடினார்; பசியினால் அல்லல் படுவோரைக் கண்டு உளம் பதைத்தார், பிணியால் வருந்துவோர்களைக் கண்டு உள்ம் துடித்தார், என்றெல்லாம் திருவருட்பாவிலிருந்து தெரிகின்றோம். இவை அவருடைய கருணையுள்ளத்தைப் புலப்படுத்துகிறது. ஆனால், இவைகளைப் பற்றிப் பேசுவதில் மட்டும் பயனேதும் இல்லை. சீலம் மிக்க சான்றோரின் சிறந்த வாழ்க்கை வரலாறுகளை அறிவதின் பயன், நாம் நமது வாழ்க்கையைப் புனிதப்படுத்திக் கொள்வதே என்பது மேல் நாட்டுக் கவிஞரின் கருத்து.

அன்றாட வாழ்க்கையில், அவரவர் தொழிலில், நாம் அனைவரும் மனத்தினாலும், வாக்கினாலும், செயலினாலும் நம்மால் இயன்ற

அளவு நல்லெண்ணங்களை நினைத்தும், பிறர் மனத்தில் இன்பம் எழும் வகையில் உரையாற்றியும், நற்செயல்களைச் செய்தும் வாழ்க்கை நடத்துவதே அன்பு நெறி. இந்த அன்பு நெறியைப் பின்பற்றுவது எளிதன்று. எனினும் அக் கொள்கையில் திட நம்பிக்கையாலும், விடா முயற்சியாலும், இறைவனருளாலும் நாம் ஓரளவாவது வெற்றி பெறலாம்.

இனிய மொழி பகருவதற்கு இடம், காலம் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை என்ற தடங்கல்கள் கிடையாது. முக்கியமாக, மருத்துவசாலையில் வரும் நோயாளிகளிடமும், சிறைக்கூடங்களிலிருக்கும் குற்றம் புரிந்தவர்களிடமும், திருத்த விடுதிகளிலிருக்கும் பிழை செய்தவர்களிடமும், அநாதை விடுதிகளிலிருக்கும் ஆதரவற்றவர்களிடமும், நீதிமன்றங்களில் நிற்கும் குற்றம் செய்தவர்களிடமும் நாம் கடமையைச் செய்யும்பொழுது, அன்புடன் நடந்து கொண்டால் இராமலிங்க சுவாமிகள் 'அன்பு' நெறியில் நமக்கு நம்பிக்கையுண்டு என்று எண்ணுவதற்கிடமுண்டு. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இடம் பெறுவதற்கு மாணவர்கள் பெற்றோர்களுடன் சென்று, மன அமைதி இல்லாமலிருக்கும் சந்தர்ப்பங்களில், அவர்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் நிலையில்லாவிடில், பள்ளித் தலைமை ஆசிரியர்களும், கல்லூரித் தலைவர்களும் தங்களிடம் வருபவர்களின் மனம் புண்டாமல் உரையாற்றினால், அவர்கள் அன்புநெறியைப் பின்பற்றுவதில் மனத்தைச் செலுத்துகிறார்கள் என்று கருதலாம். வாழ்க்கையில் ஒவ்வொருவரும் அன்பு நெறியைப் பின்பற்ற முயல வேண்டும். எவன் ஒருவன் 'அன்பை' அடிப்படையாகக் கொண்டு வாழ்வாங்கு வாழ்கின்றானோ அவனை உலகம் தெய்வமெனக் கருதிப் போற்றுகிறது.

R. RAJU,
Dy. Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

## நிர்வாக அதிகாரிகள் நியமனம்

(1) 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் 45 (1) பிரிவின் கீழ், கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம் ராசக்கபாளையம் மாகாளியம்மன் கோயிலின் நல்ல நிர்வாகம் குறித்து நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இக்கோயில் கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், பொள்ளாச்சி நகரம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டுள்ளது. (யு.ஓ. குறிப்பு எண். 86/299/80/பி6 20-2-81).

(2) கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், கோட்டாறு கிராமம் அருள்மிகு உருத்திராபதி விநாயகர்கோயில், செவிது சாத்தர் கோயில், ஆயுள்பிராட்டியம்மன் கோயில், அருமைபோத்தி கோயில், புங்கடி விநாயகர் கோயில் ஆகியவற்றிற்கு ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் தேவஸ்வம்போர்டு நிர்வாக அதிகாரி-உதவி ஆணையர்க்குக் கூடுதல் பொறுப்பு அளிக்கப்பெற்றுள்ளது. (யு. ஓ. குறிப்பு எண். 87048/80-பி6 நாள் 26-2-81).

(3) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், தோணம்படுகை கிராமம் அ.மி. ஒடிடம் கொண்ட ஐயனார்கோயிலுக்கு நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இக்கோயில் கும்பகோணம் வட்டம், பட்டீஸ்வரம் அருள்மிகு தேனுபுரீசுவரர் கோயிலுடன் இணைக்கப்பட்டுள்ளது. (யு. ஓ. குறிப்பு எண். 52836/80 பி-6 நாள் 28-2-81).

(4) சேலம் மாவட்டம், நாமக்கல்வட்டம், வெண்கரை அருள்மிகு நீலகண்டேசுவரர் கோயிலுக்கு நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இக்கோயில் சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டம், ஆண்டமங்கலம் அருள்மிகு பிரசன்ன வேங்கட ரமணசுவாமி கோயிலுடன் இணைக்கப் பெற்றுள்ளது. (யு. ஓ. குறிப்பு பார்வை எண். 361/80-அ6 நாள் 24—2—81).

(5) திருச்சிவட்டம், திருச்சி நகரம், தையற்காரர் தெரு அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி—திரௌபதியம்மன் கோயிலுக்கு ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப் பெற்றுள்ளார். இக்கோயில், திருச்சி வட்டம், திருச்சி நகரம் அருள்மிகு பூலோகநாதசுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டுள்ளது. (யு. ஓ. குறிப்பு எண். 55197/80-பி6 நாள் 28-2-81).

(6) தென்னாற்காடு மாவட்டம், உளுந்தூர்ப்பேட்டை வட்டம், யு. கீரனூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப் பெற்றுள்ளார். இக்கோயில் தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி அருள்மிகு தில்லைக் கோவிந்தராசப் பெருமாள் கோயிலுடன் இணைக்கப்பட்டுள்ளது. (யு. ஓ. குறிப்பு எண். 8904/81-பி6 நாள் 28-2-81).

(7) தஞ்சாவூர் மாவட்டம், சீர்காழி வட்டம், காத்திருப்பு அருள்மிகு சுவர்ணபுரீசுவரர்கோயில், காத்திருப்பு தேர்க்கஞ்சாமணி விநாயகர் மற்றும் பரமணர் கோயில்கள், கொண்டல். குமார சுவாமி கோயில் ஆகியவற்றிற்கு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இக்கோயில்கள் தஞ்சாவூர் மாவட்டம், சீர்காழி வட்டம், திருவெண்காடு அருள்மிகு சுவேதாரண்யேசுவர சுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டுள்ளன. (யு. ஓ. குறிப்பு எண். 86291/80-பி6 நாள் 27-3-81).

# "அடியேனையும் தாங்குதல்"

( திரு மு. அருணாசலம் )

திருவாசகத்தில் ''வேண்டத் தக்கதறிவோய் நீ'' என்ற பாடல் எல்லோர் மனத்திலும் இருக்கத் தக்கது. இறைவன் வேண்ட முழுவதும் தருபவனாகிலும், அவனிடத்தில் உண்மை ஞானிகள் எதுவும் வேண்டுவதில்லை. வேண்டுவது எல்லாம் அறிபவன் அவன். இத் தகையதொரு மேலான மனப்போக்கு எல்லா மெய்ஞ்ஞானியர் வாழ்க்கையிலும் சொல்லிலும் சிறந்து காணப்படுகிறது. குறளையும் இங்கு நினைவு கூரலாம். வேண்டாமையே உயிர்கள் வேண்டத்தக்கதாகும்-ஒன்று வேண்டத்தக்க தென்றால் அது பிறவாமை. இதைக் காரைக் கால் அம்மையாருடைய வாழ்க்கையிலும் காண்கிறோம்.

''இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார் ;
பிறவாமை வேண்டும்; மீண்டும்
பிறப்புண்டேல், உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும்
வேண்டும், நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போது, உன்
அடியின்கீழ் இருக்க என்றார்!''

இங்கு அவர் வேண்டுவது என்பது, (சேக்கிழார் புராணம், அம்மையார் புராணத்தில் 60ஆம் பாடல்). இறைவனிடத்தில் எல்லையற்ற பக்தி வேண்டுகிறார். அதன்மேல் பிறப்பற்ற ஒரு பேரானந்த வாழ்க்கையைக் கேட்கிறார். இதுவே அடியார் அனைவருடைய மனப்பான்மையுமாகும். உள்ளத்துள் அந்தரியாமியாக இருக்கின்ற இறைவன் உணர்த்த, நாம் உணருகிறோம். அவன் ஆட்டுவிக்க நாம் ஆடுகிறோம். அவன் வேண்டுவிக்க நாம் வேண்டுகிறோம். நாமாகக் கேட்பது என்பது ஒன்றல்ல.

திருஞானசம்பந்தர் இறைவனுடைய திருவருளாகிய ஞானப்பாலை உண்டமையால் அவரைப் புத்திர மார்க்கத்திற்கு எடுத்துக் காட்டாக ஆன்றோர் சொல்வார்கள். பச்சிளங் குழந்தையாகவே வாழ்ந்த அவர் வேண்டியது யாவும் உலக நன்மைக்கே ஆகும். தமக்கென்று அவர் எதையும் வேண்டினார் அல்லர். திருமழபாடியில் கொல்லிமழவன் மகளைப் பற்றிய பெரும் பிணியாகிய முயலகனைப் போக்கியது; திருச்செங்குன்றூரில் அடியார்களுடைய பனிப்பிணியைப் போக்கியது; திருமருகலில் விடந்தீண்டப்பெற்ற வணிகனை எழுப்பியது; திருவீழிமிழலையில் வாசி தீர்ந்த காசு பெற்றது. பாண்டி நாட்டில் பாண்டியனுடைய வெப்புநோயை நீக்கிச் சமணை அகற்றிச் சைவத்தை நிலைநாட்டியது; திருவோத்தூரில் ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கிக் காய்க்குமாறு செய்தது; திருமயிலையில் அரவம் தீண்டியிறந்த பூம்பாவையின் அங்கத்தை மீண்டும் பூம்பாவை ஆக்கியது, தமது திருமணத்தின் முடிவில் ஆண்டு வந்திருந்தோர் அனைவரையும் சோதியுட்புகுந்து முத்திபெறச் செய்தது ஆகிய செய்கைகள் யாவும், சமூக மாந்தருடைய நலம் கருதி அவர் இறையருளை வேண்டிச் செய்தனவாகும். மற்று அவருக்கு இறைவன் திருக்கோலக்காவில் கைத்தாளம் அளித்தது, திருநெல்வாயில் அரத்துறையில் முத்துச்சிவிகை தந்தது, திருப்பட்டீச்சுரத்தில் முத்துப்பந்தர் பெற்றது ஆகிய பேறுகள் யாவும் திருஞான சம்பந்தருடைய பிள்ளைப் பருவம் கருதிச் சிவபெருமானால் அவருக்கு அளிக்கப் பெற்ற கருணைச் செயல்களாகும்.

அடியாருக்கு உதவுவதே தமது கடன் என்று வாழ்ந்தவர் ஞானசம்பந்தப் பிள்ளையார். தந்தையார் யாகத்துக்குப் பொருள் வேண்டியபோதுகூட, சம்பந்தர் அவருக்கு உதவுவது தமது கடன் என்று எண்ணினார். இறைவனைத் தமக்கென்று எதுவும் கேளாத இவர், இப்போது ஒன்று கேட்க வேண்டியநிலை ஏற்பட்டது. ஆனாலும் கொடு என்று இறைவனைக் கேட்கவில்லை.

"ஈவது ஒன்று எமக்கில்லையேல் அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே" என்று பாடினார். எனக்குக் கொடு என்று கேட்கவில்லை. தந்தைக்காகக் கொடு என்றும் கேட்கவில்லை. 'கொடுப்பதற்கு இல்லாத நிலையில் என்னை வைத்திருக்கிறாயே' என்றுதான் கேட்டார். இத்தகைய செய்திகள் யாவும் சேக்

கிழார் காட்டும் நுட்பங்கள். இந்த நுட்பங்களைப் பிற நாயன்மார் வாழ்க்கையிலும் நாம் மனத்தில் சிந்தித்துப் பார்க்கலாம்.

'எல்லாக் கடமைகளையும் விட்டுவிட்டு என்னையே நீ சரண் புகுவாயாக. எல்லாப் பாவங்களிலிருந்தும் நான் உன்னை நீக்குகிறேன்' என்பது கீதையின் வாக்கியம். போர்க்களத்தில் ஒருகால் இது அர்ச்சுனனுக்குப் பொருத்தமாக இருக்கலாம். ஆனால் எல்லோருக்கும் இது எல்லா நிலையிலும் பொருந்துமா? என்பது ஐயம்!

அப்பர் சுவாமிகள் ஒரு நிலையைக் காட்டுகிறார். இறைவனுக்குத் தொண்டு பூண்ட ஆன்மாக்கள் செய்ய வேண்டியது என்ன? என்பது கேள்வி. பணிசெய்தல் என்பது அவருடைய அருள் வாக்கு. அவர் அருள்வழி நின்றவராதலால், அவர் சொல்லும் பணி இறைபணியே. இறைபணி என்பதனை, அவருடைய வாழ்க்கை வரலாற்றால் நன்கு அறிகிறோம். அலயத்துள் புகுமுன் உட்சென்று பெருமானைத் தரிசித்துப் பாடல் தொண்டு புரிந்தார். இந்த நிலையின் சின்னமாக விளங்குவது, அவர் கையில் தாங்கிய உழவாரப்படை. இந்த நிலையைச் சேக்கிழார் பின்வரும் பாடலில் நன்றாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

''சிந்தை இடையறா அன்பும்
திருமேனி தன்னில் அசைவும்
கந்தை மிகையாங் கருத்தும்,
கை உழவாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும்
வடிவிற் பொலி திரு நீறும்
அந்தமிலாத் திருவேடத் தரசும்
எதிர் வந்தணைய''

எனவே அப்பர் சுவாமிகள் எல்லாத் தருமங்களையும் விட்டுவிடத் தயாராக இல்லை. இறைபணி ஆகிய தம் உழவாரப் பணியைச் சென்ற இடமெல்லாம் செய்து வந்தார். இந்த அரிய பணி விசேடத்தால், எல்லா ஆலயங்களிலும் குழந்தை ஞானசம்பந்தர் கையில் பொற்றாளம் இருப்பது போல, அப்பர் கையில் உழவாரப்படை இருக்கிறது. தம்முடைய கடன் பணி செய்தல், பணிசெய்து கிடத்தல் என்று அவர் கூறுகிறார்.

நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன் கடன் அடியேனையுந் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே

என்பது அவர் பாடல். இதன் இறுதி வரியில் 'பணி செய்து கிடப்பது' என்று கூறுவதுபெரும் பொருள் உடையது. 'கிடத்தல்' என்றால், இங்கு இருத்தல் என்பது பொருளல்ல. உணர்வற்றிருத்தல் என்பது பொருள். உணர்வற்றிருத்தல் என்றால் என்ன பொருள்? ''நான் பணி செய்கிறேன். அதற்குப் பலன் உண்டு'' என்று எதிர்பார்க்கிற உணர்வு அற்றிருத்தல். இதுவே அப்பர் வாழ்க்கையின் தத்துவம். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பது சைவ மக்களுக்கு ஒரு தாரக மந்திரம்.

இந்த இறுதி வரிக்கு முன்னுள்ள வரியையும் சிந்திக்க வேண்டும். இறைவன் ஐந்தொழில் செய்கிறவன். அவனே படைக்கிறான். அவனே வேண்டுவன எல்லாம் தந்து ஆதரித்துக் காப்பாற்றுகிறான். இதையே தாங்குதல் என்று அப்பர் கூறுகிறார். அனைத்துயிர்களையும் அவன் படைத்தான். படைத்தன யாவும் பாதுகாக்கிறான். இது சாமானியமான தத்துவக் கருத்து. 'கருப்பையுள் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும், விருப்புற்று அமுதளிக்கும் மெய்யன்-உருப்பெற்றால் ஊட்டி வளர்க்கானோ?' என்பது பழம்பாடல். எனவே 'என்னை நீ பாதுகாக்க வேண்டும்' என்று இறைவனை வேண்டுவது என்பது பொருளற்ற சொல் என்பது அப்பர் சுவாமிகள் கருத்து. 'உலகத்திலுள்ள அனைத்தையும், எறும்பு முதல் யானை ஈறாக உள்ள அனைத்து உயிர்களையும் காக்கின்ற இறைவன், அவ்வனைத்தினுள் ஒருயிராகிய என்னையும் காக்கிறான்' என்பது கேட்கவும் வேண்டுவதில்லை; சொல்லவும் வேண்டுவதில்லை. இது சொல்லாமலே அமைவது. இந்தக் கருத்து, அடியேனையும் என்ற சொல்லிலுள்ள உம்மையால் பெறுகிறோம். எம்மைக் காக்க வேண்டும். அதற்குக் 'கைம்மாறாக நான் உனது பணியைச் செய்கிறேன்' என்பது ஒரு வியாபாரம். சங்க நூல்களில் கூறியுள்ள அறவிலை வணிகம் போன்றது. அப்பர் சுவாமிகள் இங்குக் கூறுவது பூரணமான சரணாகதி. பலன் கருதாமல் செய்கின்ற சேவை. இதுவே வைணவர் கூறும் பிரபத்தி.

இப்பாடலில் முதல் இரு வரிகளும் கருதத்தக்கன. இறைவன் உமாதேவியைப் பங்கில் உடையான் என்று இங்குக் கூறுகிறார். ஆகவே அவனுடைய கருணை உயிர்கள்பால் எப்போதும் உள்ளது என்பது ஒரு குறிப்பு. மேலும் இங்கு உமாதேவியைக் கூறும்போது, அவள் 'கடம்பனைப் பெற்றவள்' என்கிறார். கடம்பனாவது குருநாதன்; ஞானத்தைத் தருபவன். எனவே ஒப்பற்ற தனி ஞானத்தினாலான உணர்வு பெற்றவராய் அப்பர் சுவாமிகள், 'எனக்கு நீ கருணை செய்ய வேண்டும்' என்று கூறாமல், இறைபணி பலன் கருதாது செய்ய வேண்டியதையே இப்பாடலில் தெரிவிக்கிறார் என்பது நம் உள்ளத்தில் கொள்ளத்தக்கதாகும். தாங்குதல் கருணையால் விளைகின்ற ஒரு கடன். அதை எவரும் கருதாது, தம் கடமையைச் செய்து வருதல் வேண்டும் என்பதே அவருடைய உபதேசம்.

# மனத்தளர்ச்சி

'மருத்துவப் பேரறிஞர்'
திரு. டாக்டர் இரத்தினவேல் சுப்பிரமணியம்,
(B.Sc., M.D., F.R.C.P., F.C.C.P., F.A.M.S.)

''தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது''
—திருவள்ளுவர்

மனத்தளர்ச்சி என்றால், ஒருகாரணமும் இல்லாமல், வாழ்க்கையில் உற்சாகம் குன்றிப் போவது! ஏதோ காரணங்களைக் கொண்டு, ஒரு சிலர் உற்சாகம் குன்றி மகிழ்ச்சியே இல்லாமற் சோர்ந்து போவது உண்டு. துரதிருஷ்ட வசத்தினால், ஒருவனுக்கு நெருங்கிய உறவினர்களோ, பெற்றோர்களோ, மகனோ, இறக்க நேரிட்டால், அப்போது அவனையும் அறியாமல் உற்சாகம் குன்றி, மனத்தளர்ச்சி ஏற்படும். இது இயல்பு. அப்படி இல்லாமல் இருந்தால்தான், இயற்கைக்கு நேர்மாறான சம்பவம். ஆனால் இந்தவிதமான மனத்தளர்ச்சி, கொஞ்ச காலம் கழிந்தால், பிறகு சிறிது சிறிதாகக் குறைந்து, சாதாரண நிலையை அடைந்து விடக்கூடும்.

இவ்வாறு இன்றி, ஒருவிதமான காரணமும் இல்லாமலே திடீர் என்றோ, அல்லது நாளடைவிலோ, மனத்தளர்ச்சி ஏற்படலாம். வாழ்க்கையில் பிடிப்பு இல்லாமல், ஏன் உயிரோடு இருக்கிறோம் என்று வெறுப்புத்தோன்றலாம். வாழ்க்கையிலே ஒருவகை அருவருப்பு ஏற்படுவதும், முன்பெல்லாம்சுலபமாகச்செய்து முடித்த காரியத்தையே, இதனை எப்படிச் செய்யப் போகிறோம் என்று எண்ணிப் பிரமித்துப் போவதும், நண்பர்களையோ உறவினர்களையோ கண்டால் மகிழ்ச்சி இல்லாமல் ஏதோ புதிதாக வருபவர்களைப் பார்ப்பது போல் இருப்பதும், ஆகிய இவைகளெல்லாம் ஒருவகை மனத்தளர்ச்சிகளே யாகும். இந்த மாதிரியான மனத்தளர்ச்சி, மேல்நாடுகளில் அதிகமாகக் காணப்படுகிறது. நம்நாட்டில் அவ்வளவு அதிகமாகக் காணப்படவில்லை. அங்ஙனம் காணப்படாததற்கு மிக முக்கியமான காரணம், அவ்வைப்பிராட்டியார் சொன்ன வார்த்தையை வேத வாக்காகக் கொண்டு ''கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பதை முன்வைத்து, மக்கள் இங்கு நம்நாட்டில் நடந்து வருதலேயாகும். இப்போதும், நம்முடைய சென்னையில் எந்தப் பக்கும் பார்த்தாலும், பிள்ளையார் கோயிலோ, முருகன்கோயிலோ அல்லது மாரியம்மன்கோயிலோ, மசூதியோ, மாதாகோவிலோ ஆங்காங்கே அமைந்திருத்தல் காணலாம். இவ்வாறு நம் நாட்டில், எல்லா இடங்களிலும், ஊர்களிலும், ஏதேனும் சிறிய சிறிய கோவில்களாவது ஆங்காங்கே அமைந்திருப்பதன் காரணமாக, நம் மனத்திற்கு எப்போதைக்கெப்போதெல்லாம் உற்சாகம் குன்றிச் சோர்வும் தளர்ச்சியும் கவலையும் ஏற்படுகின்றதோ, அப்பொழுதெல்லாம் அக்கோயில்களுக்குச் சென்று, தெய்வத்தைத் தரிசித்து, தியானம் செய்து, தெய்வத்தின் திருவடியை அடைக்கலம் புகுவதனால், நாம் நம்முடைய மனத்தளர்ச்சியினையும் கவலைகளையும் மாற்றிக் கொள்ளக்கூடிய நிலை ஏற்படுகின்றது.

ஆனால் மேல்நாடுகளிலோ, இப்படி எல்லா இடங்களிலும் ஆலயங்கள் கிடையாது. மாதாகோயிலோ, மசூதியோ எல்லா இடங்களிலும் இருக்காது. ஏதோ ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும்தான் பெரும்பாலும் இருக்கும். மேலை நாட்டார் படிப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து, பல்வேறு விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளித்து, மனிதனின் பலவிதமான சாதனைகளைச் செய்து காட்டி, மனிதன் முயன்றால் எல்லாம் செய்ய வல்லவன் என்று நினைத்து வருகின்றனர். மேலை நாடுகளில் ஆகாயவிமானங்கள் நிமிடத்திற்கு ஒன்றாக மேலே பறப்பதும், கீழே இறங்குவதுமாக உள்ளன. மேலை நாடுகளில் பெரிய பெரிய நகரங்களின் ஆகாய விமான தளங்களில், இத்தகைய நிகழ்ச்சிகளைக் காணலாம். விமானங்கள் வருவதும் போவதும், அவைகள் மனிதனுடைய உதவியில்லாமலே ராடர்ர் என்று சொல்லக்கூடிய கருவியின் மூலம், எந்தவித இன்னல்களிலும் சிக்கிக் கொள்ளாமல், மழையோ வெயிலோ இருளோ எதுவாயினும் பாதிக்கப் படாமல், குறிப்பிட்ட கோட்டுக்குள் பத்திரமாக வந்து இறங்கும். இப்படி எத்தனையோ பலப்பலவிதமான நுண்ணிய விஞ்ஞானக் கருவிகள் இருப்பதனாலும், அவைகளைக் கொண்டு பலப்பல வியத்தகு சாதனைகளைச் செய்து வருவதனாலும், மனிதன் கர்வமும் அகந்தையும் அடைந்து, தெய்வம் ஒன்று உண்டு என்பதையும், அதனது பேராற்றலுக்கு உட்பட்டே உலகம் இயங்கி வருகின்றது என்பதையும் மறந்து விடுகின்றான்.

நமக்கு ஏதேனும் ஒரு வேலைஆகவேண்டுமானால், அது நம்மால் செய்து கொள்ள முடி

யாமல் இருந்தால், வேறு யாரால் அதைச் செய்து கொள்ள முடியும் என்று ஆலோசனை செய்து, அவர்மூலம் அந்தக் காரியத்தைச் சாதித்துக் கொள்ளுகின்றோம். இப்படி இன்னொருவர் ஒத்தாசையை நாம் நாடும்போது, அவருக்கும்கூட ஓரளவுதான் நமக்கு ஒத்தாசை செய்ய முடியும். அவரும் நம்மைப்போல் ஒரு மனிதர்தான். அதனால், எவராலும் எல்லாவற்றையும் செய்து விட முடியாது. மனிதனின் அறிவும் ஆற்றலும் ஒரு குறிப்பிட்ட எல்லைக் குட்பட்டவை. ஆனால் கடவுள் என்று கருதும் போது, அவருடைய அறிவாற்றல்களுக்கு ஓர் அளவு கிடையாது. அவர் நமக்கு ஒத்தாசை செய்தாரானால், அதனைத் தடுக்கவோ குறை கூறவோ, பிறரால் இயலாது. கடவுள் ஒருவர் தான் உலகத்திலுள்ள எல்லா உயிர்களுக்கும் தாயும் தந்தையுமாக விளங்குகின்றார். அவருடைய அன்பையும் அருளையும் தொடர்பையும் பெற்றுவிட்டோமானால், நாம் எல்லா வகையான துன்பங்களிலிருந்தும் விடுபடலாம். ''இன்பமே எந்நாளும் துன்பமில்லை'' என்று திருநாவுக்கரசர் பெருமான் பாடுதலைப் போன்று, நாமும் எல்லையில்லாத இன்பமும் வாழ்வும் வளமும் பெறலாம். கடவுளின் அன்பையும் அருளையும் நாம் காசு கொடுத்தோ, பிறவழிகளிலோ பெற முடியாது. பக்தி ஒன்றினால்தான் நாம் கடவுளின் அருளையும் துணையையும் பெற முடியும்.

மனத்தளர்ச்சி ஏற்படுதற்கு முக்கிய காரணம், நாம் நம்மை அறிந்தோ அறியாமலோ சில பல தவறுகளைச் செய்து விடுவதும், அத்தவறுகளைக் குறித்துப் பின்னர் இவ்வாறு செய்துவிட்டோமே என்று நினைத்துக் கழிவிரக்கம் கொண்டு வருந்துவதும் ஆகும். தெய்வப் புலவர் திருவள்ளுவரும்,

''எற்றென்று இரங்குவ செய்யற்க; செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று''

''தன்னெஞ்சறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்''

என்னும் குறள்களால் இதனைக் குறிப்பிட்டிருத்தல் காணலாம். இத்தகைய தவறுகள் செய்தல் குறித்து, உதாரணமாக ஒன்றைச் சொல்லலாம். ஒரு தகப்பனார் தன் பிள்ளையைக் கூப்பிட்டு ''நான் ஐந்தாறு வருடங்களுக்கு முன்னர் என் நண்பரிடம் கடன் வாங்கினேன். அவர் நல்லகுணம் உடையவர். என்னிடம் பத்திரம் எதுவும் எழுதி வாங்கவில்லை. கைம்மாற்றாகக் கொடுத்தார். அப்போது என் நிலை வறுமையாக இருந்ததனால், யான் அக்கடனைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. அவர் இறந்துவிட்டார். இப்போது நானும் இறக்கும் தறுவாயில் இருக்கின்றேன். அந்தக் கடன் தொகையை எப்படியாவது நீ அவரது குடும்பத்தினரிடம் கொடுத்து விடு'' என்று சொல்லி இறந்து விடுகிறார். ஆனால் அவரது மகனோ அதைப் பொருட்படுத்தாமல் இருந்து விடுகின்றான். சிறிதுகாலம் கழிந்துவிடுகின்றது. பிறகு அவனது குடும்பத்தில் ஏதோ ஒருகஷ்டம் ஏற்படுகிறது. அப்போது அவன் தன் தகப்பனார் இறக்கும்போது சொல்லிவிட்டுச் சென்ற செயலைச் செய்யாமற் போனதினால்தான், தனக்கு அந்தக் கஷ்டம் நேர்ந்திருக்கிறது என்று நினைக்கின்றான். இதைப் பிறரிடம் வெளியே சொல்ல வெட்கப்படுகின்றான். சொல்லவும் தைரியம் இல்லை. தகப்பனார் சொல்லிச் சென்றதை நிறைவேற்றவேண்டுமானால், பணம் செலவாகி விடுமே என்ற ஒரு நினைப்பும் இருக்கின்றது. ஆயினும் அவனுடைய மனச்சான்று அவனை உறுத்துகிறது. பணம் கொடுக்கவும் மனம் வரவில்லை; கொடுக்காமல் இருந்தாலும் மனச்சான்று குத்துகின்றது. இதனால் அவன் மனம் ஊசலாடிச் சஞ்சலப்படுகின்றது. இந்த மனச்சஞ்சலத்தால் அவனுக்குத் தூக்கம் வருவதில்லை. உடல்நலம் குறைகின்றது. உற்சாகம் இழக்கின்றான். அதனால் மனத்தளர்ச்சியுற்று, நோய் எதுவும் இல்லாமலே உடல் நலிவும் சோர்வும் அடைகின்றான். இத்தகைய பற்பல தவறுகள் செய்வதினாலும், பல்வேறு வகையான உணர்ச்சித் தடுமாற்றங்கள் கொள்வதனாலும், மனிதன் பலவகைகளில் துன்புற்று வருந்துகின்றான்.

இத்தகைய மனத்தளர்ச்சியைப் போக்குவதற்கு, இப்போதெல்லாம் பலவகை மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த மருந்துகளைக் கொண்டு மனத்தளர்ச்சிகளிலிருந்து ஓரளவு விடுபடலாம். ஆனால், அவைகளெல்லாம் இருட்டில் நடப்பவனுக்குக் கைவிளக்குப் போன்றும், காட்டில் நடப்பவனுக்கு ஒரு பாதரட்சை போன்றும் பயன்படுமே தவிர, அவைகளால் ஒருபோதும் முழுநலனைப் பெறமுடியாது. ஏனென்றால் எந்தக் காரணத்தால் மனத்தளர்ச்சி ஏற்பட்டது என்று அறிந்து, அதை நிவர்த்திப்பது தான் சரியான முறை. இதற்கு மனநோய் மருத்துவமனையில், நோயாளிக்கு மயக்க மருந்துகொடுத்து ஓரளவு சுயஅறிவு இல்லாமல் செய்துவிட்டு, நோயாளியுடன் பேசுகின்றனர். அப்படிப் பேசும்போது, புத்திசுவாதீனத்தில் இருக்கும்போது எதையெல்லாம் மறைப்பார்களோ, அதையெல்லாம் நோயாளிகள் சொல்லிவிடுவார்கள். மேலே சொன்ன உதாரணப்படி, அந்நோயாளி ''என் தகப்பனார் தான் வாங்கிய கடனைக் கொடுக்கும்படி சொன்னார், நான் அதனைக் கொடுக்கவில்லை'' என்று சொல்லுவான். அதனைக் கேட்ட மருத்துவர், நோயாளிக்குச் சுயஅறிவு வந்தவுடன், ''நீ உன் தகப்பனார் சொன்னபடி செய்யாததனால்தான் இந்த நோயை அடைந்தாய்; அவர் சொன்னபடி உடனே செய். உன் மனக்கவலை நீங்கி நீ நலம் பெறுவாய்'' என்று சொல்லி அனுப்புவார். பிறகு அவன்தன் தகப்பனார் சொல்லியபடி செய்து மனச்சான்றின் உறுத்தல் நோய்கள் தீர்ந்து, நலம்பெறுவான். ஓர் உதாரணத்திற்காக, இது சொல்லப் பெற்றது. இதுபோன்றவைகள் எத்தனையோ பற்பல உண்டு.

உடலில் ஏற்படும் நோய்களுக்கு எப்படி அளவில்லையோ அதுபோல, மனித மனத்தில் ஏற்படும் பலவகை நோய்களுக்கும் குறைகளுக்கும்கூட, ஓர் அளவு இல்லை. மனத்தளர்ச்சி நோய்களை நீக்கிக் கொள்ளுவதற்கு மருந்து

களைவிட, தெய்வ நம்பிக்கையும் தியானமும் தெய்வ வழிபாடும், மிகப் பெரிய அளவில் துணைபுரிகின்றன. இவ்வுலகம் கனவு நிலையில் யில் கருதிக் காண்கின்றவற்றையெல்லாம்விட, எத்தனையோ பல எண்ணில்லாத செயல்கள், பிரார்த்தனையின் மூலம் பெரிதும் நிறைவேற்றப்படுகின்றன'' (''More things are wrought by prayer than this world dreams of" —**Alfred Tennyson.**). தெய்வ நம்பிக்கையினாலும், தியானத்தினாலும், சிந்தனையின் ஒருமைப்பாட்டாலும், உருக்கம்மிக்க உண்மை வழிபாட்டாலும், நாம் பற்பல நலங்களை நிச்சயமாக அடையலாம். இவ்வரும்பெறல் உண்மையினையே,

''எதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள்சோதி!
மாதுக்கம் நீங்கலுறுவீர்! மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே''

என்று திருஞானசம்பந்தரும்,

''பெருகலாம் தவம், பேதைமை தீரலாம்
திருகல் ஆகிய சிந்தை திருத்தலாம்!
பருகலாம் பரமாய தோர் ஆனந்தம்
மருகலான் அடி வாழ்த்தி வணங்கவே''

என்று திருநாவுக்கரசரும், செவ்விதின் வற்புறுத்தி அருளிச் செய்திருத்தல் காணலாம். ''மாதுக்கம் நீங்கல் உறுவீர்! மனம் பற்றி வாழ்மின்!'' என்று திருஞானசம்பந்தரும், ''திருகல் ஆகிய சிந்தை திருத்தலாம், பருகலாம் பரமாயதோர் ஆனந்தம்'' என்று திருநாவுக்கரசரும், பாடியிருக்கும் பகுதிகள், நாம் பெரிதும் ஆழ்ந்து சிந்தித்து அறிதற்கு உரியன.

உடலில் நோய் வராமல் இருப்பதற்கு நாம் பலவகையான சுகாதார முறைகளைக் கடைப்பிடிப்பதுபோல, நம்முடைய மனத்திற்கு நோய்களும் கவலைகளும் பிணிகளும் நேராமல் இருக்கவும், நாம் பலவகை ஒழுக்க நெறிமுறைகளைக் கடைப்பிடித்துநடக்கவேண்டுவது, மிக மிக இன்றியமையாததாகும். அவ்வொழுக்க முறைகளுள் மிக்க பயனளிப்பதும், தலைசிறந்ததும், தெய்வசிந்தனையும், தியானமும், தெய்வ வழிபாடுமே ஆகும் எனலாம். எல்லாச் சமயங்களும், எல்லாச் சாத்திரங்களும் இவ்வுண்மையை ஒருமுகமாக வற்புறுத்தி உணர்த்துகின்றன; எல்லா அருளாளர்களும் ஞானிகளும் இதனைப் பெரிதும் அறிவுறுத்தி உபதேசித்திருக்கின்றனர்.

''தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்!
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்!
தெய்வம் தெளிமின்! தெளிந்தோர்ப் பேணுமின்!''

—இளங்கோவடிகள்

# ''அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருகன்''

"அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருகன்'' என்னும் தொடர், திருமுருகாற்றுப்படையில் வரும் ஒரு சிறந்த, ஒப்புயர்வற்ற இனிய நல்ல தொடராகும். 'முருகன்' என்னும் சொல், பெருமை வாய்ந்த பெயர் என்றும், அது வேறு பிற எவர்க்கும் உரியதல்லாத தனிச்சிறப்பு வாய்ந்த திருப்பெயர் என்றும், இவ்வினிய தொடரால் செவ்விதின் உணர்த்தப் பெறுகின்றது, 'பெரும் பெயர்' என்னும் தொடரின் சிறப்பினை வியந்து, மாதவச் சிவஞான யோகிகள், தமது சிவஞானபோதப் பேருரையில் '' பெரும்பெயர் எனினும், **மகாவாக்கியம்** எனினும் ஒக்கும்'' என்று விளக்கியிருத்தல், இத்தொடரின் அருமை பெருமைகளை அறிவிக்கும். முருகன் என்னும் சொல், **இளமை அழகு மணம் கடவுட்டன்மை** என்னும் பலவகைப் பொருள்களை உணர்த்தும். அவைகளையெல்லாம் ஒருங்கே தொகுத்து உணர்த்திச்சுட்டி விளக்கும் முறையில், ஆசிரியர் நக்கீரனார், தமது முருகாற்றுப்படை நூலில்,

''மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி''

என்று அழகுற அறிவுறுத்தியுள்ளார். 'முருகன்' என்னும் சொல் குறிக்கும் பொருள்களையெல்லாம், இங்ஙனம் ஒருங்கே தொகுத்து உணர்த்தியிருப்பது, நக்கீரரின் நற்பெரும் புலமைக்கு ஒரு சிறந்த சான்றாகும். இம்முறையினைப் பின்பற்றி, அருட்டிரு பாம்பன் அடிகளார், தம்முடைய பாடல் ஒன்றில் ''முருகு'' என்னும் சொல்லை, அதன் பல்வேறு பொருள்களும் அமைந்து விளங்கும்படி, சொற்பொருட் பின்வருநிலை என்னும் அணிநலம் திகழப் பின்வருமாறு பாடியருள்கின்றார்:

''முருகு லாம்நறிய முருகு
முருகு கோடியென முருகு
முருகு மூசுலக முருகு
முருகு றாதுமன முருகு''

—திரு அலங்கல் திரட்டு

என்பது, அருட்டிரு பாம்பன் அடிகளார் அருளிச் செய்துள்ள ஓர் அழகிய திருப்பாடல். அந்தாதி முறையில், மடக்கு என்னும் அணிநலம் அமைய, ஒற்றெழுத்து ஒன்றுகூட விரவாமற் பாடப்பெறும் செய்யுளுக்குரிய ஓர் எடுத்துக்காட்டாக, இதனை அடிகளார் அருளிச் செய்துள்ளார். இச்செய்யுளின் பொருள் இங்கு நாம் சிந்தித்துணர்ந்து மகிழ்தற்குரியது.

முருகு உலாம்-திருவிழாவில் உலாவும்
நறிய-நல்ல இளமையுடைய
முருகு-முருகன் எனும் பெயரையுடையவனே;
கோடின்ன-என்னைக் கொள்வாயாக என்று,
முருகும் முருகும்-மலர்களின் மணமும் அழகும்
மூசு-மொய்க்கின்ற
உலகம்-உலகத்திலே
உருகும்-துன்பத்தில் உருகுகின்ற
உருகு-பிறப்பை,
உறாது-இன்னும் பொருந்தாமல்,
மனம்-மனமே;
உருகு-உருகுவாயாக.

என்பது மேற்குறித்த பாடலின் பொருள். இதன்கண் 'முருகன்' என்னும் சொல்லின் பல்வேறு பொருள்களும், அமைந்து வந்திருத்தல் அறிஞர்கள் போற்றுதற்குரியது.

—ஆசிரியர்

# வடலூர் இராமலிங்க வள்ளலார்

திரு. கவிஞர் மனசை ப. கீரன், B.A., B.T., சென்னை.

உலகில் தீமை பெருகி நன்மை நலியும் போதெல்லாம் இறைவன் திருவவதாரம் செய்கின்றான்; அல்லது தனது அருள்பெற்ற அடியவர்களை அனுப்பி வைக்கின்றான் எனப் பெரியோர்கள் கூறுவர். அம்முறையில் அவ்வப்போது நம் தமிழகத்தில் அருட் சான்றோர்கள் பலர் தோன்றி வந்திருக்கின்றனர். அவர்களுள் ஒருவராக அண்மைக் காலத்தில் தோன்றியருளியவர், திருவருட்பிரகாச வள்ளலார் என்னும் நமது இராமலிங்க அடிகளாராவார்.

இராலிங்க அடிகள், ''வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன்'' என்று, தம்மைக் குறிப்பிட்டுக் கொண்டு இருத்தல் காணலாம். உலகத்தைத் திருத்தி உய்விப்பதற்காக, அந்தந்த யுகம் அல்லது காலத்தில் இறைவன் தன் அருளுலகினின்று அனுப்பி வைக்கும் சான்றோர்களை ''யுக புருஷர்'' என்பர். அம்முறையில் ஆராய்ந்தால், இந்த யுகம் அல்லது காலச் சூழ்நிலைக்கு ஏற்ப, உலகத்தைத் திருத்தி உய்யும்நெறி காட்டியருள்வதற்காக, இறைவனால் அனுப்பப்பெற்ற அருட்பெருஞ் சான்றோர் இராமலிங்க அடிகளேயாவர் என நாம்துணிந்து கூறலாம். இவ்வுண்மையினை இராமலிங்க அடிகளாரே, தமது திருவருட்பாப் பாடல் ஒன்றில் இனிது எடுத்து மொழிந்திருத்தல் காணலாம்.

> ''அகத்தே கறுத்துப் புறத்துவெளுத்து
> இருந்த உலகர் அனைவரையுஞ்
> சகத்தே திருத்திச் சன்மார்க்க
> சங்கத் தடைவித் திட அவரும்
> இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந்
> திடுதற் கென்றே யெனைஇந்த
> உகத்தே இறைவன் வருவிக்க
> உற்றேன் அருளைப் பெற்றேனே''

எனவரும் திருவருட்பாவில், இக்கருத்தை இராமலிங்க அடிகளார் மிகவும் தெளிவுற எடுத்துக் கூறியிருக்கக் காண்கின்றோம். 'உலகர் அனைவரையும் சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத்து அடைவித்திட, என்னை இந்த யுகத்தே இறைவன் வருவிக்க உற்றேன்'' என்று மிகத் தெளிவாக அடிகளார் அறிவுறுத்தியிருத்தல், நாம் பொன்னினும் மணியினும் போற்றத்தக்கதாகும்.

இராமலிங்க அடிகளார் தோன்றிய காலத்தில், சாதி மதம் சமயம் சாத்திரம் தோத்திரம் முதலிய பல துறைகளில், மக்களிடையே போரும் பூசலும் பிணக்கமும் மிகுந்திருந்தன. அன்பினால் ஒன்றுபட்டு இன்புற்று நலனடைதற்கு உரிய மக்கள், இங்ஙனம் தம்முள் இகலிப் பகைத்துக் கலாய்த்து இடர்ப்படுதல் கண்டு, அடிகளார் அளவிலாத் துயரம் கொண்டார். மக்களையெல்லாம் எவ்வகையாலேனும் ஒற்றுமைப்படுத்தி உய்விக்கத் திருவுளம் கொண்டார். தவறான தீய துன்மார்க்க நெறிகளில் சென்று கெடுபவர்களைத் தூய நல்ல சன்மார்க்கச் செந்நெறியில் செலுத்தித் திருத்தி இறையருளைப் பெறுவிக்கப் பெரிதும் முயன்றார்.

> சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே
> சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்
> சண்டையிலே
> ஆதியிலே யபிமானித் தலைகின்ற வுலகீர்
> அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே
> நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே நிறுத்த
> நிருத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தரவர்
> தாமே
> வீதியிலே யருட்சோதி விளையாடல் புரிய
> மேவுகின்ற தருணமிது கூவுகின்றேன் உமையே

என்னும் திருவருட்பாப் பாடல் அடிகளாரின் திருவுள்ளத்து உணர்ச்சிகளை, எவ்வளவு தெளிவாகவும் ஆற்றலோடும் வெளியிட்டிருக்கின்றது.

உலகத்தில் தீய துன்மார்க்கங்கள் கெட்டு, தூய சன்மார்க்க ஒழுக்கம் ஓங்கி வளர்தல் வேண்டும் என்று, அடிகளார் பெரிதும் பாடுபட்டருளினார். மக்களின் மனத்தே நன்கு இனிது பதியும்வண்ணம் பற்பல அருளுரைகளையும் அறிவுரைகளையும் வழங்கினார். அவர்தம் பாடல்கள் ஒவ்வொன்றும் மக்களின் குற்றங் குறைகளை எடுத்துக் காட்டி, அவர்களைப் புன் நெறிகளில் போகவொட்டாமல் தடுத்து, நன்னெறிக்கே உய்க்கும் நலம் நிரம்பித் திகழ்கின்றது.

> கண்டதெலாம் அநித்தியமே ;
> கேட்டதெலாம் பழுதே;
> கற்றதெலாம் பொய்யே; நீர்
> களித்ததெலாம் வீணே

உண்டதெலாம் மலமே;உட்
கொண்டதெலாம் குறையே
உலகியலீர் இதுவரையும்
உண்மை அறிந்திலிரே!

விண்டதனால் என்இனிநீர்
சமரச சன்மார்க்க
மெய்ந்நெறியைக் கடைப்பிடித்து
மெய்ப் பொருள்நன் குணர்ந்தே
எண்டகு சிற்றம்பலத்தே
எந்தை அருளடைமின்
இறவாத வரம்பெறலாம்
இன்பமுறலாமே

எனவரும் திருவருட்பாப் பாடல், எத்தகைய கருங்கல் மனத்தையும் கரைத்து உருக்கி, சமரச சன்மார்க்க நெறியில் சேர அழைத்தலைக் காணலாம்.

மக்களிடையில் எத்தகைய பேதமும் இருத்தல் கூடாது; அவர்கள் அனைவரும் பேதமின்றி அன்பினால் ஒன்றுபட்டு இன்புறுதல் வேண்டும். எவ்வுயிர்க்கும் தீங்கு நேர்தல் கூடாது. எல்லா உயிர்களும் துன்பமின்றி இன்பமுற்று வாழ்தல் வேண்டும். எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணி, மக்கள் சீவகாருண்யம் என்னும் செந்தண்மை நெறியைக் கடைப்பிடித்து ஒழுகுதல் வேண்டும். கொலையும் புலையுமாகிய குற்றங்களைச் செய்யாமல், மக்கள் அனைவரும் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை உணர்வு உடையவர்களாய், சீவகாருண்யம் என்னும் உயிர் இரக்கம் மேலோங்க நல்வாழ்வு நடத்துதல் வேண்டும். உலகியற் களியாட்டங்களில் மயங்கி மாய்ந்து போகாமல், இறையருள் உணர்வோடு மக்களெல்லாரும் ஒத்த உரிமையுடையவர்களாய் உவந்து வாழ்தல் வேண்டும் என்று, இராமலிங்க அடிகளார் தமது பாடல்களிலெல்லாம் இடைவிடாது அறிவுறுத்தியுள்ளார். இதன் பொருட்டே அவர், சமரச சன்மார்க்கமென்னும் சான்றாமை நன்னெறி இயக்கத்தைத் தகவுறத் தோற்றுவித் தருளினார்.

''எத்துணையும் பேதமுறாது, எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி, உள்ளே
ஒத்துரிமை யுடையவராய் உவக்கின்றார்
யாவர் அவர்உளம் தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடமெ்ன நான் தேர்ந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கு ஏவல்புரிந்திட என்
சிந்தை மிக விழைந்ததாலோ''

தங்கமே யனையார்கூடிய ஞான
சமரச சுத்தசன்மார்க்கச்
சங்கமே கண்டு களிக்கவும், சங்கம்
சார்திருக் கோயில் கண்டிடவும்,
துங்கமே பெறும் சற்சங்கம் நீடுழி
துலங்கவும், சங்கத்தில் அடியேன்
அங்கமே குளிர நின்றனைப் பாடி
ஆடவும், இச்சை காணெந்தாய்!

இராமலிங்க அடிகளார் நம் தமிழகத்தில் தோன்றியருளிய ஓர் இணையற்ற பெரும் சான்றோராவர். தமிழ் மொழிக்கே உரிய இனிமை எளிமை தெளிவு தெய்விகம் என்னும் சிறப்பியல்புகள், அவர் அருளிய திருவருட்பா என்னும் செந்தமிழ்க் கலைப் பெரும் சுருவூலத்தில் ஒருங்கு கலந்து நிரம்பித் திகழ்கின்றன. இறையருட்புகழ்த் துதிநூல்களில், உலக இலக்கியங்களில் தலைசிறந்த ஒன்றாகத் திருவருட்பா திகழ்கின்றது என நாம் துணிந்து கூறலாம். இஃது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

—oOo—

## துன்மதித் தாயே! நிம்மதி அளிக்கவேண்டும்!!

வெண்மதி போலு தித்து விரும்பிட வரும்புத் தாண்டே!
நிம்மதி எங்களுக்கு நீயேனும் அளிக்க வேண்டும்!
'துன்மதி' என்னும் பேயைத் தூரத்தே ஓட்டு தற்கோ,
துன்மதி ஆனாய்? நன்று! தொடரட்டும் உன்றன் தொண்டு! (1)

வலியிலா தாரைத் தாழ்த்தி வாழ்விலே உயர்ந்த 'சாதிப்
புலி'யெலாம் பகைத்தெ ழுந்து போராடக் காணு கின்றோம்!
எலியெனப் பொருளை யெல்லாம் இருட்டிலே பதுக்கி விட்டு
விலையினால் அடிக்கும் வேங்கை வேட்டையும் பெருக லாச்சு! (2)

உருவத்தில் மனித ராகி ஒளிந்துள்ள நச்சுப் பாம்பு
வரதட்ச மணைவி டத்தை வாழ்க்கையில் கக்கிக் கொல்லும்!
தருமத்தை முட்டித் தள்ளித் தளிரன்னார் கற்பை மேயும்!
மிருகத்தின் கொடுமை நாளும் மிகுதியாய்ப் பெருகு திங்கே! (3)

'துன்மதி' யால்மு ளைத்துத் தோப்பான முள்மரங்கள்,
நன்மதி யால்அ றுத்தும் நாட்டினிற் குறைய வில்லை!
துன்மதித் தாயே! உன்தாள் தொழுகின்றோம்; தொல்லை நீக்கி
நிம்மதி அளிக்க வேண்டும்! நின்பணி தொடர வேண்டும்! (4)

புலவர் திரு. மா. வேங்கடேசன், காஞ்சிபுரம்.

# திருவள்ளுவர்

# சிறந்த பொருளியல் சிந்தனையாளர்

*"பொருளியல்நூற் பேரறிஞர்"*
டாக்டர் திரு. பா. நடராஜன், M.A., D.Litt.,

ஒரு பொருளியல் சிந்தனையாளர் என்ற அளவில், வள்ளுவரை எவ்வாறு மதிப்பிடுவது? திருவள்ளுவர் கருத்துக்கள் பலவற்றைப் புத்தருடனும் கிறித்துவுடனும் பலர் ஒப்பிட்டுப் பேசுகின்றனர். அருள் வாழ்வையும், அறவாழ்வையும் போதிக்கும் அளவில் அவரை அத்தகையோருடன் ஒப்பிடல் பொருந்தும். புத்தரும், கிறித்துவும், வானுலகம் பற்றியே பெரிதும் பேசுகின்றனர். 'நிருவாணம், பரலோகம், இவற்றை அடைவதற்கு ஒருவன் செய்ய வேண்டும் கடமைகளையே' அவர்கள் பெரிதும் கூறினர். ஆன்மாவின் தூய்மையையும், உயர்வையும் போதிக்கவே அவர்கள் வாழ்ந்தனர். ஆன்மாவை உய்வித்தலே அவர்கள் .நோக்கமாக இருந்தது. மக்கள் சமுதாய அமைப்புக்கு; பொருளியல் வாழ்வுக்கு, அவர்கள் பொன்மொழிகளில் கருத்துக்கள் பொதிந்திருந்தால், அவை வாய்ப்பால் எதிர்ப்பட்டவையே. பொருளியல் துறையில் கிறித்து எப்பக்கமும் சாராமல் நடுநிலைமை வகித்தார். "சீசருக்கு உரியதைச் சீசரிடமும், கடவுளுக்கு உரியதைக் கடவுளிடமும் தருக" என்று கூறுகின்றார். வள்ளுவரோ வையத்துள் வாழ்வாங்கு வாழ நெறி வகுக்க வந்தவர். எனவே வள்ளுவரின் பொருளியல் மதிநுட்பத்தை மதிப்பிட வேண்டுமாயின், உலகியல் வாழ்வு பற்றிய சிந்தனையாளர்களொடு ஒப்பிடுவது தான் பொருத்தமாகும்.

அவ்வாறு ஒப்பிடுங்கால், கிரேக்கம், வடமொழி, இன்றைய பொருளியல், ஆகியமூன்று துறைகளையும் துருவி, ஆங்காங்கு, தேர்ந்த ஆசிரியர்களைச் சான்றுக்கு அழைக்கவேண்டும். கிரேக்க அறிஞர்களான பிளேட்டோவையும், அரிஸ்டாட்டிலையும் தேர்ந்து கொள்ளலாம். இவ்விருவரது நூல்களும் சிந்தனைகளும், ஏறக்குறைய இருபது நூற்றாண்டுகளாக மேலைநாட்டுப் பொருளியல் அறிவுக்கு அடிப்படையாக இருந்துள்ளன. தொழில் புரட்சி தோன்றிப் பொருளியல் கருத்துக்கள் மாறுபாடு அடைந்த பத்தொன்பதாம் நூற்றாண்டுக் காலம்வரை, இவர்களது கருத்தே மேலைநாட்டுப் பொருளியலுக்கு அடிப்படையாக இருந்தது. அரிஸ்டாட்டில், பிளேட்டோவின் மாணாக்கராக இருந்தாலும், பிளேட்டோவின் 'ரிபப்ளிக்' என்ற நூலுக்கும், அரிஸ்டாட்டிலின் "பாலிடிக்" "எதிக்ஸ்" என்ற நூல்களுக்கும் மிக்க மாறுபாடுகள் உள்ளன. ஆகவே அவர்களைத் தனித்தனி ஒப்பிட்டு நோக்கவேண்டும். வடமொழியில், கௌடில்யர் அல்லது சாணக்கியரின் அர்த்தசாத்திரம் முன்வந்து நிற்கின்றது. தற்காலப் பொருளியல் ஆசிரியர்களுள் 'வெல்த் ஆப் நேஷன்ஸ்' என்னும் நூலை இயற்றிய ஆதம்ஸ்மித்தே கண்முன் தோன்றுகின்றார்.

ஒப்புநோக்கி மதிப்பிடுவதில் ஒரு கருத்தைத் தெளிவாக்கிக் கொள்ள வேண்டும். பிற கலைத்துறைகளிற் போன்றே பொருளியலிலும் ஒரு அடிப்படைக் கருத்தை அதன்மேல் எழுப்பப்பட்ட சான்றுகளைக் கொண்டே ஏற்க முடியும். மேற்சான்றுகள் தவறாயின் அடிப்படை உண்மைகளும் பயனற்றவைகளே. ஆயினும் மேலெழுந்துள்ள மண்டபங்களும், கோபுரங்களும் வேறு வேறாயின் அடித்தள ஒற்றுமையை நிறுவுவதெவ்வாறு? எனவே, வள்ளுவரின் கருத்துக்களிலிருந்து இன்றைய பொருளியல் கோட்பாடுகள் அனைத்தும் மலர்ந்துள்ளன என்ற முறையில் எதனையும் விளக்க முற்படுவதற்கு வழக்கில்லை. ஒவ்வொரு நூலும், ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு சூழ்நிலையில் எழுதப்பட்டது. அந்தக் காலத்தையும் சூழ்நிலையையும் மறந்து, அந்நூல்களை ஒப்புநோக்குவதிலும் பொருத்தமில்லை. ஆகவே வள்ளுவர் பற்றிய இந்த மதிப்பீடு, இவ்வரம்புகளுக்குள் அமைந்தே செய்யப்பட வேண்டும்.

முதலில் பிளேட்டோவை நோக்குவோம். அவர் தனது 'ரிபப்ளிக்' என்னும் நூலில் இலட்சிய அரசு ஒன்றைப் படைக்கின்றார். அரிய ஒரு சில கருத்துக்களைக் கொண்ட கற்பனைக் கனவு என்றுதான் பலர் அதனைக் கருதுகின்றனர். ஜெர்மானியர்கள் அந்நூலை "அரசியல் நாவல்" என்று கருதினர். அரசு பற்றிய கற்பனை நூல்களில் அதுவே முதல் நூலாகும். ஒப்பற்ற ஒரு நாடு அல்லது அரசு பற்றிய கற்பனைக் காவியம் என்றல்லாது, அனுபவத்தின் அடிப்படையிலோ, ஆராய்ச்சியின் பயனாகவோ அந்நூல் உருப்பெறவில்லை. அவர் கற்பனையில் கண்ட நாடு அளவிலும் மிகச் சிறியது.

நிலையான மக்கள் தொகையையும், குறிப்பான செல்வ அளவையும் கொண்டது. உறுதியாக வகுக்கப்பட்ட சாதி முறையும் பழக்க வழக்கங் களும் அந்நாட்டில் மாறாது நெறிப்படுத்தப் பட்டிருந்தன. அதன் செல்வம் வரையறைக் குட்படுத்தப்பட்டது. பேச்சு உரிமையும் கட்டுப் படுத்தப்பட்டது. சற்றும் நெகிழ்ச்சியில்லாத அரசு முறை. ஹிட்லர், முசோலினி போன் றோர் கண்ட பாசிச சர்வாதிகார அரசு போன் றது என்று சிலர் அதனை ஒப்புக்கூறுகின்றனர். வள்ளுவர் கண்ட அரசும், பிளேட்டோ வகுத்த அரசும் மிக மிக வேறுபாடுடையவை; வெண் ணெயும் சுண்ணாம்பும்போல எனலாம்.

அரிஸ்டாட்டில் தனது ஆசிரியனின் கொள் கைகளை வெட்டியும், ஒட்டியும், எழுதிச் சென் றவரே. ஆகவே அரிஸ்டாட்டிலோடும் வள்ளு வரை முற்ற இணைத்துப் பார்ப்பதற்கில்லை. அரிஸ்டாட்டிலின் ''அரசியலில்'' அடிமைகள் இருக்க வேண்டும்; மக்களிடையே பெரும் ஏற்றத் தாழ்விருப்பது இயற்கை விதி. பிறப்பி லேயே பேதம் பிறக்கின்றது. குடியாட்சி கிரேக்கர்களுக்கு மட்டுமே; ஏனையோர் உரிமை யற்றவரே. ''பிறப்பொக்கும் எல்லாவுயிர்க் கும்'' என்று முழங்கிய தமிழ் அறிஞனோடு இந்த கிரேக்க ஆசிரியரை எவ்வாறு பொருத்து வது? திருவள்ளுவர் அனைத்து மக்களுக்காகவும் திருக்குறளை ஆக்கி வைத்தார். அரிஸ்டாட் டில் உயர்குலத்தாருக்கு மட்டுமே தமது நூலைப் படைத்தார். அரிஸ்டாட்டில் உழைப்பையும், தொழிலையும் இழிவாகக் கருதினார். வள்ளு வர் அவையே நிலையான செல்வம் ஒருவருக்கு என்று கொண்டார். அரிஸ்டாட்டில் அறத்தை யும் பொருளையும் பிரித்துத் தனித்தனி நூலெழுதினார். திருவள்ளுவர் அறத்தையும் பொருளையும் இணைத்து ஒரு அற்புத நூல் செய்தார்.

சிலர் வள்ளுவரின் பொருளியல் கருத்துக் களைச் சாணக்கியரின் வடமொழி அர்த்தசாத் திரத்தோடு ஒப்பிட்டுக் காண்கின்றனர். வேறு சிலர் அர்த்த சாத்திரத்தின் கருத்துக்களே திருக்குறளில் கூறப்பட்டுள்ளன என நிறுவ முயல்கின்றனர். மற்றும் சிலர் 'பேராசிரியர் இராமச்சந்திர தீட்சதர் போன்றோர்' சாணக் கியர் மோரிய அரச அவையை அணி செய்த தென்னிந்திய அமைச்சரென்றும், வள்ளுவரின் பொருளியல் கருத்தைத் தாம் கற்று, தமது அர்த்த சாத்திரத்தில் புகுத்தினாரென்றும் கூறு கின்றனர். திருக்குறளும், அர்த்தசாத்திரமும் ஒன்றையொன்று தழுவி எழுதப்பட்டதென்ப தற்கு எத்தகைய அகச்சான்றோ, புறச் சான்றோ இல்லையென்பது என் துணிபு. நான் கூறிய காரணங்களில் சிலவற்றை இங்குக் கூறுதல் பொருந்தும்.

முதலில் கி. மு. 4-ஆம் நூற்றாண்டில் சந் திரகுப்த மோரியனின் அவையில் அமைச்ச ராகச் சாணக்கியர் இருந்தார் என்பதே ஐயத் துக்கு இடமானது. பாரதீய வித்தியாபவன் வெளியிட்ட ''பேரரசின் ஒற்றுமைக்காலம்'' (Age of Imperial Unity) என்ற வரலாற்று நூலில் இக்கருத்துக்கு எதிராக ஐந்து கார ணங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து சாணக்கியர் பிற்பட்ட காலத்தைச் சார்ந்தவ ரென்றே கருதக்கிடக்கின்றது. பேராசிரியர் பாரிடேல் கீத்து, கி. மு. நான்காம் நூற்றாண்டு அன்று, கி.பி. நான்காம் நூற்றாண்டாகும் சாணக்கியர் காலம் என வாதிக்கின்றார். சாணக்கியர் காலம் பற்றிய கருத்துச் சர்ச்சையினை அந்நூலில் விரியக் காணலாம்.

அகச்சான்றுகள், புறச்சான்றுகளிலும் வலி வாயிருக்கின்றன. வள்ளுவரின் பொருளியல் கோட்பாடுகளுக்கும், சாணக்கியரின் பொரு ளியல் கோட்பாடுகளுக்கும் அடிப்படை ஒற் றுமை யாதுமில்லை. திருக்குறளில், உழவுக்கும் உழவருக்கும் முதன்மை தரப்பட்டுள்ளது. அர்த்தசாத்திரத்தில் அம்முதன்மை தரப்பட வில்லை. நிலத்திலிருந்து இயன்றவரை பெரும் வருவாய் பெற வேண்டுமென்றும், மக்களை அச்சுறுத்தியோ, ஒறுத்தோ அதனைப் பெற வேண்டுமென்றும், சாணக்கியர் போதித்துள் ளார். மக்களிடையே நிலவும் சாதி வேற்று மையை நிலையாகக்கொண்டே அர்த்தசாத்தி ரம் எழுதப்பட்டுள்ளது. திருக்குறளோ பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற தத்து வத்தை நிலைநாட்டுகின்றது. திருக்குறளில் அறத்தினின்றும் வழுவாத பொருளியல் கூறப்படுகின்றது. அர்த்தசாத்திரத்தில் அவ் வாறில்லை. இரு நூல்களிலும் சுட்டப் பெறும் வரி விதிப்புக் கொள்கைகள் முற்றிலும் வெவ்வேறானவை. மக்கள் மனமுவந்து வரிசெலுத்துதல் வேண்டு மென்பது வள்ளுவர் கருத்து. மக்களின் மூட நம்பிக்கையையும் மதப்பற்றையும், அறியாமை யையும் பயன்படுத்தி, அரசன் தனது களஞ் சியத்தை நிரப்புதற்கு முயலுதல் வேண்டு மென்று அர்த்த சாத்திரம் கூறுகின்றது. அரசனது வருவாயைப் பெருக்க மதுவையும், வரைவின் மகளிரையும் பயன்படுத்தலாம் என் றும் அதன்கண் கூறப்பட்டுள்ளது. மதுவையும் விலைமாதரையும் சமூகத்துக்கு ஒவ்வாதன வாகக் கருதுகின்றது திருக்குறள்.

திருவள்ளுவரின் பொருளியல் கொள்கை களோடு ஓரளவு ஒட்டி நிற்பவர் ஆதம்ஸ்மித்தே ஆகும். அடிப்படைக் கருத்துக்களில் இரு வருக்கும் பற்பல ஒற்றுமை காணப்படுகின்றது. முன்னாளில் இங்கிலாந்திலும், ஐரோப்பாவி லும் பொருளியல் அடிப்படையில் வகுப்பு வேற்றுமை ஓங்கியிருந்தது. பூசல்களும் நிறைந் திருந்தன. ஆதம்ஸ்மித்து பொருளியல் அடி மைத் தளையினின்றும் மக்களை விடுவிக்கப் பாடுபட்டார்; பெருவாரியான மக்களின் உழைப்பையும்தொழிலார்வத்தையும் தூண்டித் தழைக்கச் செய்தார்; அதன் மூலம் தொழிற் புரட்சிக்கு அடிகோலினார். வள்ளுவரும் மக் களிடையே வேற்றுமை எழுதலை நீக்கமுனைந் தார்; பொருளியல் விடுதலையைப் போதனை செய்தார். தொழிலுலகில் சாதியும், வகுப்பும் ஒருவனைக் கட்டுப்படுத்தாது என்றார். விரும் பிய தொழிலை மேற்கொள்ள வழி வகுத்தார். பிறப்பால் மக்கள் அனைவரும் ஒரு நிகரே என்ற கொள்கையை வள்ளுவரைப் போன்றே ஆதம்ஸ்மித்தும் வற்புறுத்தினார். கல்வியா

லும் சூழ்நிலையாலுமே வேற்றுமை மக்களிடையே விளையுமென இருவரும் கூறினர். அரசியலும் பொருளியலும் இசைந்து செல்லவேண்டும். அது மக்களுக்கும் அரசுக்கும் நல்லுறவை நிலைநாட்டும்; அறம் பேணி, நலம் வளர்க்கும் என்பன இருவரின் கருத்தும். இருவருமே அறம் வழுவாப் பொருளியலை விரும்பினர். ஆதம்ஸ்மித்தின் ஆசிரியர் பிரான்சிஸ் அட்சிகின் என்பவர், கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தில் அறத்தத்துவப் பேராசிரியராக இருந்தவர். அவ்வாறே ஆதம்ஸ்மித்தும் அறத்துவப் பேராசிரியராக இருந்தவர். ''தேசங்களின் செல்வம்'' என்ற நூலை எழுதுவதற்குமுன், ஆதம்ஸ்மித்து ''அறச் சிந்தனைக் கோட்பாடுகள்'' என்ற நூலை இயற்றினார். அப்போது பொருளியல் அறிஞராகப் புகழ் பெறவில்லை. ''தேசங்களின் செல்வம்'' என்ற நூலை அறத்தின் அடிப்படையில் வடித்துத் தந்ததும், அவர் ஒரு பொருளியல் அறிஞராகப் போற்றப்பட்டார். 'அறச் சிந்தனைக் கோட்பாடுகள்' என்ற நூலில் அறத்தை அடித்தளமாக அமைத்தார். அதன் மீதே 'தேசங்களின் செல்வம்' என்ற பொருளியல் மாளிகையை எழுப்பினார். வள்ளுவரும் முதலில் அறத்துப்பாலை விளக்கினார். அடுத்தே பொருட்பாலை விரிக்கலானார்.

என்னே ஒற்றுமை! ஆதம்ஸ்மித்தும் வள்ளுவரும் காலத்தால் வேறுபட்டவர்கள். சூழ்நிலையாலும் வேறுபட்டவர்கள். ஆனால் கருத்தால் ஒன்றுபட்டுள்ளனர். தனி மனிதனின் மாண்பு, பொருளியல், தன்னுரிமை, உழைப்பின் பெருமை, சமூகத்தில் உறவுக்கு வேண்டும் அறப்பண்புகள், இவை அனைத்தும் இரு ஆசிரியர்களாலும் ஒரு முகமாகவே கருதப்படுகின்றன. இதில் வள்ளுவருக்குரிய பெருமை என்னவென்றாலோ, ஆதம்ஸ்மித்துக்கு அவர் காலத்தால் இரண்டாயிரமாண்டுகள் முந்தியவர்.

திருவள்ளுவரால் எவ்வாறு இங்ஙனம் கருத்து ஊற்றைக் காண முடிந்தது? வள்ளுவர் அறத்தையும் பொருளையும் ஒன்றாக்கிக் குழைத்து அளித்துள்ளார். என்று முதலிலேயே குறிப்பிடப்பட்டது. அதுவேதான் உண்மையின் ஊற்றை அவர் தொட உதவியது. அவ்வாறு ஊற்றைத் தொட அவருக்கு உதவியன இரண்டு. ஒன்று, சங்ககாலத் தமிழர் வாழ்ந்த பொருளியல் வாழ்க்கை முறை. மற்றொன்று, பவுத்தமும் சமணமும் போதித்த அறநெறி. இவற்றில் முதலில் கூறியது தனது நாட்டில் எழுந்த உள்ளுணர்வு, மற்றையது புறநாட்டிலிருந்து புகுந்த புற உணர்வு. சங்ககாலத்தில் மக்களின் பொருளியல் ஆக்கம் பேணப்பட்டது. அறிஞர் கீன்ஸ் கூறுவதுபோல ஒரு வேக உணர்ச்சியால் உந்தப்பட்டு மக்கள் இன்பவாழ்வு வாழ முயன்றனர். அதனால் காதலும் போரும் மக்களின் அன்றாட நிகழ்ச்சியாக இருந்தன. பொருள் வயிற் பிரிதல், வாழ்க்கை இலக்கணமாயிருந்தது. இவை சங்ககாலத்துத் தமிழகம் தந்தவை. மக்கள் யாவரும் சமம்; மனிதரிடையே ஏற்றத் தாழ்வு யாதுமில்லை; யாரும் எப்பணியையும் மேற்கொண்டு வாழ்வு நடத்தலாம்; ஆனால் எல்லா வினைகளும் அறத்தின்பாற்பட்டதாக இருத்தல் வேண்டும். துறவு உள்ளம் தூய்மையானது. ஒவ்வொரு தனி மனிதனும் அறத்தினைப் பேணிச் சமூகத்துக்குத் தொண்டாற்ற வேண்டும். இவைபோன்ற கருத்துக்கள் சமண சாக்கிய மதக் கோட்பாடுகளாக வடக்கிலிருந்து தெற்கே புகுந்தவை. வள்ளுவரின் குறட்பாக்களில் இவ்விரண்டும்—அறமும் பொருளும்—மணியும் ஒளியும்போல் சுடர்விட்டு வழிகாட்டுகின்றன. இவ்விரு கருத்துக்களும் கலந்து, குழைந்து, ஒரு தனிக்கருத்தாகியது. அத்தனிக் கருத்து முதலில் வந்த இரு கருத்தினின்றும் வேறுபட்டதாய் மூலக் கருத்தெனவே தோன்றி மிளிர்கின்றது. இவ்விருவகைக் கருத்தும் இணைந்தமையாலே ஈரடிப்பாவாகத் திருக்குறள் தோன்றியதோ!

இவ்விருவகைக் கருத்துக்களையும் இணைத்துப் பார்க்கும்போதுதான், வள்ளுவரின் கொள்கையை நன்கு அறிய முடிகின்றது; அவரது அறிவுத்திறனை வியக்க முடிகின்றது. வள்ளுவர் இரு வேறு காலக் கருத்துக்களுக்கு ஓர் இணைப்பு அமைத்துள்ளார். சங்கப் பொற்காலத்தையும், பின்னால் வந்த பல்லவ, சோழப் பேரரசின் ஆட்சிக் காலத்தையும் இணைக்கும் கருத்துப் பாலத்தை அமைத்துள்ளார். உலகியல் இன்ப வாழ்வையே பெரிதெனப் பேணி வந்த சங்க நாள் தமிழர்களுக்கு அருளியல், ஆன்ம இயல் வாழ்க்கை, கவர்ச்சியாக இருந்தது. பொருளியல் துய்ப்பிலே ஊறிய மக்களுக்கு, அருளியல் மாற்று மருந்தாக இனித்தது. ஓரிரு நூற்றாண்டுகளில், மக்கள் வைய வாழ்வை முற்றிலும் மறந்து, இன்பந்துறந்து, வானக வாழ்வைப் பெரிதென மதிக்க முற்பட்டனர். மண்ணியல் வாழ்வை வெறுத்து, விண்ணியல் வாழ்வையே விழைந்த மக்களைத் தடுத்துநிறுத்த எண்ணினார் வள்ளுவர். எனவே உலகியலுக்கும் ஆன்ம இயலுக்கும் நடுவாக அமைந்த வழியில், மக்களைத் திருப்பக் கருதினார். அவ்வாறு அவர் அருளிய செம்மை நெறியில் மக்கள் ஆயிரம் ஆண்டுகளைக் கழித்தனர். அதன் பின்னர் சோழர் ஆட்சி ஓங்கியது. மீண்டும் மக்கள் அவ்வுலக வாழ்வை நாடினர். பொருளியல் வேட்கையைப் புறக்கணித்தனர். மக்கள் முன்னேற்றம் தடைபட்டது. மீண்டும் ஆன்ம இயல் வாழ்வு.

இப்போது ஆயிரம் ஆண்டுகள் கழிந்தன. வள்ளுவரின் பொய்யாமொழி அப்போதும் போற்றப்பட்டது. அவ்வுலக சிந்தனைக்குச் சான்றாகப் பயன்படுத்தப்பட்டது. இவ்வுலக வாழ்க்கை நெறிபற்றி வள்ளுவர் உரைத்த மொழிகள் ஏற்பாரற்றுக்கிடந்தன. இருவேறு நெறிகளையும் இணைத்த திருக்குறள் ஒரு நெறிக்கு மட்டுமே துணையாகக் கருதப்பட்டு வந்தது. இதுபோது மீண்டும் நாம் வள்ளுவரின் பொதுமறையை நாடுகிறோம். அவ்வுலகச் சிந்தனையில் அமிழ்ந்து, உறங்கிக் கிடந்த நமக்கு மீண்டும் இவ்வுலக வாழ்வுக்குப் புத்தொளிதரத் திருக்குறளைத் தேடுகிறோம்.

பேரறிஞரான பெர்ட்ரண்டுரசல், அரிஸ்டாட்டிலின் அறவியல் நூலை ஆராயும்போது மூன்று ஐய வினாக்களை எழுப்புகின்றார். அவை அந்நூலுக்கு மட்டுமின்றி எந்நூலுக்கும் மதிப்பீட்டுக் கோலாவதற்குப் பொருந்தும். (1) மதிப்பீட்டுக்கு எடுத்துக்கொண்ட நூல் தன்னுள்ளே முரண்பாடின்றி இருக்கின்றதா? (2) எடுத்த நூலுள் கூறும் ஆசிரியரின் கருத்து பிற இடத்து அவர் கூறும் கருத்துக்களுக்குப் பொருத்தமாக உள்ளதா? (3) நமது அறவியல் உணர்ச்சிகளில் எழும் சிக்கல்களுக்கு அந்நூல் விடையளிக்கின்றனவா? முதலிரண்டு வினாக்களுக்கும் -'இல்லை'' என்றே விடை கிடைக்குமாயின் அந்நூலாசிரியர் அறிவினால் தவறிழைத்தார் என்று குற்றம் கூறுவதற்கில்லை. ஆனால் மூன்றாம் வினாவிற்கும் -'இல்லை'' என்றே பதில் வருமாயின், அவர் தவறினார் என்று கூற இயலாது. நாம் அவரை ஏற்றுக்கொள்ள முடியாது என்று மட்டுமே கூறவேண்டும்'' என்று அறிஞர் பெர்ட்ரண்டு ரஸ்ஸல் கூறுகின்றார்.

திருவள்ளுவர் தமது அறிவினால் தவறிழைத்தாரா, அவர் கருத்துக்கள் நம்மால் போற்றுதற்குரியனவா என்பதைக் குறள் படிக்கும் மாணவர்களே முடிவு செய்ய வேண்டும்.

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்,
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு ***



காஞ்சிபுரம், அருள்மிகு குமரகோட்டம் முருகன் திருக்கோயிலில், அண்மையில் நூலகத் திறப்பு விழா நிகழ்ந்தபோது, கலந்துகொண்ட பெருமக்கள் :

திரு. யு. சுப்ரமணியன், I.A.S., ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை.

*அருள்மொழியரசு* திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

திரு. V. K. R. K. கோவிந்தராஜ முதலியார், திருக்கோயில் தக்கார்.

திரு. E. S. பாலசுப்பிரமணிய முதலியார், கற்பகம் & கோ உரிமையாளர்.

திரு. T. காசிநாதன், நிர்வாக அதிகாரி,
அருள்மிகு குமரகோட்டம் முருகன் திருக்கோயில், காஞ்சிபுரம்.

ஓம்

# அருள்மிகு அதர்வண பத்ரகாளி பிரதியங்கிரா தேவி துதி

திருமதி சௌந்தரா கைலாசம் அம்மையார் அவர்கள்

அதர்வண பத்ர காளியே வாழ்க!
அருள்விழி பார்த்தெனை ஆதரித் திடுவாய்!
இதமுற நித்தமும் இனிதனைத் தினிமேல்
இடரெதும் வாழ்வினில் இலையெனச் செய்வாய்!
பதமலர் என்தலை படஉனை வணங்கிப்
பகலிலும் இரவிலும் பரவிநிற் கின்றேன்!
சதமென நினைந்திடத் தரணியில் உன்தாள்
தவிரவே றொன்றிலை சத்தியம் தாயே! (1)

சென்னியின் இடப்புறம் திகழ்பிறை மதியாய்!
சீறிடும் பாம்பினை வலப்புறம் உடையாய்!
உன்வலச் செவியினில் ஒளிதரும் குழையாய்!
உயர்வுறு தோடதை இடச்செவி அணிந்தாய்!
புன்மையைப் போக்கிடும் நாலிரு கரத்தாய்!
புவன வசீகரப் பிரதியங் கிரேஹ்ரீம்!
நன்னயக் காம பீஜமாம் இன்ப
நாத மந்திர ''க்லீம்'' அதில் உறைவாய்! (2)

சூலமும் கத்தியும் உடுக்கையும் தலைகீழ்
தொங்கிடும் மனிதனும் வலப்புறம் அமைந்த
நாவெனும் கைகளில் தாங்கிடும் காளீ!
நான்மறை போற்றிடும் நாயகி! நீலி!
மேலெனும் கேடயம் பாசமும் மணியும்
விளங்குக பாலமும் இடக்கரம் நான்கில்
சீலம தோங்கிடக் கொண்டனை நீயே!
சிறந்தநற் கோல விழியுடைத் தாயே! (3)

எங்கணும் ஒளிவிடும் எரிகுழல் கொண்டாய்!
இரண்டெனும் கோரை எயிறினைப் பெற்றாய்!
தொங்கிய செந்நாச் சுழற்றிடும் அன்னாய்!
தோன்றிய பகைகள் தொலைத்திடும் தேவீ!
மங்கள சண்டி, முக் கண்ணீ, ஓம் காளீ!
மகிஷனின் மார்பிலே உதைத்திடும் காளீ!
பங்கயத் திருவடி பற்றினேன் தாயே!
பரிந்தருள் புரிந்திட விரைந்திடு வாயே! (4)

ஆங்கிரஸ் பிரதியங் கிரஸ்எனும் ரிஷிகள்
அற்புதம் சமைக்கும்உன் மந்திரம் கண்டார்!
பாங்குடை நிகும்பலை வேள்வியின் தலைவீ!
பன்னெடும் காலமும் கடந்திடும் காளீ!
ஓங்கிய வான்மழை மேக நிறத்தி!
உயரிய கருணையை வழங்கிடும் சக்தீ!
வீங்கிய நெஞ்சகத் திருள்களைந் தின்பம்
மேவிய வாழ்வினை நீதரு வாயே! (5)

வாயுவின் அம்சமாய் விளங்கிடும் உன்னை
வணங்கிய பேர்க்கெலாம் வளர்ந்திடும் இன்பம்!
போய்விடும் பற்றிய புற்குணம் எல்லாம்:
பொருதிய எதிரிகள் பொட்டென மாய்வர்!
மாயவன் அர்ச்சுன னவனிடம் சொன்னான்
''வாழ்த்திடு காளியைப் போர்வெல'' என்றே!
பாயுமோர் சிங்கநல் லியல்பினைக் கொண்டாய்!
பாபவி நாசினீ! பைரவி! சூலீ! (6)

மண்டிய பக்தியால் '-ஐம்'' என ஓதி
வணங்கிடு வார்க்கருள் சுரந்திடும் தேவீ!
கண்டெனும் '' ரீம்''அதை ஓதிய மாந்தர்
கவலைகள் போக்கிநல் வாழ்வினைச் சேர்ப்பாய்!
அண்டிய தீமைகள் யாவையும் தீர்ப்பாய்
அன்புடன் ''க்லீம்'' என ஓதிய யார்க்கும்!
எண்டிசை அரசுசெய் எண்குணக் காளீ!
என்றுமே மங்களம் தங்கிய தாயே! (7)

திதியெனும் அஷ்டமி அதனிலே உன்றன்
திருவடி தொழுதிட வருபவர்க் கென்றும்
விதிய்து குறையற விளங்கிடச் செய்து
வேண்டிய நன்மைகள் விருப்புடன் ஈவாய்!
கதியென உன்னையே கண்டுநெஞ் சாரக்
காலங்கள் யாவையும் கைகுவிக் கின்றேன்!
அதிசயம் கோடியென் றாக்கிடும் மாயே!
அவ்வொளி பெருகிட வழியமைப் பாயே! (8)


அன்புடன் உனைநிதம் நினைப்பவர்க் கெல்லாம்
அட்டமா சித்திகள் அளித்திடும் அன்னாய்!
இன்பமும் துன்பமும் இரண்டல ஒன்றே
எனுமொரு நிலையினை எனக்கருள் செய்வாய்!
உன்பெயர் தனையுரைத் துருகிடும் காலம்
ஒருநொடி ஆயினும் உயர்ந்தது தாயே!
என்பணி இனிஉனைத் தொழுதுளம் உருகி
இருவிழி வழிநீர் உருத்தழல் தானே! (9)

''ஓம்க்ஷும் பக்ஷ ஜ்வாலா ஜிஹ்பவ
கராள தம்ஷ்ட்ரே பிரதியங் கிரே
ஓம்க்ஷும் ஹ்ரீம் ஹும்பட் ஸ்வாஹா'' !
உனைநினைந் தரியஇம் மந்திரம் ஓதி
தீம்பழச் சாறினை மாந்திய மகிழ்வில்
திளைத்துநின் றனுதினம் வழுத்துகின் றேனே!
மேம்படு நிலையினை எய்துவேன் உன்றன்
மெல்லிய பூவடி நீழலில் யானே! (10)

———



பழநி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலுக்கு மத்திய உள்துறை இராசாங்க அமைச்சர் திரு. *பி. வேங்கட சுப்பையா* அவர்கள் வருகை தந்தபோது, திருமதி. டாக்டர் இராதா தியாகராஜன் முதலிய அறங்காவலர் பெருமக்களும், பிறரும் வரவேற்றல்



R. RAJU,
Dy Commissioner H.Qrs.
Retired
HR&CE Administration Dept

பெரியார் மாவட்டம் கோபிச்செட்டிப்பாளையம் பச்சைமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயில் ஆலயத்திற்கு, அறநிலைய ஆணையர் திரு. *யு. சுப்ரமணியன்*, ஐ.ஏ.எஸ். அவர்கள் வருகைதந்து, மகாமண்டபத்திற்கு அடிக்கல் நாட்டிச் சிறப்பித்தார்கள். திருப்பணிக்குழுத் தலைவர் திரு. பி. கே. குப்புசாமி கவுண்டர், முன்னாள் மத்திய அமைச்சர் திரு. கே. எஸ். இராமசாமி, அறங்காவலர் திரு. பி. கே. சண்முகம் ஆகியோர் உடனுள்ளனர்.



பெரியார் மாவட்டம் கோபிச்செட்டிப்பாளையம் பச்சைமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் வெளிப்பிராகாரச் சுற்று மண்டகத்திற்கு அறநிலைய அமைச்சர் மாண்புமிகு *இராம. வீரப்பன்* அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். அவ்விழாவில் தொழிலதிபர் பொள்ளாச்சி என். மகாலிங்கம், சட்ட மன்ற உறுப்பினர் திரு. கே. ஏ. செங்கோட்டையன், முன்னாள் மத்திய அமைச்சர் திரு. கே. எஸ். இராமசாமி, ஆணையர் திரு. யு. சுப்ரமணியன், ஐ.ஏ.எஸ்., பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வி. இலட்சுமிரதன், ஐ.ஏ.எஸ்., திருப்பணிக் குழுத் தலைவர் திரு. பி. கே. ஈசுவரன், திரு. பி. கே. காளியண்ணன் ஆகிய பெருமக்கள் பலர் உடனுள்ளனர்.



வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.